NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
WE OFFER SERVICES IN:
Real Estate
Corporate Law
Litigation
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

November 2017

# ஈகுருவி

ekuruvi.com

Bring your parents & Grandparents worry free!
SuperVisa. Today
416 321 6000
support@supervisa.today



# மாற்றம் ஒன்றே மாறாதது

## வர்த்தக சம்மேளனத்தின் முதலாவது பெண் தலைவர்

## சேர்ந்து பிரிதலும், பிரிந்து பின் சேர்தலும்!

## இடைக்கால அறிக்கையும் உள்ளூராட்சி சபைத் தேர்தலும்

## புதிய கூட்டணி: தொடர்ந்து துரத்திய பேரவை

Mortgage Alliance THE GUARDIAN
GET A TEAM OF EXPERIENCED PROFESSIONALS WORKING FOR YOU.
WE HAVE THE Right Mortgage for you!
Gini Annarasa
Mortgage Broker
Cell : (416) 830-3241
Tel : (416) 556-7002
Fax : (416) 556-5115
Cell : (416) 830-3241
80 Nashdene Rd, Unit D221-222, Toronto, ON M1V5K4
www.mortgageguardian.ca

DOVE SQUARE
PROPERTY MANAGEMENT INC.
www.dovesquare.ca
Integrity | Community | Commitment
416-335-DOVE (3683)
10 Milner Business Court, Suite 510, Toronto, ON. M1B 3C6

Ideal Auto Tech
For all your domestic and imported vehicle repairs and services
Oil Change $24.99 + tax
Conditions apply.
Tel: 416-752.LUBE(5823)
Fax: 416-752-0457

Century 21
Regal Realty Inc., Brokerage*
Jeyan Inpanayagam Comm.Eng
Sales Represntative
Direct: 416-877-3300
Tel: 416-291-0929
www.ihomeandcondo.com

GT Brokers
Protect You & Your Family
"JOIN OUR TEAM"
Get your industry licence at no cost...
Comprehensive skills training and mentoring
by over 30 yrs.Experienced industry legend
Free in class teaching
Guna Thuraisingham
416 528 1407

வீடு விற்க... வாங்க...
Ram Krishnamurthy
SALES REPRESENTATIVE
Direct 416-526-4996
ROYAL LEPAGE
IGNITE REALTY- BROKERAGE 795 Milner Ave. Toronto, ON M1B 3C3 | Off: 416-282-3333

ARE YOU FEELING PAIN?
WE CAN HELP!
PRO-LIFE WELLNESS CENTRE
OPEN 7 DAYS
PHYSIO
ORTHOTICS
CHIRO
WSIB
MASSAGE
CAR ACCIDENTS
AJAY THAVAM 416.704.8074
Call 416 357 2808
1-1221 Markham Rd Toronto
prolifewellnesscentre.com

We Make Your Water Clean & Clear
Thermo Care Heating & Cooling Inc.
416 825 9373 416 640 1174

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலைக்கோவில் மாணவி செல்வி அனிஷா நிமல்ராஜ் அவர்களின் அரங்கேற்றம்





அனிஷா நிமல்ராஜ், 14 ஆண்டுகளாக பரதக்கலையினை பயின்று தனது தந்தையாரின் குலதெய்வமான நயினை நாகபூசணி அம்மனின் சிறப்புகளை கருப்பொருளாக கொண்டு nov,10 2017 அன்று Chinese Cultural Centre மண்டபத்தில் அரங்கேற்றத்தினை நிகழ்த்தியிருந்தார். மிகவும் சிறப்பாக நடைபெற்ற இந்நிகழ்வு கலைக்கோவில் குழுமமும், வந்தவர்களும் மகிழ்ந்து வாழ்த்தி சென்றார்கள்.















படம்:
eகுருவி
ஜயா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ekuruvi.com
www.ekuruvi.com
Tel: 416-272-8543
Email: ekuruvi@gmail.com

## மாவீரர் நாள் 2017

முள்ளிவாய்க்கால் நினைவேந்தால் நாட்களும், மாவீரர் நினைவேந்தல் வாரமும் அண்மிக்கும் தருணங்கள் மிகவும் உணர்வுபூர்வமானவை. எல்லாவற்றையும் திரும்பி பார்த்து, அழுது புலம்பி அரற்றி ஆற்றாமையின் அழுத்தத்தினால் விழுந்து புரண்டு தட்டுத்தடுமாறி எழுந்து நிற்க வேண்டியிருக்கின்றது. இந்த நிலைக்கு, எம்மிடம் வழங்கப்பட்டுள்ள பொறுப்பினையும், அதுசார் தார்மீகத்தினையும் சரியாக நிறைவேற்ற முடியவில்லையே என்கிற குற்றவுணர்ச்சியே பிரதானமாக இருக்கின்றது. இடைநடுவில் நின்ற எமது பயணத்தினை சரியான பக்கங்களை நோக்கி நகர்த்தி கொண்டு செல்ல வேண்டிய அழுத்தமும் பெரியதாக இருக்கின்றது. அது, எம்மால் தூக்கிச் சுமக்க முடியாத பாரமாகவும் இருக்கின்றது.

மலர்கள் தூவி, தீபங்களை ஏற்றி, அஞ்சலிப் பதிவுகளை எழுதிவிட்டு எமது பொறுப்புக்கள் முடிந்துவிட்டதாக நினைத்து ஒவ்வொரு மாவீரர் தினத்தையும் கடந்து செல்லும் போது, எரிந்து கொண்டிருக்கும் தீபங்கள் எங்களை நோக்கி ஆயிரமாயிரம் கேள்விகளை எழும்புகின்றன. அந்தக் கேள்விகளை எதிர்கொள்ள முடியாமல் தீபங்களை திரும்பிப் பார்க்காமல் வேக வேகமாக நடந்து செல்ல வேண்டியிருக்கின்றது.

அதில், கடந்த சில வருடங்களாக பிரதானமாக எழும் கேள்விகளையாவது நாம் எதிர்கொள்ள வேண்டிய கடப்பாடு இப்போது உண்டு.

*மாவீரர்களாக வீழ்ந்துவிட்டவர்களின் ஆயிரமாயிரம் குடும்பங்கள் பேரழிவுக்குப் பின்னராக வாழ்வை எதிர்கொள்ள முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் வாழ்வை எவ்வாறு மீட்டெடுத்துக் கொடுக்கப் போகின்றோம்?

*முன்னாள் போராளிகள் வாழ்க்கையை முற்றாக தொலைத்துவிட்டு தேடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் வாழ்வில் ஒளியை ஏற்ற வேண்டிய பொறுப்பினை எப்போது நிறைவேற்றப் போகின்றோம்?

இந்த இரண்டு கேள்விகளையும் புறந்தள்ளிவிட்டு தீபங்களை ஏற்றுவதாலோ, அஞ்சலிக் கவிதைகளை வாசிப்பதாலோ எதுவும் மாறப் போவதில்லை. நாம் அரசியல் ரீதியாக எவ்வளவு விழிப்புணர்வுடன் முன்னோக்கி செல்ல வேண்டுமோ, அதனையும் தாண்டிய அர்ப்பணிப்புடன் எங்களின் கடப்பாடுகளை நிறைவேற்றியாக வேண்டும். அதனை செய்யாமல் எவ்வளவு தூரம் சென்றாலும், எம்மோடு 'தோற்றுப்போனவர்கள்' என்கிற அடையாளம் ஒட்டிக்கொண்டு வரும். அவ்வாறான நிலையை, மாவீரர்களாக உறங்கிக் கொண்டிருக்கும் உறவுகள் என்றைக்குமே எதிர்பார்க்கவில்லை. மாவீரர்களின் கனவுகளை கொண்டு சுமப்பது போலஞ் அவர்கள் விட்டுச் சென்ற பொறுப்புக்களையும் நிறைவேற்ற உறுதி பூணுவோம். அது, தமிழ் சமூகத்தைப் பீடித்துள்ள குற்றவுணர்ச்சியிலிருந்து மீட்பதற்கும் உதவும்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிர்களை அர்ப்பணித்து உறங்கிக் கொண்டிருக்கும் உறவுகளுக்கும், போராட்ட வாழ்வில் தமது உயிர்களை கொடுத்துவிட்ட பொதுமக்களுக்கும் அஞ்சலிகள்.

விடுதலை பற்றிய நம்பிக்கையை மனதில் ஏற்றி சாத்தியமான வழிகளில் இலக்கை அடைவதுதான், எமக்காக இழக்கப்பட்ட உயிர்களுக்கு நாம் செய்யும் பெரும் மரியாதையாக இருக்கும். அதற்கான முயற்சிகளை இதய சுத்தியுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்வோம்.

அத்தோடு, தியாகங்களின் மேல் ஏறி நின்று கூச்சலிடும் அரசியல் போலிகளை இனங்கண்டு புறந்தள்ளுவோம்!



## உள்ளே....

இடைக்கால அறிக்கையும் உள்ளூராட்சி சபை தேர்தலும் - நிலாந்தன்

சேர்ந்து பிரிதலும், பிரிந்து பின் சேர்தலும் !- ரமணன் சந்திரசேகரமூர்த்தி

அறம் - சினிமாவின் சமூக விமர்சனம்

கற்றொலொனியாவும் தமிழீழமும் - வரலாறு சொல்லும் பாடம் - இந்திரன் ரவீந்திரன்

நீங்க ஒவ்வொருத்தரும் நிச்சயமாக எங்கள்நாட்டிலுள்ள மக்களுக்கு ஒரு சின்ன உதவி எண்டாலும் செய்ய வேண்டும் - க.சிவமணி

...............மேலும் பல கட்டுரைகளுடன்

## மாற்றம் ஒன்றே மாறாதது

தமிழர்களின் வாழ்வில் தீர்வுகளைத் தராத ஒரு ஆண்டாக இந்த ஆண்டும் விடைபெறக் காத்திருக்கின்றது.

விடுதலைக் கனவினைச் சுமந்த வீரமறவர்களின் நினைவுகளை சுமக்கும் காரத்திகை மாதம் வழமை போலவே கடந்து கொண்டிருக்கின்றது.

நாங்கள் 'லக்ஸ்மி' பாரதி கண்ட புதுமைப் பெண்ணா அல்லது தமிழ் பண்பாட்டை கேள்விக்குட்படுத்தும் முயற்சியின் வெளிப்பாடா என சமூக வலைத்தள விவாதங்களை படித்தபடியும் பகிர்ந்தபடியும் நாளாந்த வாழ்வில் சிக்கல்களுக்குள் தொலைந்து போய்விடுகின்றோம்.

தனது 26 ஆண்டு கால வரலாற்றில் முதல் தடவையாக கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளனம டிலானி குணராஜா என்ற பெண்ணை தனது தலைமைக்கு தெரிவு செய்துள்ளது.

மாறி வரும் உலகப் போக்குகளில் பெண் தலைமைகளின் வகிபாகங்கள் சர்வதேச அரசியல் அரங்கு முதல் வர்த்தக சம்மேளனம் வரை முக்கியத்துவம் பெற்று நிற்கின்றது.

தாயகத்தில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிப்பும் அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த வேண்டிய புதிய திட்டங்கள் நோக்கிய தேடல்களும் தொடரும் நிலையிலும், தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் தொழில் துறையில் துரித முனேற்றமடையும் பெண்களை கொண்ட எமது சமூகம் அதன் வளர்ச்சியாக வர்த்தக சம்மேளனம் பெண் ஒருவரை தலைவராக தெரிவு செய்துள்ளமை தாயகம் நோக்கிய வர்த்தக சம்மேளனத்தின் பயணத்தை அர்த்தமுள்ளதாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் கடந்த காலங்களில் கற்றுக் கொண்ட பாடங்களில் இருந்து புதிய பயணங்களை திட்டமிடும் என்றே நாம் நம்புகின்றோம்.

கடந்த வருடம் புதிய வெளிச்சம் மூலம் பெண் தலைமைத்துவ குடும்பங்களை வலுவூட்டவும் அவர்களின் தேவைகளை அடையாளம் காணவும் மேற்கொண்ட முயற்சிகளின் மூலமாக புலம்பெயர் தேசத்தின் ஒத்துழைப்புகள் நிரந்தர வாழ்வாதார திட்டங்களை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை வெளிக்காட்டியிருந்தன.

தாயகத்தில் வாழும் மக்களுக்கான பொருளாதார ஒத்துழைப்புகள் தற்காலிக நிவாரணங்களாகவும் அவர்களை நிரந்தரமாக மற்றவர்களின் தங்கி வாழும் மக்கள் கூட்டமாக மாற்றும் அபாயம் நிறைந்தவையாக அமைந்து விடும் என்பதையும் அறிய முடிந்தது.

எனவே தான் புலம்பெயர் சமூகத்தின் ஒத்துழைப்புகள் அங்கு புதிய தொழில முயற்சிகளை உருவாக்கும் நோக்கம் கொண்டவையாகவும் அதன் மூலாக தொழில்வாய்புகளை ஏற்படுத்தி அங்குள்ள மக்களை பொருளாதார பலம் கொண்டவர்களாக உருவாக்கும் வல்லமை கொண்டதாகவும் அமைய வேண்டும்.

எங்களுக்கு தற்போது இருக்கும் இந்த ஓய்வு நிலை, தற்காலிகமானது, இதையே சிலர் நல்லாட்சி என்றும், சுதந்திரம் என்றும் தமது எதிர்பார்ப்புக்கு அமைய அழைக்கின்றார்கள்

அதேசமயம் புலம்பெயர் சமூகத்தை தமது மாயவலைக்குள் சிக்கவைப்பதன் மூலம் சர்வதேச நெருக்குவாரங்களை தவிர்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் நகர்வுகளை புலம்பெயர் சமூகம் கவனமாக கையாள வேண்டிய காலம் இது.

இலங்கை அரசாங்கத்தின் நிகழ்சி நிரலை புலம்பெயர் தேசத்தில் காட்சிப்படுத்தவும் அதன் மூலமாக புலம்பெயர் சமூகத்தையும் ஒட்டுமொத்த தமிழினத்தையும் ஆபத்தான பள்ளத்தில் தள்ளுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளையும் நாம் இனம் கண்டு கொள்ள வேண்டியதும் அவசியமாகின்றது.

- நவஜீவன் அனந்தராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனேடிய அரசுக்கு தமிழ் அமைப்புகளின் கூட்டான விண்ணப்பம்

## இழைக்கப்பட்ட சர்வதேச யுத்தக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை வலியுறுத்தி




நவம்பர் 14—15 ம் திகதிகளில் வான்கூவரில் நடைபெற இருக்கும் ஐ.நா. அமைதி பேண் பாதுகாப்பு அமைச்சர்களுக்கான மாநாடு குறித்த கனடிய மற்றும் சர்வதேச தமிழ் அமைப்புக்களின் கூட்டுக்குழுவின் செய்தியாளருடனான சந்திப்பொன்று கடந்த 08/11/2017 அன்று ஒட்டாவா பாராளுமன்றத்தின் ஊடக கூடத்தில் இடம் பெற்றது.

இதைத் தொடர்ந்து, சிறீ லங்காவினால் இழைக்கப்படட சர்வதேச சட்ட மீறல் விடயங்களை முன்னிலைப்படுத்தவும் மற்றும் கனடிய அரசின் துரித செயற்பாட்டை வலியுறுத்தியும் அமைச்சர் ரால்ப் கூடேல் மற்றும் நீதி அமைச்சர் ஜோடி வில்சன்— றேபோ ஆகியோருக்கு இக் கூட்டுக்குழு எழுதிய கடிதத்தில் கனடிய அரசு இது குறித்து உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்பு சட்டத்தின் 35(1) ம் பிரிவின் பிரகாரம் வான்கூவர் மாநாட்டில் சிறீ லங்கா படை அதிகாரிகள் கலந்து கொள்வதைத் தவிர்க்குமுகமாக அவர்களுக்கு கனடிய நுழைவு அனுமதி மறுக்கப்பட வேண்டும் என அமைச்சர் கூடேல் அவர்களுக்கு இக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. அதே வேளை மனித குலத்திற்கெதிரான குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் சடடத்தின் பிரகாரம் உடனடியாக விசாரணைகள் தொடங்கப்படவேண்டும் என அமைச்சர் வில்சன் றேய்போ விடமும் இக் குழு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இக் கூட்டுக்குழுவில் பத்து கனடிய மற்றும் சர்வதேச தமிழ் அமைப்புக்கள் அங்கம் வகிக்கின்றன.

பிரபல கனடிய சட்ட நிறுவனமான நவா—வில்சன் ஏல்.எல்.பி. இத் தமிழ் அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் எனவும் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

செய்தி அறிக்கை கீழே இணைக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 8, 2017

2017 ஐக்கிய நாடுகள் அமைதிபேண் பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டில் சிறீ லங்கா பாதுகாப்பு படை அதிகாரிகள் பங்கு கொள்வதைத் தடுப்பதற்காகவும் இழைக்கப்பட்ட சர்வதேச யுத்தக் குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை வலியுறுத்தலுதற்கானதுமான செய்தியாளர் மாநாடு, ஒட்டாவா, ஒன்ராறியோ

கனடிய மற்றும் சர்வதேச பல்வேறு அமைப்புக்களின் கூட்டுக்குழு இன்று பி.ப. 1:30 மணிக்கு ஒட்டவா பாராளுமன்றத்தின் ஊடக கூடத்தில் சந்திப்பொன்றை நிகழ்த்தவுள்ளது. சிறீ லங்கா அரசு சர்வதேச சட்டங்களை மீறியிருப்பதை எடுத்துக்காட்டி அதன் மூலம், நவம்பர் 14, 15, 2017 அன்று வான்கூவரில் நடைபெறவிருக்கும் ஐ.நா. அமைதி பேண் பாதுகாப்பு அமைச்சர்கள் மாநாட்டில் (UN Peacekeeping Defence Ministerial Conference) கனடிய அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவது இக்குழுவின் பிரதான நோக்கமாகும். இது குறித்து அமைச்சர் ரால்ப் கூடேல் மற்றும் நீதி அமைச்சர் ஜோடி வில்சன்—றேபோ ஆகிய இருவருக்கும் இக் குழு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்பு சட்ட பிரிவு 35 (1) இன் கீழ், சிறீ லங்காவின் ஆயுதப்படைகளின் மூத்த அதிகாரிகள் கனடாவுக்குள் நுழைவதைத் தடை செய்யவதற்காக அவர்களுக்கு நுழைவு அனுமதி மறுக்கப்பட வேண்டும் என அமைச்சர் கூடேல் அவர்களிடமும் அதே வேளை, இழைக்கப்பட்ட யுத்தக் குற்றங்கள் மற்றும், இனப்படுகொலை விவகாரங்களில் ஈடுபட்ட காரணங் களுக்காக மனுக்குலத்திற்கு எதிரான குற்றங்கள், யுத்தக்குற்றங்கள் சட்டத்தின் பிரகாரம் விசாரணைகள் செய்யப்பட வேண்டும் என நீதி அமைச்சர் ஜோடி வில்சன்—றேபோ அவர்களிடமும் கடித்த மூலம் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

"சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டத்தை மீறியதற்காக சிறீ லங்காவின் ஆயுதப்படைகளுக் கெதிராக கண்டனத்துக்குரிய குற்றச் சாட்டுக்கள் உள்ளன. விமானத்திலிருந்து குண்டுகளை மருத்துவமனைகள், பறப்பு தடுக்கப்பட்ட பகுதிகள், அப்பாவி குடிமக்கள் மீது வீசியதுடன், கற்பனை செய்து பார்க்க முடியாத பல ஈனச் செயல்களை தமது சொந்த மக்களுக்கு எதிராக செய்ததற்கான குற்றச்சாட்டுகளும் ஸ்ரீலங்காவின் ஆயுதப்படையினர்மீது சுமத்தப்பட்டுள்ளன. அவர்களின் இந்த சர்வதேச சட்ட மீறல்களைக் கண்ணால் கண்ட சாட்சியங்களாக கனடாவில் இன்று எம்மோடு வாழ்ந்து வரும் பலரும், சிறீலங்காவின் ஆயுதப்படை அங்கத்தவர்கள் கனடிய மண்ணைச் சுதந்திரமாக மிதிப்பதையிட்டு அதிர்ச்சியடைந்துள்ளனர். சிறீ லங்காவின் ஆயுதப்படையினர் குடிமக்கள் நிலங்களை தொடர்ந்தும் ஆக்கிரமித்து வருகின்றனர் . தமிழ் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் மற்றும் பாலியல் குற்றங்களும் அவர்களால் தொடரப்படுகின்றன. இந்த உரிமை மீறல்களுக்கு பெருமளவிலான சான்றுகள் இருந்தபோதிலும், இலங்கை அரசாங்கத்தினுள்ளேயிருக்கும் தப்பிக்கவிடும் கலாச்சாரம் சிறீ லங்காவின் ஆயுதப்படையினரைச் சட்டப்பூர்வமாகப் பாதுகாத்தும் வருகின்றது." என்கிறார் இக் கூட்டுக்குழுவின் ஆலோசகரும், நவா—வில்சன் எல்.எல்.பி. சட்ட நிறுவனத்தின் மூத்த பங்குதாரருமான திருமதி மல்லிகா வில்சன்.

இக்குற்றச்சாட்டுக்களுக்கு வலுச் சேர்ப்பதுபோல ஐ.நா. அமைதி காப்பாளர்களாக ஹெய்ட்டிக்குச் சென்றிருந்த சிறீ லங்கா ஆயுதப்படையினர் அங்கு அடக்குமுறை மற்றும் பாலியல் வன்முறைகளில் ஈடுபட்ட சம்பவம் அமைகிறது. ஐ.நா. அமைதிகாப்பாளர்களாக பணியாற்ற சென்றிருந்த சிறீ லங்காவின் ஆயுதப்படையினர் அங்கு குழந்தைகளை பாலியல் பலாத்காரம் செய்யும் குழுக்களை நடத்தியதாகவும், ஹெய்ட்டிய பெண்களையும், குழந்தைகளையும்பாலியல்வன்முறைக்கு உள்ளாக்கியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். 2004 முதல் 2007 வரையான காலப்பகுதியில், பாலியல் வலோத்காரக் குற்றங்களுக்காகவும், ஒன்பது சிறுவர்கள்மீது பாலியல் குற்றங்கள் புரிந்ததற்கும், ஐ.நா. அமைதிகாப்பாளர்களாக பணியாற்றிக்கொண்டிருந்தவர்களில் குறைந்தபட்சம் 134 சிறீலங்காவின் ஆயுதப்படையினர்மீது குற்றம் சாட்டப்பட்டதாக அசோசியேட்டட் பிரஸ் கூறுகிறது. குற்றங்கள் வெளிக்கொணரப்பட்டபின் 114 ஸ்ரீலங்கா ஆயுதப்படையினர் நாட்டுக்குத் திருப்பியனுப்பப்பட்டபோதும், அவர்களில் எவர் மீதும் சிறீலங்கா நடவடிக்கை எடுக்கவில்லை, இதுகுறித்து அட்வொகேட் இண்டரநாஷனல் பணியகத்தில் பணியாற்றும் ஹெய்ட்டிய வழக்குரைஞரான மரியோ ஜோசப் "துயரத்திற்குப் பின் துயரத்தை சந்தித்து அதைச் சகித்தவாறிருக்கும் ஒரு நாட்டில் நன்மைக்கு பதிலாக தீமையல்லாவா ஐ.நா. செய்திருக்கிறது" என்று தன் வேதனை உணர்வுகளைப் பகிர்ந்திருக்கிறார்.

முடிவாக, "நாடுகள் தங்கள் சொந்தக் குடிமக்களைக் கொல்லும் வரலாறு மீண்டும் மீண்டும் தொடர்வதை நாம் காண்கிறோம். சிறீலங்கா, சிரியா, மியன்மார் என அண்மையில் சர்வதேச சட்டத்தினை ஒட்டுமொத்தமாகவும், முறைகேடாகவும் மீறும் போக்கானது, கனடா போன்ற நாடுகள் உறுதியானதொரு நிலைப்பாட்டை எடுத்து நின்று காட்டாவிட்டால் மேலும் மேலும் தொடரும். ஆகவே கனடாவில் சிறீ லங்கவின் பொறுப்புக்கூறலுக்கான ஒரு புதிய பிரச்சாரத்தை இன்று ஆரம்பிக்கிறோம்" என திருமதி மல்லிகா வில்சன் தெரிவித்திருக்கிறார்.

**கூட்டுக்குழுவிலிருக்கும் அமைப்புக்கள்:**

கனடிய அமைப்புக்கள்:

கனடியத் தமிழர் பேரவை (Canadian Tamil Congress)

Centre for War Victims and Human Rights

கனடியத் தமிழர் தேசிய அவை (National Council of Canadian Tamils)

Quebec Tamil Development Association

கனடிய தமிழர் சமூக அமைய ம் (Tamil Canadians Civil Society Forum)

சர்வதேச அமைப்புக்கள்:

Australian Tamil Congress

British Tamils Forum

People for Equality and Relief in Lanka

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் (Transnational Government of Tamil Eelam)

United States Tamil Political Action Council

By their Counsel: Nava Wilson LLP

For more information:

Kubes Navaratnam – Managing Partner

Nava Wilson LLP



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#1 RE/MAX Outstanding Agent *for* Outstanding Results.

# FOR SALE




Bedrooms:1+1/ Washrooms:1
Toronto




Bedrooms:3/ Washrooms:1
Toronto




Bedrooms:1+1/ Washrooms:2
Markham




Bedrooms:4+1/ Washrooms:5
Markham




Bedrooms:2 / Washrooms:2
Toronto




Bedrooms:4+1/ Washrooms:4
Richmond Hill




Bedrooms:4/ Washrooms:4
Ajax




Bedrooms:4+2 / Washrooms:6
Toronto



RE/MAX® Excel Realty Ltd., Brokerage*
Bus: 905.475.4750 Fax: 905.475.4770
50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3
*Independenlty Owned And Operated
*Not intended to solicit Sellers or Buyers currently under written contract with another Realtor.*

**Raj Nadarajah**
Sales Representative
**Dir: 416.333.6115**
nanohomes@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைக்கால அறிக்கையும் உள்ளூராட்சி சபைத் தேர்தலும்




இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் இதுவரை எழுதப்பட்ட உடன்படிக்கைகளில் ஒப்பீட்டளவில் நீண்ட ஆயுளைக் கொண்டவை இரண்டு. ஒன்று இந்திய — இலங்கை உடன்படிக்கை, மற்றது ரணில் — பிரபா உடன்படிக்கை. இவ்விரண்டு உடன்படிக்கைகள் தவிர ஏனைய எல்லா உடன்படிக்கைகளும் எழுதப்பட்ட சிறிது காலத்திலேயே கைவிடப்பட்டவைதான். இவ்விரு உடன்படிக்கைகளும் ஆயுதப் போராட்டத்தின் நேரடி விளைவுகள்தான்.

அது மட்டுமல்ல. இவ்விரு உடன்படிக்கைகளுக்கும் ஒரு மூன்றாந்தரப்பின் மத்தியஸ்தம் இருந்தது. அது அம் மூன்றாந்தரப்பானது அவ் உடன்படிக்கைகளைக் கண்காணிப்பதற்கு ஒரு பொறிமுறையை ஏற்படுத்தியிருந்தது. இந்திய இலங்கை உடன்படிக்கையை அமுல்படுத்துவதற்கு இந்திய அமைதி காக்கும் படை இலங்கைக்குள் இறக்கப்பட்டது. ரணில் — பிரபா உடன்படிக்கையைக் கண்காணிப்பதற்கு ஸ்கன்டினேவிய யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு இறக்கப்பட்டது. இவ்விரண்டு உடன்படிக்கைகளுக்கூடாகவும் இவை தவிர எழுதப்பட்டு பின் கிழிக்கப்பட்ட உடன்படிக்கைகளுக்கூடாகவும் நாம் ஒரு முடிவிற்கு வரலாம். அதாவது தமிழ்த்தரப்பில் வன்சக்தி வலிமையாக இருந்த ஒரு கால கட்டத்தில்தான் நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடிய; உடன்படிக்கைகளை செய்ய முடிந்தது. இரண்டாவது ஒரு மூன்றாந்தரப்பின் பிரசன்னம் இருக்கும் போது தான் உடன்படிக்கைகள் ஒப்பீட்டளவில் அதிக காலம் உயிர் வாழ்கின்றன. மேற்கண்ட முடிவுகளின் பின்னணியில் வைத்து இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் யாப்புருவாக்க முயற்சிகளைப் பார்க்கலாம்.

தமிழ் மக்கள் பேரவை அதன் தீர்வு முன்மொழிவில் சுட்டிக்காட்டியிருப்பதைப் போல ஒரு மூன்றாந்தரப்பின் மத்திஸ்தத்தோடு சமாதான உடன்படிக்கை எதுவும் எழுதப்படாத ஒரு வெற்றிடத்தில் தான் இனப்பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய ஒரு புதிய யாப்பு உருவாக்கப்பட்டு வருகிறது. அதாவது மோதலில் ஈடுபட்ட தரப்புக்களிடையே சமாதான உடன்படிக்கை எதுவும் எழுதப்படவில்லை. பொறுப்புக் கூறும் மூன்றாந்தரப்பு எதுவும் மேற்படி யாப்புருவாக்கச் செயற்பாடுகளை கண்காணிக்கவுமில்லை. மாறாக கடந்த மூன்றாண்டுகளாக என்ன நடக்கிறது என்றால் இனப்பிரச்சினைக்கான தீர்வு எனப்படுவது யாப்புருவாக்க நோக்கங்களில் ஒன்றாக சுருக்கப்பட்டு விட்டது. யாப்புருவாக்கச் செயற்பாடு எனப்படுவது நிலைமாறுகால நீதியை ஸ்தாபிப்பதற்காக அரசாங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட 25 பொறுப்புக்களில் ஒன்றாகச் சுருக்கப்பட்டு விட்டது. நிலைமாறு கால நீதி எனப்படுவது ரணில் — மைத்திரி அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஐ.நாவுக்காக பொய்யிற்குச் செய்யப்படும் ஒரு வீட்டு வேலையாகச் சுருங்கி விட்டது. அதாவது பொழிவாகச் சொன்னால் இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு எனப்படுவது ஐ.நாவிற்காக கண்துடைப்பாகச் செய்யப்படும் ஒரு வீட்டு வேலையாகச் சுருக்கப்பட்டு விட்டது. இவ்வாறு சுருக்கப்பட்டதன் விளைவாக இனப்பிரச்சினைக்கான தீர்வில் தமிழ் மக்களின் கூட்டுரிமைகள் பாதுகாக்கப்படுகின்றனவா? இல்லையா? என்பதனைக் கண்காணிப்பதற்கு ஒரு மூன்றாந்தரப்பின் பொறுப்பிலிருக்கும் பொருத்தமான பொறிமுறை எதுவும் உருவாக்கப்படவில்லை. இவ்வாறான ஒரு பின்னணிக்குள் உருவாக்கப்பட்டு வரும் புதிய யாப்பிற்குரிய இடைக்கால அறிக்கையே அண்மையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டிருப்பதைப் போல மூன்றாந்தரப்பின் மத்தியஸ்தமோ ஒரு கண்காணிப்புப் பொறிமுறையோ இல்லாத தீர்வு முயற்சிகளின் முதற்கட்ட விளைவே மேற்படி இடைக்கால அறிக்கையாகும். இலங்கைத் தீவில் ஒப்பீட்டளவில் நீண்ட ஆயுளைக் கொண்ட இரண்டு சமாதான உடன்படிக்கைளும் போர்க்களத்தில் பெறப்பட்ட வலுச்சமநிலைகளின் மீது எழுதப்பட்டவைகள்தான். எனவே அங்கு பரஸ்பரம் பேரம் இருந்தது.

ஆனால் இப்பொழுது நிகழ்ந்து கொண்டிருக்கும் யாப்புருவாக்க முயற்சிகள் அவ்வாறான வலுச்சமநிலைகளின் மீது கட்டியெழுப்பப்படவில்லை. 2009 மேக்குப் பின் இலங்கைத்தீவின் வலுச்சமநிலையானது பெருமளவிற்கு அரசாங்கத்திற்கு சாதகமாக மாறியது. அதன்பின் 2015 ஜனவரி மாதம் ஆட்சி மாற்றம் வரையிலும் இலங்கைத் தீவில் வென்றவர்களுக்கும், தோற்றவர்களுக்கும் இடையிலான ஒரு வலுச்சமநிலையே நிலவியது. ஆனால் ஆட்சி மாற்றத்தில் தமிழ் மக்கள் பங்காளிகளான போது வலுச்சமநிலை மாறத் தொடங்கியது. அப்பொழுது கூட்டமைப்பானது ரணில் — மைத்திரி — சந்திரிக்காவோடு ஒரு பேரத்தை வைத்திருந்திருக்க வேண்டும். அமெரிக்காவோடும் இந்தியாவோடும் ஒரு பேரத்தை வைத்திருந்திருக்க வேண்டும்.

ஆனால் அப்படிப்பட்ட பேரம் எதையும் செய்யாமலேயே ஆட்சி மாற்றத்திற்கு கூட்டமைப்பு பங்களிப்பை வழங்கியது. வலுச்சமநிலை மாற்றத்தின் பொழுது பங்காளிகள் தமது பேரத்தை பாதுகாத்துக் கொள்வதே ஓர் உலகப் பொது வழமை. ஆனால் கூட்டமைப்பனாது தனது பேரத்தைத் தக்க வைத்துக் கொள்ளத் தவறிவிட்டது. இது காரணமாக ஆட்சி மாற்றத்திற்கு முன்பு இருந்த அதே வலுச்சமநிலைதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தும் நீடித்து வருகிறதா? என்று கேட்கத்தக்க விதத்தில் தான் கடந்த மூன்றாண்டுகளாக தமிழ் மக்களின் அரசியல் அந்தஸ்து காணப்படுகிறது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரம், காணி மீட்பு பற்றிய விவகாரம் அரசியல் கைதிகளின் விவகாரம், பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படாமை போன்ற பல விடயங்களிலும் தமிழ் மக்களின் அரசியல் அந்தஸ்து மிகக் கீழ் நிலையிலேயே காணப்படுகிறது. பேரம் செய்யப்பட வேண்டிய ஒரு காலகட்டத்தில் அதைத் தவற விட்டதன் விளைவைத்தான் இடைக்கால அறிக்கை பிரதிபலிக்கின்றது. இடைக்கால அறிக்கை சாசனப் பேரவையில் முன்வைக்கப்பட்ட பின் நிகழ்ந்த விவாதங்களை தொகுத்துப் பார்த்தால் தமிழ் மக்களின் பேரம் எங்கே நிற்கின்றது என்பது தெரிய வரும்.

இவ்விவாதங்களின் போது சிங்களத் தலைவர்கள் என்ன பேசினார்கள் என்பதை சற்று உற்றுப் பார்க்கலாம்.

'விகாரைகளை அமைத்து பௌத்தம் வளர்த்த நாம் சிங்களத்தை அழிப்பதற்கு முற்படுவோமா' என்று ரணில் விக்கிரமசிங்க கேட்கிறார்.

ஒற்றையாட்சியையும் பௌத்தத்தின் முதன்மையை ஏற்றுக்கொண்ட சம்பந்தரைப் போன்ற ஒரு தலைவர் இனிக் கிடைக்க மாட்டார் என்று டிலான் பெரேரா கூறுகிறார்.

முன்னைய யாப்புக்களில் இருந்ததை விடவும் உத்தேச யாப்பில் ஒற்றையாட்சி மேலும் பலப்படுத்தப்பட்டிருக்கிறது என்று ஜெயம்பதி விக்கிரமரட்ண கூறுகிறார். உத்தேச யாப்பு இறைமையைப் பலப்படுத்துகிறது என்று அவர் கூறுகிறார். இனி இலங்கையைப் பிரிக்கவே முடியாது என்று அவர் கூறுகிறார். அதாவது பிரிந்து போவதற்கான சுயநிர்ணய உரிமை இனித் தமிழர்களுக்குக் கிடையாது என்று அர்த்தம்.

ராஜித, டிலான் பெரேரா, மங்கள சமரவீர போன்ற அரச பிரதானிகள் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் மகிந்த அணியை நோக்கி ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்கிறார்கள். சந்திரிக்காவின் காலத்தில் அவர் முன்வைத்த பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற தீர்வை ஏற்றுக் கொண்ட நீங்கள் இப்பொழுது ஏன் அத்தீர்வை விடவும் நீர்த்துப் போன ஒரு தீர்வை எதிர்த்து வருகிறீர்கள் என்று அவர்கள் கேட்கிறார்கள்.

உத்தேச யாப்பை எதிர்த்து வரும் டளஸ் அழகப்பெரும போன்றவர்கள் சந்திரிக்காவின் காலத்தில் பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற தீர்விற்காக கிராமங்கள் தோறும் சென்று பரப்புரை செய்ததை மங்கள சமரவீர தனது உரையில் சுட்டிக் காட்டினார்.

அதாவது சந்திரிக்காவின் பிராந்தியங்களின் ஒன்றியத்தை விடவும் பலவீனமான ஒரு தீர்வே உத்தேச அரசியலமைப்பில் முன்வைக்கப்படுகிறது என்று அவர்கள் கூற முயல்கிறார்கள். அதுதான் உண்மையும். பிராந்தியங்களின் ஒன்றியம் என்பது கொள்கையளவில் சமஷ்டிக்கு ஒப்பீட்டளவில் கிட்ட வருகிறது. ஆனாலும் அது சமஷ்டியல்ல. அதே சமயம் உத்தேசத் தீர்வுத்திட்டமானது ஒப்பீட்டளவில் கூட்டாட்சிக்கு வெகு தொலைவில் நிற்கிறது. இப்படிப்பட்ட ஐதாக்கப்பட்ட ஒரு தீர்வை ஏன் எதிர்க்கிறீர்கள் என்று மைத்திரி அணி மகிந்த அணியை நோக்கிக் கேட்கிறது.

எனவே மேற்கண்ட அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் ஒரு குரூரமான உண்மை வெளித்தெரிகிறது. அரச தரப்பினர் மகிந்த அணியையும், சிங்கள மக்களையும் திருப்திப்படுத்த முயல்கிறார்கள். அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் விதத்தில் உத்தேசத் தீர்வுப் பொதிக்குள் எதுவும் இல்லை என்பதை அவர்களுக்கு உணர்த்த முற்படுகிறார்கள்.

அதே சமயம் அரசாங்கத்தின் பங்காளிகளாகக் காணப்படும் முஸ்லீம் தலைவர்கள் வடக்கு — கிழக்கு இணைப்பிற்கு எதிராகக் கடுமையான கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார்கள். வடக்கு — கிழக்கை இணைப்பதற்கு அவர்கள் சம்மதிக்கப் போவதில்லை என்பதை அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள். இப்படிப் பார்த்தால் டிலான் பெரேரா கூறுவது போல சம்பந்தரும், சுமந்திரனும் ஆகக் கூடிய மட்டும் வளைந்து கொடுத்து ஒரு தீர்வைக் கண்டடைவதற்குத் தயாராகக் காணப்படுகிறார்கள் என்பதைத்தான் இடைக்கால அறிக்கை மீதான விவாதங்கள் வெளிப்படுத்தியுள்ளன.



சுமந்திரன் தனது உரையில் வழமையை விட துலக்கமாக சில விடயங்களை சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆனால் அதே அவையில் ரணில் விக்கிரமசிங்க கூட்டாட்சிக்கு எதிரான தனது கருத்துக்களை மிகவும் துலக்கமாக வெளிப்படுத்தியிருக்கிறார். அதே சமயம் கூட்டமைப்பிற்குள் ஒரு கலகக் குரலாகக் காணப்படும் சிவசக்தி ஆனந்தனை சம்பந்தரும், சுமந்திரனும் பேச விடாது தடுத்திருக்கிறார்கள். அதாவது உத்தேச யாப்பிற்கு எதிராக ஒரு வலிமையான குரல் தமிழ்த் தரப்பிலிருந்து நாடாளுமன்றத்தில் ஒலித்துவிடக் கூடாது என்பதில் அவர்கள் மிகவும் முன்னெச்சரிக்கையோடு காணப்பட்டிருக்கிறார்கள்.

**உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடந்தால், தமிழ்ப் பகுதிகளில் அது தமிழரசுக் கட்சிக்கு ஏறக்குறைய ஒரு கருத்துக் கணிப்பாகவே அமையும். இடைக்கால அறிக்கையைக் கொண்டு வந்த தமிழரசுக் கட்சியானது அதற்காக செய்திருக்கும் விட்டுக் கொடுப்புக்களை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? இல்லையா? என்பதை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தும்.**

இப்படியாக தமிழ்த் தலைவர்கள் நாடாளுமன்றத்தில் தமது எதிர்ப்புக்களை கூர்மையான விதங்களில் வெளிக்காட்டாமல் பம்மிக்கொண்டிருக்க அரச பிரதானிகளோ சிங்கள மக்களுக்கும், இனவாதிகளுக்கும் நம்பிக்கையூட்டும் விதத்தில் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

பொதுவாக யாப்புருவாக்கம் தொடர்பான துறைசார் நிபுணர்களின் கருத்துப்படி யாப்புருவாக்கப் பொறிமுறைகளின் போது பெரும்பான்மை வாதத்தை எச்சரிக்கையுணர்வோடேயே அணுகுவதுண்டு. பெரும்பான்மையினரின் கவலைகளையும், அவர்களுடைய பயங்களையும், அநாவசியான முற்கற்பிதங்களையும் பெரிது படுத்தினால் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் விதத்தில் ஒரு யாப்பை எழுத முடியாது என்பது துறைசார் நிபுணர்களின் பொதுக் கருத்தாகும்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின் உலகில் தோன்றியுள்ள புதிய சிறிய நாடுகளின் உருவாக்கத்தின் போது குறிப்பாக அவற்றின் யாப்புருவாக்கத்தின் போது பெரும்பான்மை வாதம் எனப்படுவது மிகவும் எச்சரிக்கை உணர்வோடையே அணுகப்பட்டது. கிட்டத்தட்ட கடந்த மூன்று தசாப்தகால உலக அனுபவம் அப்படித்தான் காணப்படுகிறது. அதாவது பெரிய மீனின் பயமும், சின்ன மீனின் பயமும் ஒன்றல்ல. இரண்டையும் ஒரே தராசில் வைத்து நிறுத்து ஒரு யாப்பை எழுத முடியாது என்பதே யாப்புருவாக்க நிபுணர்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும்.

இப்படிப் பார்த்தால் ஒரு புதிய யாப்பை எழுதும் பொழுது சிறுபான்மை மக்களின் அச்சங்களையும், காயங்களையும், மனவடுக்களையும், முற்கற்பிதங்களையும் நீக்கும் விதத்தில்தான் யாப்புருவாக்க பொறிமுறை அமைய வேண்டும்.

இலங்கைத் தீவைப் பொறுத்தவரை சிறுபான்மை மக்களாகவும், தோற்கடிக்கப்பட்ட தரப்பாகவும் கூட்டுக் காயங்களோடும், கூட்டு மனவடுக்குகளோடும் கிடந்து அழுந்தும் ஒரு மக்கள் கூட்டமாகவும் காணப்படும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் விதத்தில் யார் கதைக்கிறார்கள்? சாசனப் பேரவையாக மாற்றப்பட்ட நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்திய எல்லாச் அரசுப் பிரதானிகளும் பெரும்பான்மை மக்களின் பயங்களைப் போக்கவே விளைகிறார்கள். அவர்களுக்கு நம்பிக்கையூட்டவே விழைகிறார்கள்.

மாறாக வீதியோரங்களில் மழைக்குள்ளிருந்து போராடும் மக்களுக்கு நம்பிக்கையூட்ட அவர்களில் ஒருவரும் தயாரில்லை. அந்த மக்களின் அச்சங்களைப் போக்கும் விதத்தில்

**இலங்கைத் தீவைப் பொறுத்தவரை சிறுபான்மை மக்களாகவும், தோற்கடிக்கப்பட்ட தரப்பாகவும் கூட்டுக் காயங்களோடும், கூட்டு மனவடுக்குகளோடும் கிடந்து அழுந்தும் ஒரு மக்கள் கூட்டமாகவும் காணப்படும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் விதத்தில் யார் கதைக்கிறார்கள்?**

குறைந்த பட்சம் வாக்குறுதிகளை வழங்குவதற்குக் கூட ஒரு சிங்களத் தலைவரும் தயாரில்லை. இறந்த காலத்தில் இடம்பெற்றவைகளுக்காக குறைந்த பட்சம்; ஒரு நாகரீகத்திற்காகவாவது மன்னிப்புக் கேட்க ஒரு சிங்களத் தலைவரும் தயாரில்லை. அவர்கள் எல்லாருமே தமக்கு வாக்களித்த மக்களுக்கு விசுவாசமாகக் காணப்படுகிறார்கள். ஆனால் தமிழ்த்தலைவர்கள்?

இத்தகையதோர் துர்ப்பாக்கியமான அரசியற் சூழலில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடக்கக்கூடும் என்ற ஊகங்கள் அதிகரித்துள்ளன.

இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் தேர்தல் நடக்குமா? இல்லையா? என்பதை உறுதியாகக் கூற முடியவில்லை.

அப்படி ஒரு தேர்தல் நடந்தால் அது தென்னிலங்கையில் மகிந்தவும் மைத்திரியும் மேலும் எவ்வளவு ஆழமாக சிறீலங்கா சுதந்திரக்கட்சியை உடைக்கப் போகிறார்கள் என்பதில்தான் முடிவுகள் தங்கியிக்கின்றன. சிறீலங்கா சுதந்திரக்கட்சி மேலும் ஆழமாகப் பிளவுறுமாக இருந்தால் அது ஐக்கியத் தேசியக்கட்சிக்கு சாதகமாக அமையக்கூடும்.

அதே சமயம் தமிழ்ப் பகுதிகளில் அது தமிழரசுக் கட்சிக்கு ஏறக்குறைய ஒரு கருத்துக் கணிப்பாகவே அமையும். இடைக்கால அறிக்கையைக் கொண்டு வந்த தமிழரசுக் கட்சியானது அதற்காக செய்திருக்கும் விட்டுக் கொடுப்புக்களை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? இல்லையா? என்பதை தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தும்.

இப்படிப் பார்த்தால் இடைக்கால அறிக்கை மீதான மக்கள் கருத்தறியும் வாக்காக அது அமையும். டிலான் பேரேரா கூறியது போல சிங்கள மக்களுக்குக் கிடைத்திருக்கும் கடைசித் தலைவர் சம்பந்தரா? இல்லையா? என்பதை தமிழ் மக்கள் தீர்மானிக்கப் போகும் ஒரு தேர்தலாக அது அமையக்கூடும்.

அத் தேர்தலில் தமிழரசுக் கட்சி வெற்றி பெற்றால் அது இடைக்கால அறிக்கைக்கு தமிழ் மக்கள் வழங்கிய ஆணையாகக் காண்பிக்கப்படும். அதில் தமிழரசுக் கட்சி தோற்கடிக்கப்பட்டால் டிலான் பெரேரா கூறுவது போல ஒரு தீர்விற்காக ஆகக்கூடிய பட்சம் விட்டுக் கொடுத்த கடைசித் தலைவர் சம்பந்தரே என்பதனை தமிழ் மக்கள் சிங்களத் தலைவர்களுக்கு உணர்த்திய ஒரு தேர்தலாக அது அமையும்.

**நிலாந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர்ந்து பிரிதலும், பிரிந்து பின் சேர்தலும்!

முள்ளிவாய்கால் பேரவலத்தின் பின்னரான. 9 வது மாவீரர் தினம் இந்த ஆண்டும் தமிழ் மக்களால் அனுஸ்டிக்கப்படுகின்றது.

நல்லாட்சி அரசாங்கம் தனது அரசியல் நலன்களை பேணிப்பாதுகாப்பதற்கும் தமது அரசாங்கதின் நலன்களுக்கு முண்டு கொடுக்கும் தமிழ் அரசியல் தரப்பினை தொடர்ந்தும் பலம் மிக்கதாக பேணுவதற்கும் மாவீரர் தினத்தை இந்த வருடமும் சரிவர பயன்படுத்தும்.

மாவீரர் தினத்தில் நினைவுச் சுடரேற்றி மாவீரர்களை நினைவு கூர்வதற்கு அனுமதியளித்த மைத்திரியை போற்றியபடி அடுத்த ஒரு வருடத்திற்குமான மென்வலு அரசியலை தமிழ் தேசியக் கூட்டமைப்பு தொடரும்.

உருவாகி விடும் என்று பரவலாகப் பேசிப்படுகின்றது.

இந்த அணிகள் ஒன்றிணைந்து உருவாக்கிய தமிழ் மக்கள் பேரவை என்ற அரசியல் சாரா மக்கள் இயக்கமே காணமல் போயுள்ள நிலையில் இவர்கள் கொண்டு வரும் அரசியல் கூட்டணி எதனை நோக்கி செல்லும் என்றும் அது எவ்வாறு வெல்லும் என்பதும் கேள்விக்குரியதே.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் நகர்வுகள் மீது மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளது என்பது மறுக்க முடியாதது ஆனால் கூட்டமைப்பின் மீதான அதிருப்தி அலையினால் கூட்டமைப்பிற்கு மாற்றான அரசியல் கூட்டணி ஒன்றை உருவாக்கி வெற்றிபெறச் செய்து விடலாம் என்பது மக்களின் எதிர்பாரப்புகளை தெளிவு படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதனை விடுத்து கூட்டமைப்பிற்கு மாற்றான ஒரு அரசியல் சக்தியினை உருவாக்க முயற்சிப்பது பாரதூரமான பின் விளைவுகளையே ஏற்படுத்தும். சரி தவறுகளுக்கு அப்பால் 2009 பேரழிவுகளின் பின்னர் தாயகத்தில் உள்ள தமிழ் மக்களுக்கான அரசியல தலைமையினை வழங்கி வரும் ஒரு அரசியல் கட்டமைப்பை பலமிழக்கச் செய்வதன் மூலமாக நாம் எதனையும் அடைந்து விட முடியாது.

அதே சமயம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் போக்கினை கடிவாளமிட்டு சரியான திசைக்கு கொண்டு செல்ல வேண்டிய பாரிய பொறுப்பு புலம்பெயர் சமூகத்திற்கு உண்டு.

அரசாங்கமும் சர்வதேசமும் தமிழர் நலன் சார் முடிவுகளை எடுக்கும் நிலை நோக்கி தள்ளப்பட்டிருக்கும்.

ஆனால் நாங்கள் எங்களுக்குள் அதிகார மோதல்களை வளர்த்துக்குக் கொண்டு மற்றவர்களை வென்று காட்டுவதாக நினைத்து தமிழர் நலன்களை புறம்தள்ளி நடந்தமையால் தான் முள்ளிவாய்காலை விடவும் பேரழிவுகளை தரும் அரசியல் தற்கொலை ஒன்றை நோக்கி தமிழனத்தை நகர்தியிருக்கின்றோம்.

மறுபுறம் புலம்பெயர் தேசத்தில் பிரிந்து நின்று அரசியல் செய்த பல அமைப்புகள் ஒன்றாகி ஒரே குரலில் இலங்கையின் படை அதிகாரிகளை கனடாவிற்குள் அனுமதிக்கக் கூடாது என்று குரல் எழுப்பியுள்ளமை வரவேற்பிற்குரிய முயற்சியாகவே நாம் கருத வேண்டும்.

இதை தாண்டி நடைபெறும் அரசியல் குறித்த தெளிவான புரிதல்கள் இன்றி மக்கள் கூட்டமும் நத்தார் புதுவருடக் கொண்டாட்டங்களுக்கு தயாராகிவிடும்.

தாயகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் முன்னெடுக்கப்பட்டு வரும் சில நகர்வுகள் தமிழர்களின் தேசிய நலன்களுக்கு மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று பலரும் தமது ஆதங்கங்கங்களை ஆங்காகங்கே பதிவு செய்து வருகின்றனர்.

தாயகத்தில் தமிழர்களின் அரசியல் அடையாளமாக கருதப்பட்டு வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு மாற்றான அரசியல் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் தமிழரசுக் கட்சியின் பிரதான வகிபாகம் குறித்து ஆட்செபணை கொண்டுள்ள ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் ஏற்கனவே கூட்டமைப்பில் இருந்த வெளியேறிய தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் கூட்டமைப்பில் இருந்தவாறே உள்ளே வெளியே என ஆட்டம் காட்டி வரும் வடமாகாண முதல்வர் விக்னேஸ்வரன் ஆகியோர் கொண்ட ஒரு புதிய அரசியல் கூட்டணி அடுத்த தேர்தலுக்கிடையில் சாத்தியப்பாடற்றதொன்றாகவே அமையும்.

எனவே தான் தமிழ் அரசியல் சக்திகள் பிழவுண்டு போவதை காட்டிலும் ஒன்று பட்டு ஒரே குரலில் தமிழர்களின் தீர்வினை கோர வேண்டும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்கின்றனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினை உடைத்து பலவீனப்படுத்துவதன் மூலமாக தேசிய கட்சிகளுடன் இணைந்துள்ள தமிழ் கட்சிகளும் அதன் வேட்பாளர்களும் வெற்றி பெறும் வாய்புகளே அதகரிக்கும். இதற்கு கடந்த கால தேர்தல் முடிவுகளே சான்றாக அமைகின்றன.

மாறாக அதிகார ஆசைகளையும் கட்சிபேதங்களையும்மறந்துதமிழ்தேசியக் கூட்டமைப்பை நேர்வழிப்படுத்தும் முயற்சிகளை சிவில் சமூகமும் தமிழர் தேசிய நலனில் அக்கறை கொண்ட தரப்புகளும் மேற்கொள்ள வேண்டும். கூட்டமைப்பின் தலைமையையும் தலைமைக்கு நெருக்கமான தரப்பும் தமிழ் மக்களுக்கு பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாட்டினை கொண்டிருக்கின்றார்கள். எனவே அவர்களுடனான திறந்த உரையாடல்களை நடத்துவதற்கும் மக்கள் சந்திப்புகளிற்கு அழைத்து

துரதிஸ்டவசமாக கூட்டமைப்போடு உறவு கொண்டாடும் உலகத் தமிழர் பேரவையும் அதன் அங்கத்துவ அமைப்பாக விளங்கும் கனேடியத் தமிழர் பேரவையும் கூட்டமைப்பை நேர்வழிப்படுத்துவதற்கு தமக்கு கிடைத்துள்ள வாய்ப்பினை சரிவர பயன்படுத்த தவறியிருக்கின்றன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எதேச்சாதிகாரப் போக்கிற்கான பொறுப்பினை கூட்டமைப்பிற்கும் அதன் அரசியல் முடிவுகளுக்கும் நிபந்தனையற்ற ஆதரவை வழங்கி வரும் புலம்பெயர் தமிழர் அமைப்புகளே பொறுப்பேற்க வேண்டும்.

அதேபோல் கூட்டமைப்பிற்குள் மாற்றுக் குரலாக இருந்து அதனை தமிழர் தேசிய நலன் நோக்கிய திசையில் செலுத்துவதற்குரிய அழுத்தங்களை கொடுத்திருக்க வேண்டிய கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை கூட்டமைப்பில் இருந்து வெளியேற்றக் காரணமான மக்கள் அவையும் அதன் அங்கமான கனேடியத் தமிழர் தேசிய அவையும் கூடவே இன்றை நிலைக்கு பொறுப்புக் கூற வேண்டிய நிலையை மறுக்க முடியாது.

2009 முள்ளிவாய்கால் பேரவலத்தின் பின்னர் தாயகத்திலும் புலத்திலும் உள்ள தமிழ் அரசியல் சக்திகள் ஒன்று பட்டு நின்றிருந்தால் இலங்கை

கனடாவின் வன்கூவர் நகரில் நடைபெறவுள்ள ஐநா அமைதிகாகக்கும் படையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் மற்றும் படை அதிகாரிகள் கலந்து கொள்ளும் மாநாட்டில் இலங்கை படை அதிகாரிகள் கலந்து கொள்ளக் கூடாது என புலம்பெயர் தமிழர் அமைப்புகள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன. அல்லது இந்த கோரிக்கையினை தாங்கள் ஏற்றுக் கொள்வதாக கையொப்பம் இட்டுள்ளன.

இந்த கோரிக்கைகள் குறித்த ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றினை ஒட்டாவாவில் தமிழ் சட்ட நிறுவனமான நவா வில்சன் சட்ட நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது.

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக தொடர்ந்து இயங்கி வரும் சட்டத்தரணியும் மனித உரிமை செயற்பாட்டாளருமான குபேஸ் நவரட்ணம் மற்றும் வில்சன் அம்மையார் ஆகியோரின் கடும் முயற்சியின் பலனாக இந்த தமிழ் அமைப்புகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டமைப்பு சாத்தியமாகியிருக்கின்றது.

புலம் பெயர் தமிழ் சூழலில் பிளவு பட்டு நிற்கும் தமிழ் அமைப்புகள் பலவற்றை ஒன்றிணைத்த மிக முக்கியத்துவம் மிக்க நகர்வாக இது நோக்கப்படுகின்றது.

இந்த அமைப்புகளை ஒன்றுபடுத்தும் முயற்சியிலும் இந்த ஊடக சந்திப்பை ஏற்பாடு செய்யும் நடவடிக்கைகளிலும் அவர்கள் உண்மையான அக்கறையுடன் ஈடுபட்டிருந்த போதிலும் 'வர்த்தகக் குறியீடுகள்' இடம்பெறும் போது அந்த முயற்சி அதன் உண்மைமான குறிக்கோளை அடைவதில் சங்கடங்களை எதிர் கொள்ள நேரிடும் என்பதையும் இந்த முயற்சியின் முக்கியத்துவத்தை தாண்டிய விமர்சனங்கள் சிலவற்றை எதிர் கொள்ள நேரிடும் என்பதையும் இந்த ஊடக சந்திப்பின் பின்னரான உரையாடல்களில் இருந்து நாம் அறிந்து கொள் முடிந்தது.

கனடாவில் உள்ள பிராதன தமிழ் அமைப்புகளான கனேடிய தமிழர் பேரவை, கனேடிய தமிழர் தேசிய அவை, நாடு கடந்த தமிழிழ அரசாங்கம் உட்பட பத்து அமைப்புகளை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டுள்ள கூட்டுக் குழுவினை பிரதிநிதித்துவம் செய்வதாக குறித்த சட்ட நிறுவனம் அறிவித்துள்ளது.

இது மிகவும் துணிச்சலானதும் காலத்தின் தேவை கருதியதுமான ஒரு நகர்வாகவே நோக்கப்பட வேண்டும். ஒரு நாட்டின் இராஜதந்திர இறைமைக்கு சவால் விடும் சட்ட நடவடிக்கைக்கு தலைமை தாங்குவது மற்றும் பிரிந்து நிற்கும் தமிழ் அமைப்புகளை ஒன்றிணைத்து ஒரே குரலில் பேச வைப்பது என்ற நோக்கங்கள்ள முன்னெடுத்தமை பாராட்டுதல்களுக்குரியது.

ஆனால் இதுவும் கடந்து போய்விடுமா என்ற கேள்வியினை நாம் திருவாளர் பொதுசனம் சார்பில் எழுப்பியே தீரவேண்டும்.

காரணம் இலங்கை அரசாங்கம் ஏற்பாடு செய்த இலங்கையின் அபிவிருத்தியில் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புகளின் வகிபாகம் தொடர்பான சீபா மாநாட்டில் கலந்து கொண்ட கனேடிய தமிழர் பேரவையும் இந்த கூட்டுக் குழுவில் இடம்பெற்றுள்ளமை சந்தேகங்களை தோற்றுவிக்கின்றது.

இலங்கை அரசாங்கத்தோடு இணங்கிப் போவதன் மூலமாகவே தமிழ் மக்களுக்கு நன்மைகளை ஏற்படுத்த முடியும் அவர்களோடு முரண்பட்டால் நாம் எதனையம் பெற முடியாது என்று வெளிப்படையாகவே அறிவித்து அதனை நோக்கியதாகவே செயல்பாடுகளை முன்னெடுக்கும் அமைப்பு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் இந்த நகர்விற்கு எவ்வாறு இணங்கியது என்பதையும் நாம் ஆராயமல் கடந்து செல்ல முடியாது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் நகர்வுகளுக்கு பாதகம் ஏற்படுத்தும் எந்த ஒரு முயற்சியிலும் தங்களால் ஈடுபட முடியாது என பல சந்தர்பங்களில் கூறி பல முன்னெடுப்புகளில் இருந்து விலகியவர்கள் எவ்வாறு இந்த முயற்சிக்கு இணங்கினார்கள் என்பது தீவிரமாக ஆராயப்பட வேண்டியது.

இது உண்மையில் அவர்களின் கொள்கை முடிவுகளில் ஏற்பட்ட மாற்றமாக இருந்தால் நிச்சயம் அது வரவேற்பிற்குரியது.

எனினும் தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டம் தொடர்ந்த போதெல்லாம் மௌனமாக இருந்த இந்த அமைப்புகள், எதுவுமே அற்ற தீர்வினை தமிழர்கள் மீது திணிப்பதற்கு இலங்கை அரசாங்கம் எத்தனித்த போதெல்லாம் மௌனித்திருந்தவர்கள் இப்போது எப்படி இப்போது குரல் எழுப்புகின்றார்கள் என்பதும் முக்கியமான கேள்வி.

இலங்கை அரசாங்கம் தமிழர்கள் மீது மேற்கொண்டது இன அழிப்பா யுத்தக் குற்றமா என்பதற்கே பெரு விவாதங்களை நடத்திய வரலாற்றை தமிழர்கள் இலகுவில் மறந்திருப்பார்கள் என்று இவர்கள் எண்ணுகின்றார்களா

தமிழர்கள் மீது கடும் போர்க் குற்றங்களை இழைத்த அரசாங்கத்தோடும் பாதுகாப்பு படை அதிகாரிகளோடும் கைகுலுக்கி புகைப்படம் எடுக்கும் போது வராத கரிசனை அவர்கள் இங்கவே வரப்போகின்றார்கள் எனும் போது தானா உங்களுக்கு வருகின்றது என்று எவரும் அவர்களை கேள்வி கேட்கமாட்டார்கள் என்று இவர்கள் நம்புகின்றார்களா?

இலங்கை அரசாங்கத்தோடு புலம்பெயர் சமூகம் தொடர்புகளை பேணுவது சர்வதேச அரங்கில் இலங்கை அரசாங்கத்திற்கு பாதுகாப்பைத் தேடித் தருவதாக அமைந்து விடும் என்று தலையில் அடித்துச் சொன்ன போதும் கேட்காமல் போய் கைகுலுக்கியவர்கள் இப்போது படை அதிகாரிகள் கனடாவிற்கு வருவதற்கு எதிராக குரல் கொடுக்கின்றார்கள். இவர்களின் இந்த மன மாற்றம் குறித்து நாம் கேள்விகள் கேட்காமல் வரவேற்று கொண்டாட வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றார்கள்.

மக்கள் அமைப்புகள் என்றால் தமது நிலைப்பாடுகள் மக்களுக்கு தெளிவு படுத்த வேண்டும் உங்கள் நிலைப்பாடுகளை நீங்கள் காலப்போக்கில் மாற்றிக் கொண்டால் அதனையும் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். நாங்கள் இலங்கை அரசாங்கத்தல் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்று இரகசியமாக ஆதங்கப்படுவதை விடுத்து அந்த ஏமாற்றத்தை பொது வெளியில் மக்கள் முன் வெளிப்படையாக முன்வைக்க வேண்டும்.

மங்கள சமரவீர தீர்வு தருவார் என்று நம்பினோம் அவர் எங்களை ஏமாற்றி விட்டார் என்று புலம்பித் திரிவதை விடுத்து மக்கள் முன்பாக நடந்தவற்றை வெளிப்படுத்துங்கள்.

அப்போது தான் உங்கள் மீது கொஞ் சமாவது நம்பிக்கை ஏற்படும். அதனை விடுத்து நீங்கள் எது செய்தாலும் மக்கள் கேள்வி கேட்காமல் ஏற்றுக் கொள்வார்கள் என்று நீங்கள் நம்பித் திரிவது ஆரோக்கியமற்றது.


இலங்கை மீது கனடா மட்டுமல்ல ஏனைய நாடுகளும் தொடர்சியான அழுத்தங்களை பிரயோகிப்பதன் மூலமாகவே தமிழ் மக்களுக்கான நீதியும் அரசியல் தீர்வும் கிடைக்கும் என்பதே எமது நம்பிக்கை.

தாயகத்தின் அரசியல் சூழலில் சிக்கியுள்ள கூட்டமைப்பினை தாண்டி புலம்பெயர் தமிழ் சமூகம் ஒரு தேசிய இனமாக சிந்திப்பதும் செயல்படுவதும் இன்றை காலத்தின் மிக முக்கியமான தேவையாக கருதப்படுகின்றது.

இதனை நோக்கிய பயணத்திற்கு இந்த பலம்பெயர் தமிழ் அமைப்புகளின் கூட்டுக் குழுவின் உருவாக்கம் வழிசெய்வதாக இருக்கட்டும்.

DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?
We offer Total Debt FREE SOLUTIONS



Elankeeran .T
Certified Insolvency Counsellor
By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.
  We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com

Head Office:
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

Branch Office:
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மனித வளமும், பொருளாதார வலிமையும்' மிகுந்த சீன அரசு, பொருளாதார பொதுவுடைமையை மறைமுகமாக சர்வதேசத்திற்கு புகட்டுகிறது. அனைத்து நாடுகளும் பொருளாதாரத்தில் நன்மைகளை அடைவதற்கான திட்டங்களை செயற்படுத்துகிறது. அனைத்து வெளிநாட்டு ஏற்றுமதிகளும், உள்நாட்டு இறக்குமதிகளும் இலகுவாக நடைமுறை பெறும் விதத்திலான (ளிஙிளிஸி) திட்டம் வலுப்பெறும் என்பதில் ஐயமில்லை.

### சீனாவில் அரசியல் மாற்றம்

21 ஆம் நூற்றாண்டின் மா சேதுங் மற்றும் சீன அதிபர் ஸீ ஜிங்பிங் என்போரின் அரசியலமைப்பு திருத்தம் என்பன உறுதியான ஒற்றுமை படைத்தன என்றும், ஒரு தலைவனின் பதவிக்கு ஓய்வூதிய வயது என்பது கட்டுப்பாடாக அமையாது என்பதை நிலைநாட்டுவதாகவும் ஸீ ஜிங்பிங் மீன் பதவியேற்பு சுட்டிக் காட்டுவதாக, வோ லாப் லேம் ஹாங்கால் பல்கலைக்கழகத்தின் சீன அரசியல் நிபுணர் கூறியுள்ளார்.

ஏழு பேர் கொண்ட அரசியல் தலைமைத்துவ குழுவின் நிலைக்குழுவிற்கு, புதிய 5 உறுப்பினர்களை நியமித்த அதிபர் ஸீ ஜிங்பிங், அவரின் 5 ஆண்டு ஆட்சிக்குப் பின்னர், அடுத்த தலைவராக யார் வருவார் என்பது தொடர்பான, அறிவிப்புகள் குறிப்பிடப்படவில்லை.

பாரம்பரியமாக சீனா அதிபர், அவருக்கு பின் ஆட்சிக்கு யாரை நிர்ணயம் செய்யலாம் என்ற குறிப்பு வெளிப்படையாக, அறிவிக்கப்படாமல் எழுதப்படும். ஆனால், ஸீ ஜிங்பிங் அக்குறிப்புகளை பதிவு செய்யாததால், அடுத்த 5 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் வரை சீனாவின் ஆட்சியுடனான ஜிங்பிங்னின் ஈடுபாடு உறுதி செய்யப்பட்டுள்ளது.

சீனாவின், கம்யூனிஸ்ட் கட்சியின் 10 ஆவது மாநாட்டில் இக்கோட்பாட்டின் திட்டங்கள் மக்களின் ஆதரவை பெற்றுள்ளதோடு, சீன மக்களால் பெரிதும் மதிக்கப்படும் சோஸலிஸ பொருளாதார கொள்கையை முன் வைத்த மா சேதுங்கின் தலைமைத்துவத்தின் கருத்துக்களுக்கு நட்பாக அமைவதாக நம்பப்படுகிறது.

இத்திட்டங்கள் அவரின் ஆட்சிக்கால ஐந்து வருடங்களில் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இக்கோட்பாடுகளின் அம்சங்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச குறிக்கோள்களைக் கொண்டுள்ளன.

பொருளாதாரத்தின் நவீன முயற்சியில் களமிறங்கியிருக்கும் சீனா, அனைத்து உலக நாடுகளின் பொருளாதாரத்தையும் இணைத்து, உருவாக்க உள்ள பட்டுப்பாதை திட்டம் –(OBOR) சர்வதேச வரவேற்பை பெற்றுள்ளது.

உலகின் அனைத்து வல்லரசு நாடுகளுக்கும் சவாலாக சீனா, சர்வதேச பெருளாதாரத்தையும் மிஞ்சும் அசாத்தியமான திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

பொருளாதாரத்தை மையப்படுத்திய இத்திட்டம் 'ஜிங் பிங்ஹின் கோட்பாடுகளில்' ஒரு பகுதியாகவே நோக்கப்படுகிறது. சீனாவின் உள்நாட்டு அரசியலின் எல்லா துறைகளிலும் நடைபெறும் ஊழலை தடுத்தல், அத்தோடு ஒற்றை குழந்தை கொள்கையை முடிவுக்கு கொண்டு வருதல் என்பன உள்நாட்டு குறிகோள்களாக நோக்கப்படுகிறது.

### ஸீ ஜில்பில்ஜின் சர்வதேச பொருளாதார குறிக்கோள்

சர்வதேசத்தில் சீனாவின் நலன்களை உறுதிப்படுத்தல், சர்வதேசத்தில் சீன பொருளாதாரத்தை விரிவுபடுத்தல் என்பன சர்வதேச குறிக்கோள்களாக நோக்கப்படுகிறது. இக்கோட்பாடுகள் சர்வதேசத்தில், சீனாவின் நிலைப்பாட்டை உறுதி செய்து விட்டது.

சர்வதேச பொருளாதாரத்தை இணைக்கும் பட்டுப்பாதை திட்டம் இதற்கு வலுவான எடுத்துக்காட்டாக நோக்கப்படுகிறது.

சீனாவில் மக்கள் புரட்சி ஏற்பட்ட காலத்தில், சிறுபான்மை சமூகமாக நோக்கப்பட்ட பாட்டாளிகள், முதலாளித்துவ சுரண்டலுக்கு எதிராக, புரட்சிசெய்த போதிலும், சரியான தீர்மானத்தை நிலை நாட்டவில்லை.

பாட்டாளிகளின் சர்வாதிகாரம் என்ற நிலைப்பாட்டில் மார்க்சிய கொள்கையை நடைமுறைப்படுத்த முயன்றனர். இந்த முரணான கோட்பாடுகளை புறம் தள்ளும் மா சேதுங், சமூக சமத்துவம் பேணபட வேண்டியதன் அவசியத்தைப் நிலைநாட்டி, பொதுவுடைமைக் கோட்பாட்டை வலியுறுத்தினார்.

சீனாவில் பொதுவுடைமை கொள்கையை பின்பற்றத் தொடங்கிய போது, மக்களும் ஒன்றிணைந்து பொதுவுடைமைக்கு ஆதரவு வழங்கியதோடு, சொத்துகளில் அளவிடப்படும் அந்தஸ்து முறை அடியோடு ஒழிக்கப்பட்டது. ஒன்றுபட்ட மக்கள் சக்தி, தாமாக சுய சொத்துகளை சுயநலமாக சேர்க்கும் நிலை மாறி பொதுவுடைமைக்காக தொழில்பட நேர்ந்தது.

உலகிலேயே பாரிய முன்னு தாரணமான பொருளாதாரத்தை, அனைத்து நாடுகளின் ஆச்சரியத்தில் உச்சம்கண்டதுசீனா.பொருளாதாரத்தில் நவீனத்துவத்தை புதிய திட்டமாக வழிவகுத்த சீனா அனைத்து நாடுகளையும் ஒன்றிணைக்கும் திட்டமாக அறிமுகப்படுத்திய (OBOR) திட்டமானது சர்வதேச ரீதியில் நன்மதிப்பை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீனாவின் எதிர்கால கட்டமைப்பு முயற்சிகள் அனைத்தும், உயர்மட்ட திட்டங்களாகவே உள்ளன. ஆசிய நாடுகளிடையே பொருளாதார சக்தி கொண்ட சீனா, சர்வதேச ரீதியாக தன் பொருளாதார பலத்தின் முக்கியத்துவத்தை மேலும், வலுப்பெறச் செய்வதற்கு பல திட்டங்களை தன் விரல் நுனியில் கொண்டுள்ளது. அத்திட்டங்களில் ஒன்றாக அண்மைக்காலங்களில் பரவலாகப் பேசப்பட்டு வரும் திட்டமான OBOR (One Belt One Road) திட்டமானது, பொருளாதார உலகின் மிக முக்கிய மற்றும் முதலிட வரலாற்று சரித்திர சிந்தனையாகும்.

இத்திட்டமானது பல நாடுகளையும் ஒன்றிணைக்கும் பொருளாதார பாலமாகவும் சிறந்து விளங்கும் என அனைத்து பொருளாதார தலைவர்களாலும் நம்பப்படுகிறது. புராதன காலத்தில் பட்டுப்பாதை (Silk Road) என அனைவராலும் அழைக்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க பொருளாதார வளர்ச்சியின் ஆரம்ப காரணியை, சீன அரசு சிறப்பான விதத்தில் திட்டமிட்டு புது வடிவம் கொடுக்க எத்தனித்தது வரவேற்கத்தக்க




சிந்தனையே.

சீனாவின் ஜனாதிபதி ஸீ ஜிங்பிங் (Xi Jinping) இத்திட்டம் தொடர்பான கருத்துக்களை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியா குற்றரஸ் (Antonio Guterres) மற்றும் 100 க்கு மேற்பட்ட நாடுகள் அவற்றின் பிரதிநிதிகள் முன்னிலையில், யாங் ஏரி சர்வதேச ஒத்துழைப்பு மாநாடு (Yang Lake International Convention Center) 14 ஆம் திகதி மே மாதம் பீஜிங்கில் இடம் பெற்ற போது, இத்திட்டம் Belt and Road Forum தொடர்பான கருத்துக்களை வெளியிட்டார்.

இந்த திட்டமானது 60 நாடுகளுக்கும், சர்வதேச அமைப்புகளுக்கும் வர்த்தக இணைப்பாக இருக்கும் எனவும் குறிப்பிட்டார். இருப்பினும் தமது கனவை எல்லா நாடுகளும் கைகோர்த்து நனவாக்கும் என நம்பிக்கை தெரிவித்ததோடு, இச்சிந்தனை நிமிர்ந்து நிற்பதற்கு, பல உட்கட்டமைப்பு நடவடிக்கைகளை சீன அரசாங்கம் மேற்கொள்ள ஆரம்பித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இத்திட்டத்தின் ஆரம்பக்கட்ட சிந்தனைகள் 2013 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்டது. OBOR முன் முயற்சியாக ஆறு தாழ்வாரங்களையும், கடலோர பகுதிகளிலும் பூகோள ரீதியாகவும் இணைப்பதற்கு ஆரம்ப கட்டமைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதில் புதிய யூரேசிய நிலப்பாலம், மேற்கு சீனாவிலிருந்து மேற்கத்திய ரஷ்யா வரை, இயங்கம் சீனா, மெங்கோலியா, ரஷ்யா தாழ்வாரங்கள், வடகிழக்கு சீனாவிலிருந்து, ரஷ்யா நோக்கி செல்லும். சீனா மத்திய ஆசியயா மேற்கு ஆசிய நடைபாதை, மேற்கு சீனாவிலிருந்து துருக்கி வரை இயங்கும் சீனா, பெனிசுலா நடைபாதை தெற்கு சீனா சிங்கப்பூர் வரை இயங்கும். தென்மேற்கு சீனாவிலிருந்து பாகிஸ்தானுக்கு இயங்கும்.

பங்களாதேஷ், சீனா, இந்தியா, மியன்மார் தாழ்வாரங்கள், தெற்கு சீனாவிலிருந்து இந்தியாவிற்கு இயங்கும். கடல் மட்டத்திலான சாலை, சிங்கப்பூர் மற்றும் இந்தியாவின் மத்திய பிரதேசத்திலிருந்த இயங்கும். இத்திட்டம் முக்கிய பல்வேறு வர்த்தகங்களின் வளர்ச்சியிலம் கவனம் செலுத்தவுள்ளது. சிறுதொழில்கள், பாலங்கள், நெடுஞ் சாலைகள், சுரங்கங்கள், தொழில் நுட்பத்திட்டங்கள், விவசாய திட்டங்கள், கால்நடை வேளாண்மை மற்றும் எரிசக்தி திட்டங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியை நோக்கமாக கொண்டுள்ளது.

இத்திட்டத்திற்காக சினா 40 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் மேலதிக செலவுகளுக்கு 100 பில்லியன் அமெரிக்க டொலர்களையும் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி கிபிஙி ஒதுக்கிடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கத. மேலம், இம்முயற்சியில் இணைய பல நாடுகள் முன்வருவதாகவும் சீனாவின் பொருளாதார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சீனா இத்திட்டத்தில் தெற்காசியா, தென் கிழக்காசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பியா என்பனவற்றை இணைப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது. இத்திட்டம் தொடர்பாக இங்கிலாந்த அதிபர் பிலிப் ஹம்மண்ட் (Philip Hammood0 சீனா ஒரு சிறந்த மாற்றீட்டு வர்த்தக பங்காளர் எனவும், மெக்சிகோ பொருளாதார அமைச்சர், இல்டேபொன்ஷோ ருஜார்டோ (Ildefonsco Guajardo). சீனா மனம் கவர்ந்த இயற்கை வர்த்தக பங்குதாரர் எனவும் குறிப்பிட்டுள்ளனர். இத்திட்டத்தால் பல பயன்கள் இருப்பினும், இத்திட்டம் செயல் வடிவம் பெற பல ஆண்டுகள் வரை செல்லும் என்பதே தற்போதைய நிலைமையாக இருக்கிறது.

மேலும் இத்திட்டம் அமெரிக்கா, ரஷ்யா போன்ற வல்லரசு நாடுகளுக்கும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற வலுவான பொருளாதார சக்திகளுக்கும் பெரும் சவாலாக அமைவதோடு வர்த்தக ரீதியான உயர் அந்தஸ்தை சீனா தன்வசமாக்கி கொள்ளும் வாய்ப்பாகவும் அமைகிறது. மேலும் அமெரிக்கா ஜப்பான் ஒன்றிணைந்து Free Trade Agreement மற்றும் Trans Pacific Partnership திட்டத்தில் கைகோர்க்கவுள்ளதால் சீனாவுடன் இணையவில்லை. இவை மறைமுகமான பொருளாதார அரசியல் போட்டிகளாகவும் கணக்கிடமுடியும்.

Eu – China 2020 Strategic Agenda for Cooperation திட்டத்திலும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் சீனா கைச்சாத்திட்டுள்ளது. 'சீனாவில் மா சேதுங் தொடக்கம் ஸீ ஜிங்பிங் வரையும் பொருளாதாரத்தின் நோக்கங்கள் எண்ணிலடங்காத முக்கியத்துவம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது'. இருப்பினும், நாடுகளுடனான ஒப்பந்த கைச்சாத்திடல் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

தீவிரவாத பிரச்சினைகளுக்கு தற்போது முகங்கொடுத்து வரும் நாடுகள் தமது பாதுகாப்புகளை உறுதிப்படுத்திக் கொண்டு இணைவதாக இணக்கம் தெரிவித்துள்ளன. இத்திட்டம் உலக வரலாற்றில் தனக்கென ஒரு தனிச்சிறப்பை கொண்டு விளங்கும். என்பது உறுதி.

**என். குணா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளன புதிய நிர்வாக தெரிவும் அதன் ஊடக அறிக்கையும்



டிலானி குணராஜா
தலைவர்



திரு.கஜன் மகான்
நிறைவேற்று உப தலைவர்



திரு.குபேஷ் நவரட்ணம்
உப தலைவர் - உள்ளக விவகாரங்கள்



திரு.விநாயகமூர்த்தி தேவதாஸ்
உப தலைவர் - நிதி முகாமைத்துவம்



திரு.வேணு புவிராசன்
உப தலைவர் - சமூக விவகாரங்கள்



திரு.ரமணன் சந்திரசேகரமூர்த்தி
உப தலைவர் - உறுப்பினர்



திரு.ராம் கிரிஷ்
பணிப்பாளர்.



திரு.தீபன் ராஜ்
பணிப்பாளர்.

**26** ஆண்டுகளாக கனேடிய தமிழ் வர்த்தக முயற்சியாளர்களின் முகமாக கருதப்படும் கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளனம் அதன் தலைமைத்துவதத்திற்கு பெண் ஒருவரை முதல் தடவையாக தெரிவு செய்துள்ளது.

கடந்த 28ம் திகதி ஜே.சீ விருந்தினர் மண்டபத்தில் புதிய நிர்வாக சபையினை தெரிவு செய்யும் தேர்தல் நடைபெற்றது.

இந்த தேர்தலின் முடிவில் கனடாவில் கடந்த பல வருடங்களாக சட்டத்தரணியாக பணியாற்றி வருபவரும் கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் நிர்வாக சபையில் பல்வேறு நிலைகளில் பல வருடங்கள் இயங்கிய அனுபவம் கொண்டவருமான திருமதி.டிலானி குணராஜா தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

**டிலானி குணராஜா** தலைமையிலான புதிய நிர்வாக சபையில் பின்வரும் நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவாகியுள்ளனர்.

**திரு.கஜன் மகான்**
**நிறைவேற்று உப தலைவர்**

**திரு.குபேஷ் நவரட்ணம்**
**உப தலைவர் - உள்ளக விவகாரங்கள்**

**திரு.விநாயகமூர்த்தி தேவதாஸ்**
**உப தலைவர் - நிதி முகாமைத்துவம்**

**திரு.வேணு புவிராசன்**
**உப தலைவர் - சமூக விவகாரங்கள்**

**திரு.ரமணன் சந்திரசேகரமூர்த்தி**
**உப தலைவர் - உறுப்பினர்**

**திரு.ராம் கிரிஷ் - பணிப்பாளர்.**

**திரு.தீபன் ராஜ் - பணிப்பாளர்.**

தேர்தல் வாக்களிப்பின் மூலம் பணிப்பாளராக தெரிவு செய்யப்பட்டிருந்த திரு.தீபன் ராஜேந்திரன் தனது பதவியில் இருந்து விலகுவதாக நிர்வாக சபைக்கு அறிவித்துள்ளார்.

புதிய நிர்வாக சபையானது கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் பாரம்பரியங்களை பேணும் வகையிலான செயல் திட்டங்களை முன்னெடுக்கும் அதே வேளை புதிய பல திட்டங்களை முன்னெடுப்பதற்கும் தீர்மானித்துள்ளது.

கனடாவில் வாழும் தமிழர்களின் அடையாளமாக வர்த்தக சம்மேளனம் திகழ வேண்டும் என்பதிலும் குறிப்பாக தமிழ் அடையாளங்களை தமிழர்கள் தொலைத்துவிடாமல் பாதுகாக்க வேண்டும் என்பதிலும் கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் பணிப்பாளர் சபை உறுதி கொண்டுள்ளது.

கனடாவில் உள்ள தமிழ் வர்த்தக முயற்சியாளர்களுக்கு வர்த்தக சம்மேளனம் தொடர்பில் உள்ள எதிர்பார்ப்புகளை கண்டறிந்து அவற்றை பூர்த்தி செய்யதற்கான செயல்திட்டங்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன் மூலம் வர்த்தக சம்மேளனத்தின் மீதான வர்த்தக முயற்சியாளர்களின் நம்பிக்கை அதிகரிக்கும் என்பதோடு புதிய அங்கத்தவர்களையும் இணைத்துக் கொண்டு வர்த்தக சம்மேளனத்ததை பலம் மிக்க ஒரு தமிழர் அமைப்பாக வளர்த்தெடுக்க முடியும் என்று நிர்வாக சபை கருதுகின்றது.

கனேடிய பொருளாதாரத்திற்கு அதிகளவான பங்களிப்பை வழங்கி வரும் ஒரு இனத்தின் பிரதிநிதிகளாக எமது வர்த்தக முயற்சியாளர்களுக்குரிய வரப்பிரசாதங்களை தேசிய , மாகாண, மற்றும்; நகர சபை மட்டங்களில் இருந்து பெற்றுக் கொடுப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

அதேபோன்று வர்த்தக சம்மேளனத்தின் அங்கத்தவர்களுக்கான வரப்பிரசாதங்கள் அவர்களின் வர்த்தக முயற்சிகளை விரிவுபடுத்துவதற்கான உதவிகள் பல்வேறு மட்டங்களிலும் தொடர்புகளை விரிவு படுத்தும் செயல் திட்டங்களையும் வர்த்தக சம்மேளனம் முன்னெடுக்கவுள்ளது.

தாயகத்தில் உள்ள தொழில் முயற்சியாளர்களுக்கும் கனேடிய தொழில் முனைவோருக்கும் இடையிலான பாலமாக கனேடிய வர்த்தக சம்மேளனம் செயல்படுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் மூலமாக தமிழர்களின் தாயகப் பகுதிகளில் புதிய தொழில் முயற்சிகளை கனேடிய தமிழ் தொழில் முனைவோரின் பங்குபற்றுதலோடு உருவாக்கவும் அதன் மூலமாக பெறப்படும் உற்பத்திப் பொருட்கள் அல்லது சேவைகளை கனேடிய மற்றும் சர்வதேச நுகர்வோரிடம் கொண்டு சேர்ப்பதற்கான செயல் திட்டங்களையும் கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம் மேற்கொள்ள தீர்மானித்துள்ளது. இதன் மூலம் தாயகத்தில் வாழும் எமது மக்களின் பொருளாதார அபிவிருத்திக்கு புலம்பெயர் சமூகத்தின் கணிசமான பங்களிப்பினை வழங்க முடியும் என்றும் வர்த்தக சம்மேளனம் கருதுகின்றது.

வெறுமனே நிகழ்வுகளை நடத்தும் ஒரு அமைப்பாக வர்த்தக சம்மேளனம் வரையறுக்கப்படும் நிலையை மாற்றி முன்னேற்றகரமான திட்டங்களின் மூலமாக கனேடிய வர்த்தக சமூகத்திற்கு காத்திரமான பங்களிப்பினை வழங்கும் ஒரு அமைப்பாக கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தை முன்னிறுத்துவதற்குரிய சகல முயற்சிகளையும் இந்த நிர்வாக சபை மேற்கொள்ளும்.

கனேடிய தமிழர் சர்த்தக சம்மேளனத்தின் இந்த முயற்சிகளுக்கு தமது பங்களிப்பை வழங்க விரும்பும் அனைத்து வர்த்தக முயற்சியாளர்களையும் தமது இணைந்து பயணிக்குமாறு வர்த்தக சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்க்கம் ரொறோண்டோ கிரிக்கெட் லீக் (Markham Toronto Cricket League) அமைப்பின் 23வது வருட மென்பந்து துடுப்பாட்ட போட்டிகளின் பரிசளிப்பு நிகழ்வு

MTCL அமைப்பானது ஒவ்வொரு வருடமும் தமது லீக் சுற்றுப்போட்டிகளில் மிகவும் சிறப்பாக விளையாடும் வீரர்களைக் கௌரவப்படுத்தி அவர்களுக்கு கேடயங்கள் மற்றும் பரிசில்கள் வழங்கி யிருந்தது .

















## HOMELIFE GALAXY GALA 2017









HomeLife Galaxy Real Estate நிறுவன வருடாந்த விருது வழங்கும் விழா நவம்பர் மாதம் 3 ம் திகதி markham convention centre இல் நடைபெற்றது. இந்நிறுவன அதிபர்கள் கரு கந்தையா மற்றும் கருணா கோபாலபிள்ளை அவர்கள் தலைமையேற்று சிறப்புற நடத்தினார்கள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன்தொல்லை?

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சனைகளுக்கான
இலவச ஆலோசனைகளுக்கு

## V. SRI

**Certified Insolvency Counsellor**

**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ்
இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community

OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*



**Vilosanan Sivatharman**
416-993-0826

We provide a full range of service
to families who have experienced
a loss of a loved one, including:
- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception* • *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

**1911 Woodbine Ave, Markham**
**ON, L3R 5G1**
**www.chapelridgefh.com**
**info@chapelridgefh.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறம் சினிமாவின் சமூக விமர்சனம்

சமூகத்தின் உணர்வுகளை புனைவுகளாக மனதில் குழைத்து வைத்திருப்பவர்களால் சமூக உணர்வு பற்றிய மசாலா படம்தான் எடுக்கமுடியுமே தவிர, பார்வையாளனின் உள்ளே இறங்கி அவனது ஆன்மாவை உலுக்கி கேள்வி கேட்கும் தத்ரூபமான படங்களை தரமுடியாது. சங்கர் ரக படங்களில் அநேகமானவை இந்த குளத்தில் முழுகி எழுந்தவைதான் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. அவ்வழி வந்த "மெரசல்" இதற்கு மிகப்பெரிய உதாரணம்.

சமூகம் சார்ந்த பிரச்சினை ஒன்றை படம் எடுப்பதற்கு அந்த படத்தை செதுக்கும் இயக்குநர் அந்த விவகாரம் தொடர்பான அனைத்து சந்து பொந்துகளிலும் பயணம் செய்து அடிபடவேண்டும். தன்னை தானே அந்த பிரச்சினைகளின் காயங்களால் வலிகொள்ளச்செய்யவேண்டும். அந்த பிரச்சினையை உயிரோடு தன் மனதில் புதைத்து அதன் மீது எடுக்கப்படுகின்ற படம்தான் பார்வையாளனின் முகத்தில் ஓங்கி அறைந்து கேள்விகளை கேட்கும்.

இயக்குநரையும் பார்வை யாளனையும் ஒரே அலைவரிசையில் பயணம் கொள்ளவைக்கும்.

அதுபோன்ற சமூக வலிகளை சுமந்த தலித் படைப்பாளியாக மக்களின் அழுகுரல்களை காவித்திரிந்த 'மீஞ்சூர்' கோபி எடுத்துள்ள "அறம்" இந்த செய்தியைத்தான் படத்துக்கு வெளியே நின்று தெளிவுபடுத்தியிருக்கிறது.

இந்த படத்தில் பெரிதாக தூக்கிக் கொண்டாடக்கூடிய பரவசங்களோ குபீர் காமெடிகளோ தடலாடி திருப்பங்களோ எதுவும் இல்லை. அதிகாரவர்க்கத்தின் பணி அசட்டைகளால் ஆழ்துளை கிணறுகளில் வீழ்ந்து சாவடையும் அப்பாவிகள் பற்றிய படம். அவ்வளவுதான். அதற்காக இதுவொரு பிரச்சார படம் என்று கூறிவிடமுடியாது.

இந்த பிரச்சினையின் ஆழமான தளமொன்றிலிருந்து அது ஏற்படுத்தும் வலிகளை அதற்கு காரணமான அதிகார வர்க்கத்தின் மீதான கோபத்தை சமூகமும் ஊடகங்களும் அதில் பிரயோகிக்கும் வகிபாகத்தினை என்று பல பரிமாணங்களில் மிக நேர்த்தியாக முன்வைத்திருக்கிறார் கோபி. நேர்த்தி என்பதற்கு அப்பால் அதில் ஒரு நேர்மையை கடைப்பிடித்திருப்பதுதான் பார்வையாளனை இரண்டு மணிநேரம் அந்த படைப்பின் மீது குவியம் கொள்ள வைக்கிறது.

நயன்தாரா கிடைத்துவிட்டார் என்பதற்காக அவருக்கு எடுப்பாக இரண்டு "இடுப்பு பாட்டுக்களை" வைத்து படத்தை நாசமாக்கிவில்லை. தனியே சமூகக்கருத்தை கூவிக்கொண்டிருந்தால் பார்வையாளனை உட்கார வைத்துவிடமுடியாது என்று சூரி பூரி என்று கண்ட கௌதாரிகளையும் படத்துக்குள்ளே விட்டு கலவரம் செய்யவில்லை. பாடல்களின் மூலம் படத்தின் ஆன்மாவை சிதைக்கவில்லை. படத்தில கருத்தை ஆழமாக சொல்லவேண்டும் என்பதற்காக சிங்கப்பூரில் ஒருவருமே குழியில் விழுந்து சாகவில்லை, இங்குதான் எல்லோரும் விழுந்து விழுந்து சாகிறார்கள் என்று சகட்டு மேனிக்கு புள்ளிவிவரங்களை பேசி சாவடிக்கவில்லை.

மிக யதார்த்தமாக மிக எளிமையாக அந்த படத்தின் கதையை இயல்பாகவே தனக்குரிய அரசியலை பேச அனுமதித்திருக்கிறார் இயக்குநர். அசோகமித்ரன் தஞ்சை பிரகாஷ் சிறுகதைகள் போன்றதொரு வலிந்து திணிக்கப்படாத மென் முடிவுகளை படத்தில் வருகின்ற பாத்திரங்கள் பேசிக்கொள்கின்றன. அதுதான் இந்த படத்தின் அழகு.

அதற்காக இந்த படம் ஏதோ நூறு சதவீதம் முழுமையான தலித் சினிமா என்றோ, இதில் எந்த தவறுகளும் யாரும் கண்டுபிடித்துவிடமுடியாது என்றோ யார் மீதும் சவுக்கு வீசவில்லை. லொஜிக் குறைபாடுகள், சில காட்சி குறைபாடுகள், ஆங்காங்கே சில இழுவைகள் என்பவையெல்லாம் இந்த படத்திலும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், அவற்றையெல்லாம் தாண்டி, இப்படியான படங்களின் பிரதிநிதிகளில் ஒருவராக கோபி தன்னை அடையாளப்படுத்தியிருப்பதற்கான ஏகோபித்த ஆதரவும் அதேவேளை படத்தின் பெரும்பான்மையான விடயங்கள் பாராட்டுக்கான பூரண தகுதி நிறைந்தவை என்பதும்தான் இங்கு உண்மையாக பார்க்கப்படவேண்டியது என்பது எனது கருத்து.

திரையில் முத்துக்கிருஷ்ணனை கண்டது அதிர்ச்சி கலந்த மகிழ்ச்சி. "தோரணம் ஆயிரம்" பாடலுக்காக ஜிப்ரானுக்கு மிகப்பெரிய பூச்செண்டு. "காக்கா முட்டை" வாண்டுகளுக்கு அதைவிடப்பெரிய பாராட்டு.

இறுதியாக

'கத்தி' மற்றும் 'மெட்ராஸ்' பட கதைகள் தன்னுடையவை என்று கூப்பாடு போட்ட ஆசாமியாக பார்க்கப்பட்ட கோபி இன்று தனது திறமையால் செயலால் தன்னை நிரூபித்துக்காட்டியிருக்கிறார். தலித் சினிமாவின் ஆரோக்கியமான பாதை இப்படிப்பட்ட படங்கள் மூலம் தொடர்ந்து திறக்கப்படவேண்டும். அவருக்கும் அவரது ஓர்மத்துக்கும் மெகா பாராட்டு!

(எரிக்கும் வெயிலுக்கு ஒதுங்குவோம் என்று ஓஸியில் ஏஸி வாங்கப்போன தியேட்டரில் இப்படியொரு இன்ப அதிர்ச்சியை சத்தியமாக எதிர்பார்க்கவில்லை. கன காலத்துக்கு பிறகு positive சினிமா விமர்சனம் ஒன்றை எழுதியதில் திருப்தி.)

- ப. தெய்வீகன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MORTGAGE

Residential / Commercial / Industrial / Investment Properties

1st, 2nd and 3rd Mortgages · Refinance · Secured Line of Credit · New House Commitment · Home Equity Loan



Mortgage In Any Situations

We Deal with all banks

MORTGAGE ALLIANCE

Thavanesan Subra

Independently Owned and Operated

| Category | Starting Rate |
|---|---|
| 5 Years Variable | 2.2% |
| 3 Years Variable | 2.25% |
| 5 Years Fixed Rate | 2.69% |
| 3 Years Fixed Rate | 2.25% |
| 2nd Mortgage | 6.99% |

416-908-5656

Lic# M15001465, Brokerage # 10530

mortgage@nesan.ca www.nesan.ca

NESAN

SUBRA MORTGAGE SOLUTIONS INC.

Office: 647-351-0399

Toll: 1-844-878-2721 Fax: 647-351-3099

SUBRA ACCOUNTING & TAX SOLUTIONS INC.

Bus: 416-660-5656

Our Off: 1585 Markham Rd, Unit #407A, Toronto, M1B 2W1

INCOME TAX SERVICES:

Personal Tax Returns (T1)

Corporate Tax Return (T2)

ACCOUNTING SERVICES:

Bookkeeping, Business Registration

Payroll & Many More...

www.subra.com solutions@subra.com



# 20 Year Pay Insurance

இருபது வருடக் கட்டுப்பணம்!

வாழ்நாள் முழுவதும் காப்புறுதி!

இருபது வருடங்களுக்கு மட்டும் மாதாந்தக் கட்டுப்பணத்தைச் செலுத்துங்கள். அதன் பின்னர் உங்கள் வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு காப்புறுதி இருக்கும்.

இருபது வருடங்களின் பின், விரும்பினால் காசுப் பெறுமதியை (Cash Value) அல்லது Policy Loan ஐப் பெற்றுக் கொள்ளலாம்.

| Age | 20 | | 25 | | 30 | | 35 | | 40 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 72 | 60 | 82 | 68 | 92 | 84 | 112 | 98 | 131 | 116 |
| 200K | 126 | 108 | 147 | 126 | 172 | 158 | 211 | 185 | 248 | 223 |
| 300K | 188 | 162 | 220 | 188 | 258 | 236 | 317 | 278 | 372 | 334 |



RBC Insurance · Manulife · Industrial Alliance · La Capitale · Assumption Life · BMO Insurance · Sun Life Financial

Thana Manickavasagar Broker

Cell:416.728.5772 Office:416.519.3896

• Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP • Non-Medical Insurance • Travel Insurance • Super Visa Medical Coverage • Drug and Dental Plan • TFSA

thana7@gmail.com www.thana.ca Fax: 647.547.8147 80 Nashdene Road, #D218, Scarborough, ON, M1V 5E4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Inforce Life காப்புறுதி நிறுவனத்தின் 5வது ஆண்டுவிழா

டொரோண்டோ நகரின் மத்தியில் வளர்ந்துவரும் நிதி நிறுவனமாக, inforce நிறுவனம் ,பல்வேறு காப்பீட்டுத் திட்டங்களைச் செய்வதுடன் கனடாவின் சிறந்த காப்பீட்டு நிறுவனங்களுடன் கூட்டுசேர்ந்து சிறந்த காப்புறுதி, சேமிப்பு மற்றும் அனைத்து சுற்றி பாதுகாப்பு திட்டங்கள், சூப்பர் விசா காப்புறுதி போன்றவற்றில் சிறப்பு தேர்ச்சி உடையவர்களாக வளர்ந்து 10 Milner Business Court Unit 707, Scarborough, விசாலமான பரப்பில் மிகப்பெரிய அழகிய வடிவமைப்புடன் தனது 5 வது ஆண்டு விழாவை தனது முகவர்களுடன் கொண்டாடியது.











# இசையரங்கத்தின் 24ஆவது
# இசைக்கு ஏது எல்லை












மெல்லிசை ரசிகர்களின் கரம்பற்றி மெல்ல அழைத்துவந்து சாஸ்திரிய நதியில் நீராடவைக்கும்,இசையரங்கத்தின் 24ஆவது "இசைக்கு எது எல்லை"நவம்பர் 12ஆம் திகதி நடைபெற்றது .நிகழ்வில் இளம் கலைஞர்களின் இனிய குரல்களில் 14 பாடல்கள் பாடப்பட்டன. ஐஸ்வர்யா சந்துரு, வாரகி விஜயராஜ், சரிகா நவநாதன், மயூரதி தேவதாஸ், நிலா சிவனேந்திரன், மகிஷா பகீதரன், நிருபன் நாகேந்திரம் ஆகியோர் பாடல்களைத் தந்தார்கள்.

கவிஞர் சேரன், தமிழ்நதி, கவிஞர் செழியன், ஜயகரன், ஜெயக்குமார் ஆகியோரின் பாடல் வரிகளுக்கு சொர்ணலிங்கம், கிரிதரன், பாலமுரளி, உமாரமணன், சிந்து மோகன் ஆகியோர் இசையமைத்திருந்தனர். பின்னணி இசைக் கலைஞர்களாக பல இளையவர்கள் இணைக்கப்பட்டிருந்தார்கள். சுருதி பாலமுரளி, நிலக்ஷன் ராஜேஸ்வரன், ரஜனீசன் ஜேசுராசன் ஆகியோரைக் குறிப்பிடமுடியும். இவர்களோடு தபேலா நாவலன், ஒக்டோபாட் பாபு ஆகியோரும் இணைந்து கொண்டனர்.

எமது படைப்புகளின் மீது முதல் நம்பிக்கையினை நாம் கொண்டிருக்க வேண்டும். ஆனால் இன்னும் அந்த நம்பிக்கை எமக்கு வரவில்லை என்பதையே மீண்டும் மீண்டும் "இசைக்கு ஏது எல்லை" நிகழ்வுக்கு வருவோரின் எண்ணிக்கை தொக்கிநிக்கின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன அழுத்தம் -பூதாகர பிரச்சனையாக உங்கள் வாழ்க்கையில் உருவெடுக்கிறதா ? ஸ்ட்ரெஸ் எனும் சீரியஸ் பிரச்னை!

**வே**லை, வீடு என இரட்டைச் சுமை சுமக்கும் எல்லாப் பெண்களுமே அஷ்டாவதானிகள்தான். குடும்பத்துக்காக வேலையையோ, வேலைக்காக குடும்பத்தையோ விட்டுக் கொடுக்காமல், இரண்டையும் திறம்பட கையாளும் வித்தை தெரிந்த அவர்களுக்கு, தம்மையும் கவனித்துக் கொள்ள வேண்டும் என்பது மட்டும் ஏனோ மறந்து விடுகிறது. 'முடியலியே..' எனப் புலம்பிக் கொண்டாவது முடியாத காரியங்களையும் முடித்துவிட்டு அடுத்த வேலையைப் பார்க்கிற அவர்களுக்குத் தெரிவதில்லை, அது ஸ்ட்ரெஸ் எனப்படுகிற மன அழுத்தத்தின் ஆரம்பம் என்பது. அதை அப்படியே விட்டால் அடுத்தடுத்து தொடரப் போகிற அவதிகளையும் அறியாதவர் மாறும் அபாயம்

*ஸ்ட்ரெஸ் என்றால் என்ன?*

'ஐயோ.... என்னால சமாளிக்க முடியலையே..' என்கிற நினைப்புதான் ஆரம்பம். 'என் குழந்தைங்களுக்கு என்னால சரியான அம்மாவா இருக்க முடியலை. வேலையிடத்துலயும் என்னால சரியான நேரத்துக்கு வேலைகளை முடிக்க முடியலை... நான் என்ன பண் ணப் போறேன்...' என்கிற புலம்பல்கள் அடிக்கடி வந்தால், சந்தேகமே இல்லை. உங்களுக்கு ஸ்ட்ரெஸ் வந்து விட்டது. படபடப்பு, அழுகை, கோபம், எரிச்சல், தூக்கமின்மை, அதீத பசி போன்றவை ஸ்ட்ரெஸ்சின் அறிகுறிகள்.

*யாருக்கெல்லாம் ஸ்ட்ரெஸ் வரும்?*

வேலையையும் வீட்டையும் கவனிக்கிற ஒவ்வொரு பெண்ணுமே அசாதாரண மனுஷிதான். இரண்டு இடங்களிலும், எல்லா விஷயங் களிலும் 100 சதவிகிதம் பர்ஃபெக்ஷனை எதிர்பார்க்க ஆரம்பிக்கும் போதுதான் ஸ்ட்ரெஸ் வருகிறது. வேலைக்கும் போய்க் கொண்டு, வீட்டையும் பார்ப்பது என்றால், கொஞ்சம் அப்படி, இப்படித்தான் இருக்கும். ஏதோ சமாளித்தால் போதும் என நினைக்கிற பெண்களுக்கு ஸ்ட்ரெஸ் வருவதில்லை.

*எப்படிச் சமாளிப்பது?*

வேலையிடத்தில்-

வீடு, வேலை என இரண்டுக்கும் 50:50 முக்கியத்துவம் கொடுக்கப் பழகுங்கள். நிதான மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். வேலையை உங்கள் திறமைக்கான ஒரு வடிகாலாகப் பாருங்கள். படித்திருந்தும், ஒரு ஹவுஸ்ஒயிஃபாக நேரம் போக்காமலிருக்க, வேலை உங்களுக்கு ஒரு ஆறுதல். எனவே வேலை, வேலை என எந்நேரமும் அதைப் பற்றிய சிந்தனையில் ஓடுவதையும், அதிகமாக சம்பாதிக்க வேண்டும், பிள்ளைகளை மிகச் சிறந்த பள்ளிக்கூடத்தில் சேர்க்க வேண்டும், ஆடம்பர வாழ்க்கை வாழ வேண் டும் என்கிற அதிகபட்ச ஆசைகள் தேவையில்லை. அந்த ஆசைகளைத் தேடி ஓட ஆரம்பித்தால், நிச்சயம் ஸ்ட்ரெஸ்சை சந்தித்தாக வேண்டும்.

வேலைக்குச் செல்கிற பெண்களுக்கு அதிக பட்ச கால ஒழுக்கம் அவசியம். வீட்டில் இருப்பவர்கள் என்றால் நேரத்தை தன் வசமாக் கிக் கொள்ளலாம். வேலைக்குச் செல்கிற வர்களுக்கு நேர நிர்வாகம் மிக முக்கியம். உறவினர்களுக்கு, நண்பர்களுக்கு, அக்கம் பக்கத்து வீட்டாருக்கு எத்தனை மணித்துளிகளை ஒதுக்கலாம் எனத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். ஃபேஸ்புக்கோ, ட்விட்டரோ, டிவியோ, வேலைக்குச் செல்கிறவர்களின் களைப்பை நீக்கிப் புத்துணர்வு கொடுக்கும் ஒரு விஷயமாக இருக்க வேண்டுமே தவிர, உலகத்தை மறக்கும் அளவுக்கு அதிலேயே மூழ்கக்கூடாது.

வீட்டில். பெற்றோர், கணவரது உடன்பிறப்புகள் என உங்களுக்கு நெருங்கிய வட்டத்துடன் நல்ல நட்பை வளர்த் துக் கொள்வதுதான் முதல் தீர்வு. வேலைக்குச் செல்கிற எல்லா பெண்களுக்கும், குழந்தைகளை யார் பொறுப்பில் விடுவது என்கிற கவலை பெரிதாக இருக்கும். பிள்ளைகளுக்கு ஏதேனும் பிரச்னை என்றால், பெற்றோருக்கு அடுத்து, உடனடியாக தாத்தா— பாட்டி களின் மனசுதான் பதறும். எனவே அம்மா — அப்பா அல்லது மாமனார் — மாமியாரின் தயவைத் தக்க வைத்துக் கொள்ளும் டெக்னிக்கை கற்று வைத்திருப்பது நலம். சம்பளத்திலிருந்து ஒரு தொகையை அவர்களிடம் கொடுத்து, தேவையானதை வாங்கிக் கொள்ளச் சொல்லலாம். இன்னும் ஒருபடி மேலே போய், மொத்த சம்பளத்தையும்கூட அவர்களிடமே கொடுத்துவிட்டு, தேவைக்கேற்ப அவ்வப்போது பணம் வாங்கிக் கொள்ளலாம். அன்பாலும், பொறுப்பாலும் கட்டிப்போடுகிற இந்த டெக்னிக், உங்களு டைய பலவிதமான மன அழுத்தங்களை காணாமல் போகச் செய்யும்.



'என்ன சம்பாதிச்சு என்ன சுகத்தைக் கண்டோம்.... என்ன வாழ்க்கை' என அலுப்பு வருவது இயற்கைதான். அதை கோபமாக வார்த்தைகளிலோ, செயல்களிலோ யாரிடமும் வெளிப்படுத்தாதீர்கள். அம்மான்னாலே இப்படித்தான்.... எரிஞ்சு விழுவாங்க' என்கிற எண்ணம் உங்கள் பிள்ளைகளுக்குப் பதிந்து விடும்.

முடிந்த போதெல்லாம் உங்கள் குழந்தைகளைக் கட்டியணைத்து, முத்தமிடுங்கள். கணவன் உள்பட யாரிடமும், உதட்டுச் சுழிப்பிலோ, கண் அசைவிலோ கோபத்தையோ, வெறுப்பையோ வெளிப்படுத்தாதீர்கள். நீங்கள் எத் தனை பெரிய பொறுப்பில், பதவியில் இருந்தாலும், வீட்டுக்குள் அன்பான மனைவி யாக, எளிமையான அம்மாவாக உங்கள் ரோலை முழுமையாக அனுபவியுங்கள்.

உங்களையும் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள்-

முடியாத வேலைகளுக்கு 'நோ' சொல்லத் தயங்காதீர்கள். டென்ஷன் எல்லை மீறும் போது, ஓய்வெடுக்கத் தயங்காதீர்கள். வேலையிடத்தில் உங்களுக்கு அனுமதிக்கப்படுகிற விடுப்புகளை அவ் வப்போது எடுத்து விடுங்கள். லீவே எடுக்காமல் போய், கிரீடம் சுமப்பதில் மட்டுமே சுகம் காணாதீர்கள். அப்படி நீங்கள் எடுக்கும் லீவு ஒரே ஒரு நாளாக இல்லாமல், 36 மணி நேரம் முதல் 48 மணி நேரம் வரை இருந்தால்தான் உங்களை ரீசார்ஜ் செய்யும்.

ஓய்வு நேரத்தில் உங்களுக்குப் பிடித்தவற்றை மட்டுமே செய்யுங்கள். அது உங்கள் குழந்தைகளுடன் ஓடிப்பிடித்து விளையாடுவதா கவோ, உங்களுக்கு மிகப் பிடித்த இசையைக் கேட்பதாகவோ, பார்லர் சென்று அழகுப் படுத்திக் கொள்வதாகவோ, பழைய தோழி களை சந்திப்பதாகவோ எதுவாகவும் இருக்கலாம்.

'சம்பாதிக்கிற காசெல்லாம் இவ டிரெஸ்சுக்கும், மேக்கப்புக்குமே போகுது' என யாராவது பேசினாலும், காதில் போட்டுக் கொள்ளா தீர்கள். நல்ல உடையும், ஆபரணங்களும்கூட உங்களுக்கு ஒருவித தன்னம்பிக்கையைத் தரும். இவற்றை எல்லாம் கடந்தும், உங்களுக்கு ஸ்ட்ரெஸ் இருந்தால், மனநல மருத்துவர் அல்லது ஆலோசகரிடம் கவுன்சலிங் போகலாம். மூன்றாவது நபரிடம் மனதில் உள்ளதை எல்லாம் கொட்டும் போது பெரிய ஆறுதல் கிடைக்கும்.

அதற்கும் அடங்காத ஸ்ட்ரெஸ் என்றால் மனநல மருத்துவரின் பரிந்துரையின் பேரில் மாத்திரைகள் எடுத்துக் கொள்ளலாம். தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு எடுத்துக் கொள்கிற மருந்துகள், ஸ்ட்ரெஸ் அதிகரிக்கிற போது மட்டும் எடுத்துக்கொள்கிற மருந்துகள் என எத்தனையோ உண்டு.

ஆயுர்வேத சித்த மருத்துவத்தில் மனச்சிதைவுக்கு சலாம் போட்டு ஓடவைக்கும் மருந்துகள் மூலிகைகள் கொட்டிகிடக்கின்றன அவை மனதைமட்டும் அல்ல உடலையும் பலகீன படுத்துவதில்லை

சிறப்புசிகிச்சை சிரோதரா என்ற மருத்துவமுறை எப்படி பட்ட மனசிக்கல் அதனால் (ஸ்ட்ரெஸ் ஆல் வரும் தலைவலி தூக்கமின்மை போன்றவற்றை நிரந்தரமாக குணப்படுத்த முடியும்

**எழில்மதி பாலசந்திரன்**

Vasishta Ayuirvedic wellness

416-2916730



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கூட்டணி: தொடர்ந்து துரத்திய பேரவை... கை விரித்த விக்னேஸ்வரன்!

தமிழ்த்தேசியமக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அழைப்பின் பேரில் கடந்த சில மாதங்களுக்கு முன், ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் க.சிற்றம்பலம் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிலர் கலந்து கொண்ட கூட்டமொன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக பலமான தேர்தல் கூட்டணியொன்றை அமைப்பது தொடர்பில் பேசப்பட்டது.


எனினும், கூட்டத்தை முடித்துக் கொண்டு வெளியில் வந்த பேராசிரியர் சிற்றம்பலம், சித்தார்த்தனிடம் கூறினாராம், "இவர்கள் சொல்வதைக் கேட்டு தேவையில்லாமல் கூட்டமைப்பை விட்டு வெளியில் வர வேண்டாம். அது அவசியமில்லாத வேலை." என்று. அதற்கு சித்தார்த்தன், "இல்லை, நான் கூட்டமைப்பை விட்டு வெளியில் வர மாட்டேன். அதுவும், புதிய அரசியலமைப்பு சம்பந்தமாக பேசப்படுகின்ற முக்கியமான இந்தத் தருணத்தில் வெளியில் வர மாட்டேன்" என்றாராம். அப்போது, சிற்றம்பலம் கூறினாராம், " எனக்கு தமிழரசுக் கட்சித் தலைமையோடு பிரச்சினைகள் இருக்கு. அவர்களின் நிலைப்பாடுகள் சில ஏமாற்றமானதுதான். ஆனால், தமிழரசுக் கட்சிக்கு எதிரான கூட்டணியொன்றில் எந்தக் காரணம் கொண்டும் நான் சேர மாட்டேன்" என்று.



இப்போது இரண்டு விடயங்கள் முக்கியமாக பேசப்படுகின்றன. அதில் முதலாவது, தமிழ் மக்கள் பேரவையின் அனுசரணையோடும் ஒருங்கிணைப்போடும், ஈ.பி.ஆர். எல்.எப்., தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் சில இணைந்து அமைக்கப்போவதாகஅறிவித்துள்ள புதிய தேர்தல் கூட்டணி பற்றியது. இரண்டாவது, தமிழரசுக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டவர்கள் மற்றும் இடைநிறுத்தப்பட்டவர்கள் இணைந்து பேராசிரியர் சிற்றம்பலம் தலைமையில் அமைக்கப்போவதாக கூறப்படும் 'ஜனநாய (புதிய) தமிழரசுக் கட்சி' பற்றியது. அதில், முதலாவது விடயம் பற்றி இந்தப் பத்தி சில விடயங்களைப் பேச விளைகிறது.

கூட்டமைப்புக்கு எதிராக பலமான தேர்தல் கூட்டணியொன்றை அமைப்பது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் புலம்பெயர் தரப்புக்கள் சில ஒன்றிணைந்து 2010 பொதுத் தேர்தல் காலம் முதல் முயற்சிகளை மேற்கொண்டிருந்தன. ஆனாலும், அது சாத்தியமாகியிருக்கவில்லை. எனினும், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் 2015ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஏற்பட்ட முரண்பாடுகள் பல தரப்புக்களையும் மீண்டும் உற்சாகம் கொள்ள வைத்தன. அதுவும், 2015 பொதுத்தேர்தலில் கூட்டமைப்புக்கு எதிராக முதலமைச்சர் எடுத்த நிலைப்பாடானது, பலமான நம்பிக்கைகளை அந்தத் தரப்புக்களிடம் விதைத்தது. அதன்போக்கில், தமிழ் மக்கள் பேரவையின் (இணைத்) தலைமையை முதலமைச்சர் ஏற்றுக்கொண்டமையும் முக்கியமாக நோக்கப்பட்டது. தேர்தல் அரசியலுக்கு அப்பாலான அமைப்பு என்று பேரவை தன்னை முன்னிறுத்திக் கொண்டாலும், அது ஆரம்பிக்கப்பட்ட போது, கூட்டமைப்புக்கு எதிரான அமைப்பாகவே பல தரப்புக்களினாலும் உணரப்பட்டது. குறிப்பாக, தமிழரசுக் கட்சிக்கு எதிரான அமைப்பாகவே நோக்கப்பட்டது.

"பேரவை ஒரு கட்சியாகவோ, தேர்தல் அரசியல் அமைப்பாகவோ இருக்காது" என்று சி.வி.விக்னேஸ்வரன் அப்போது கூறியிருந்தார். அத்தோடு, கட்சியாகவோ, தேர்தல் அரசியல் அமைப்பாகவோ பேரவை உருமாறினால் தான் அதிலிருந்து விலகிவிடுவேன் என்றும் தெரிவித்திருந்தார். ஆனால், பேரவை ஆரம்பிக்கப்பட்டு 23 மாதங்களுக்குள்ளேயே, அது புதிய தேர்தல் கூட்டணியொன்றை அமைப்பது தொடர்பிலான நிலைப்பாட்டுக்கு வந்திருக்கின்றது. அதுவும், சி.வி.விக்னேஸ்வரனின் ஒத்துழைப்பும் ஆசிர்வாதமுமின்றி.

பேரவையின் கூட்டமொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ். பொது நூலகத்தில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் முதலமைச்சர் தலைமையுரையாற்றினார். அப்போது, புதிய தேர்தல் கூட்டணியை அமைப்பது தொடர்பில் பேரவையின் முக்கியஸ்தர்களும், பேரவையில் அங்கம் வகிக்கும் கட்சிகள் சிலவும் வெளிப்படுத்திவரும் நிலைப்பாட்டுக்கு தன்னுடைய எதிர்ப்பினை வெளியிட்டதுடன், சுய கட்சி அரசியல் நலன்களை புறந்தள்ளி நடக்க வேண்டும் என்கிற விடயத்தையும் முன்வைத்தார். முதலமைச்சருக்குப் பின்னர் உரையாற்றிய சுரேஷ் பிரேமச்சந்திரன், முதலமைச்சரின் உரை தமக்கு ஏமாற்றமளிப்பதாக கூறினார். அதனை, வழிமொழிந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் உரையாற்றிக் கொண்டிருக்கும் போது, தனக்கு வேறு வேலைகள் இருப்பதாக கூறி முதலமைச்சர் கூட்டத்திலிருந்து வெளியேறிவிட்டார்.



கூட்டத்திலிருந்து இடைநடுவில் வெளியே வந்த முதலமைச்சரிடம் புதிய தேர்தல் கூட்டணி தொடர்பிலான கேள்விகள் ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்டது. அதற்கு அவர், "தமிழ் மக்கள் பேரவை மக்களுக்காக உருவாக்கப்பட்ட ஒரு இயக்கம். அந்த இயக்கத்தினை அரசியல் கட்சியாக உருவாக்க முடியாது. அவ்வாறு உருவாகவும் இடமளிக்க முடியாது", என்று பதிலளித்தார்.

முதலமைச்சர் வெளியேறி பின்னரும் தொடர்ந்த பேரவைக் கூட்டத்தில், பெரும்பான்மையினர் புதிய தேர்தல் கூட்டணியை அமைப்பது தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டில் இருந்தார்கள். அது தொடர்பிலேயே அதிகமாக உரையாடப்பட்டது. முதலமைச்சரின் நிலைப்பாட்டை ஒட்டி பேரவையின் மற்றொரு

**முதலமைச்சர் வெளியேறி பின்னரும் தொடர்ந்த பேரவைக் கூட்டத்தில், பெரும்பான்மையினர் புதிய தேர்தல் கூட்டணியை அமைப்பது தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டில் இருந்தார்கள். அது தொடர்பிலேயே அதிகமாக உரையாடப்பட்டது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இணைத் தலைவரான ரி.வசந்தராஜா உரையாற்றிய போது, பேரவையின் முக்கியஸ்தரான ஜனாதிபதி சட்டத்தரணியொருவர், அதனைக் கடுமையாக எதிர்த்ததுடன், புதிய தேர்தல் கூட்டணி அவசியம் என்பதை வலியுறுத்தினார். இந்தக் கூட்டத்தின் நிறைவில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட சுரேஷ் பிரேமச்சந்திரனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் புதிய தேர்தல் கூட்டணி பற்றிய அறிவிப்பு ஓரிரு நாட்களில் பேரவையினால் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் என்றும் கூறினர். இந்தப் பத்தி (செவ்வாய்க்கிழமை காலை) எழுதப்படும் வரையில் அந்த அறிவிப்பு வெளியாகியிருக்கவில்லை.

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் பேரவை, தமிழரசுக் கட்சியின் புதிய (மாற்று) அணி மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்தால் பலமான தேர்தல் கூட்டணியொன்றை அமைக்க முடியும் என்பது பேரவையிலுள்ள முக்கியஸ்தர்களினதும், சில கட்சித் தலைவர்களினதும் நிலைப்பாடு. அதற்கான வாய்ப்புக்களை உருவாக்குவது தொடர்பில் அவ்வப்போது காய்களும் நகர்த்தப்பட்டன. குறிப்பாக, 'எழுக தமிழ்' நிகழ்வுகளை முன்னிறுத்தி மக்களைத் திரட்டிக் காட்டுவதனூடு முதலமைச்சரை கூட்டமைப்பிலிருந்து முழுமையாக வெளியேற்ற முடியும் என்றும், அதனூடு ஊடகக் கவனத்தைப் பெற்று புதிய அணிக்கான நம்பிக்கையை மக்களிடம் விதைக்க முடியும் என்றும் அவர்கள் நம்பினார்கள்.

தமிழரசுக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கையளித்த போது, அதற்கு எதிராக வெளிப்பட்ட மக்களின் கோபத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முடியும் என்றும் அவர்கள் நம்பினார்கள். அதன்போக்கில், முதலமைச்சருக்கு ஆதரவு தெரிவிக்கும் ஹர்த்தாலுக்கான அழைப்பினை முதல்நாள் மாலை 05.00 மணிக்கு விடுக்கும் அளவுக்கு பேரவை தன்னுடைய நிலையை பொறுப்புணர்வின்றி தாழ்த்தியும் கொண்டது. அந்த ஹர்த்தாலையும், அதனோடு ஒட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பேரணியையும் கூட்டமைப்பிலிருந்து முதலமைச்சரை ஒட்டுமொத்தமாக பிரித்தெடுப்பதற்கான தருணமாக பேரவையும், அதிலிலுள்ள புளொட் தவிர்த்த கட்சிகளும் கையாண்டன. ஆனால், அப்போதும், முதலமைச்சர் ஒரு காலை முன்வைத்து, சடுதியாக பின்னோக்கி வந்து இரா.சம்பந்தனோடு இணங்கி, பேரவைக்காரர்களின் நம்பிக்கையைத் தகர்த்தார்.

அதன்பின்னர், முதலமைச்சர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த தருணமொன்றில் அவரைச் சந்தித்த பேரவையின் மற்றொரு இணைத் தலைவரான மருத்துவர் பூ.லக்ஷ்மன், புதிய தேர்தல் கூட்டணியின் முக்கியத்துவம் குறித்து நீண்ட நேரம் விளக்கமளித்தாராம். அதனை முழுவதுமாக கேட்டுக்கொண்டிருந்த முதலமைச்சர், இறுதியில் கூறினாராம், சித்தார்த்தன் புதிய தேர்தல் கூட்டணியில் இணைந்தால், தானும் இணைவதாக. அன்றிருந்துதான் பேரவைக்காரர்களும், அதிலுள்ள கட்சிக்காரர்களும் சித்தார்த்தனை துரத்த ஆரம்பித்திருக்கின்றார்கள். அவரை, கூட்டமைப்பிலிருந்து பிரித்தெடுத்தால் புதிய கூட்டணியை இலகுவாக அமைக்க முடியும் என்று.

அதன்போக்கில், கடந்த ஞாயிற்றுக்கிழமை காலையும் சித்தார்த்தனை தொலைபேசியில் அழைத்த பேரவையின் முக்கியஸ்தர் ஒருவர் ஒன்றரை மணித்தியாலங்கள், புதிய கூட்டணியில் இணைய வேண்டும் என்று வலியுறுத்திப் பேசியிருக்கின்றார். அதன்போது பதிலளித்த சித்தார்த்தன், " முதலமைச்சரும், நானும், பேரவையும், சுரேஷும், கஜனும் இணைந்தால் பலமான கூட்டணி அமைக்கலாம் என்பதை ஒப்புக்கொள்கிறேன். அது, கூட்டமைப்பின் வெற்றி வாய்ப்பினையும் குறைக்கும். ஆனால், புதிய அரசியலமைப்புக்கான வாய்ப்புக்களை தமிழ்த்தரப்புக்கள் குழப்பின என்கிற அவப்பெயர் ஏற்படுவதை நான் விரும்பவில்லை. அரசியலமைப்பு வருகிறதோ இல்லையோ, அதன் இறுதிக் கட்டம் வரையில் நான் இருப்பதை விரும்புகிறேன். நான் உபகுழுவின் தலைவராக வேறு இருந்திருக்கின்றேன். இந்தத் தருணத்தில் கூட்டமைப்பைவிட்டு வெளியில் வருவது சரியல்ல" என்று பதிலளித்தாரம். ஆக, சித்தார்த்தன் கூட்டமைப்பிலிருந்து வெளியேற மாட்டார் என்பதை ஏற்கனவே உணர்ந்த முதலமைச்சர், அவரைக் காட்டிக் கொண்டு பேரவைக்காரர்களிடமிருந்து தப்பித்திருக்கின்றார். இதனால், பலமான கூட்டணியொன்றை அமைப்பதற்கான வாய்ப்புக்களை பேரவை இழந்திருப்பதாக அதன் முக்கியஸ்தர் ஒருவர் இந்தப் பத்தியாளரிடம் கூறினார்.

புதிய தேர்தல் கூட்டணி பற்றிய நிலைப்பாட்டில் 'மகர யாழை' தேர்தல் சின்னமாக பெறுவது வரையில் பேரவை உரையாடல்களை நடத்தியிருக்கின்றது. ஆனால், பேரவையின் மூன்று இணைத் தலைவர்களில் சி.வி.விக்னேஸ்வரனும், ரி.வசந்தராஜாவும் தேர்தல் கூட்டணி அமைப்புக்கு எதிராக இருக்கின்றார்கள். சித்தார்த்தனையும் கூட்டமைப்பிலிருந்து பிரித்து உள்ளே இழுத்து வர முடியவில்லை. அப்படியான நிலையில், பேரவையின், புதிய தேர்தல் கூட்டணிக்கான முதல் அடியே பெரும் சறுக்கலோடு ஆரம்பித்திருப்பதாக கொள்ள முடியும்.

**புருஜோத்தமன் தங்கமயில்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பிக்குகள் அமைப்பு சர்வாதிகார ஆட்சிக்கு அழைப்பு விடுக்கின்றது



"புதிய அரசியலமைப்பு ஒன்று அவசியமில்லை என அஸ்கிரி—மல்வத்த தலைமை பிக்குகள் கூறுகின்றனர்" என்ற தலைப்பின் கீழ், இலங்கை ஊடகங்கள் கடந்த வியாழன் அன்று பிரதான செய்தி ஒன்றை வெளியிட்டன.

புதன் கிழமை கூடிய மல்வத்த மற்றும் அஸ்கிரி பீடங்களின் பிக்குகள் செயற் குழுவானது, அரசியலமைப்பு சபையின் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை பற்றி கலந்துரையாடியதன் பின்னர், குறிப்பிட்ட கடைசி அறிக்கையை வெளியிட்டதாக அந்த செய்திகளில் தெரிவிக்கப்பட்டது. கடந்த செப்டெம்பர் 21, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவினால், அரசியலமைப்புச் சபைக்கு இந்த இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. 2016 ஆரம்பத்தில் அரசாங்கம், எதேச்சதிகாரமான முறையில் இலங்கை பாராளுமன்றத்தை அரசியலமைப்பு சபையாக மாற்றியது.

சோசலிச சமத்துவக் கட்சியானது (சோ.சக.), மைத்திரபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் அமெரிக்க சார்பு அரசாங்கத்தையும் அதன் ஜனநாயக—விரோத அரசியலமைப்பு நடவடிக்கையையும் முழுமையாக எதிர்க்கின்றது.

அதேபோல், சோ.ச.க., பௌத்த பிக்குகளின் தலைக்கனம் மிக்க பிற்போக்கு கருத்துக்களை கண்டனம் செய்கின்றது. இலங்கையின் பிரதான பிக்கு குழுக்கள் இரண்டினது கமிட்டி கூட்டங்களின் பின்னர், மல்வத்த மகா விகாரையின் உபதலைவர் கிம்புல்கும்புரே விமலதர்ம, ஊடகங்களுக்கு பின்வருமாறு கூறினார்.

"இந்த அரசியலமைப்பின் மூலம், அதிகாரம் பகிரப்படுவதோடு முழு பாராளுமன்றத்திற்கும் அல்லாத அதிகாரம் பிரதேச சபைகளுக்கும் மாகாண சபைகளுக்கும் கொடுக்கப்படுகின்றது. இதனால், இந்த அரசியலமைப்பு பொருத்தமற்றது. நாமும் இந்த அரசியலமைப்பை பொருத்தமற்றது என தீர்மானித்தோம். புதிய அரசியலமைப்பு ஒன்று அவசியம் இல்லை என நாமும் கூறுகின்றோம். இப்போது உள்ள அரசியலமைப்பு எமக்கு நல்லது. இந்த அரசியலமைப்பை சுருட்டிவைக்குமாறு நாம் அரசாங்கத்திற்கு கூறுகின்றோம்."

இந்த பௌத்த பிக்குகள் குழு, நாட்டின் அரசியலமைப்பை பற்றி அணையிடும் உரிமையை தன் கையில் எடுத்துக்கொண்டுள்ளதுடன் மக்களால் நிராகரிக்கப்பட்ட இப்போதுள்ள எதேச்சதிகார அரசியல் யாப்பை புகழ்கின்றது. சுருக்கமாகக் கூறினால், சிங்கள பௌத்த பேரினவாதத்தை உச்சத்தில் வைக்கும் எதேச்சதிகார அரசியலமைப்பையே இந்த பிக்குகள் கோருகின்றனர்.

திங்களன்று கூடிய கோட்டே சங்க சபையும், இதே போன்ற தீர்மானத்தை எடுத்துள்ளதாக பிக்குகளின் பிரச்சாரத்திற்கு முண்டு கொடுக்கும் ஊடகங்கள் தூக்கிப் பிடித்தன.

இலங்கையில் தொழிலாளர்—ஒடுக்கப்பட்ட மக்களது கொடூரமான அனுபவமும் அவர்களது நிலைப்பாடும் முற்றிலும் மாறுபட்டதாகும். ஜே.ஆர். ஜயவர்தனவின் அரசாங்கம், மக்களின் வரையறுக்கப்பட்ட ஜனநாயக மற்றும் சமூக உரிமைகளையும் நசுக்குவதற்காக 1978ல் இந்த அரசியலைமைப்பை நிறைவேற்றியது. 1980ல் 180,000 அரசாங்க ஊழியர்களை வேலைநீக்கம் செய்யவும், 30 ஆண்டுகள் பூராவும் இனவாத யுத்தத்தை முன்னெடுக்கவும், 1988—1990 காலப் பகுதியில் கிராமப்புற இளைஞர்கள் 60,000 பேர் கொல்லப்பட்ட இரத்தக்களரி ஒடுக்குமுறையை கட்டவிழ்த்துவிடவும், இன்னும் பல தாக்குதல்களை முன்னெடுக்கவுமே இந்த அரசியலமைப்பு பயன்படுத்தப்பட்டது. மக்கள் மீதான இந்த கொடூரமான தாக்குதல், பெரும் முதலாளிகளதும் சர்வதேச மூலதனத்தினதும் தேவைகளை இட்டு நிரப்புவதன் பாகமாக இடம்பெற்றவை ஆகும். பௌத்த ஸ்தாபனம் இந்த தாக்குகளுக்கு ஒத்துழைப்பு கொடுத்தது.

1994ல் இருந்தே, சிறிசேன உட்பட ஆட்சிக்கு வந்த அனைத்து ஜனாதிபதிகளும், இந்த அரசியலமைப்பின் மீதான மக்களின் எதிர்ப்பை சுரண்டிக்கொள்வதற்காக நிறைவேற்று ஜனாதிபதி முறையை தூக்கி வீசி "ஜனநாயக அரசியலைமைப்பை" கொண்டு வருவாதாக பொய் வாக்குறுதி கொடுத்தனர். ஆனால், பதவிக்கு வந்த பின்னர் அதைப் பற்றிக்கொண்டு சாதாரண மக்களுக்கு எதிராக, எதேச்சதிகார அதிகாரங்களை கொடூரமாக பயன்படுத்தினர்.

சர்வாதிகார அதிகாரம் கொண்ட இனவாத அரசியலமைப்புக்கான பிக்குகளின் பிரச்சாரமானது எந்த வகையிலும் குறைத்து மதிப்பிடக் கூடாதது.

நிலப்பிரபு மரபைச் சார்ந்த பௌத்த ஸ்தாபனம், சுரண்டல் முறையில் தங்கியிருக்கின்ற அதனுடன் பின்னிப் பிணைந்த முதலாளித்துவ வர்க்க ஆட்சியின் பாகமாகும். அதன் பிரதிநிதிகள், ஆளும் தட்டைப் போலவே அபிவிருத்தியடையும் சமூக வெடிப்புகளால் தமது நலன்கள் மற்றும் வரப்பிரசாதங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் ஏன்று பீதியடைந்துள்ளனர். தொழிலாளர்கள் வறியவர்கள் இளைஞர்கள் மத்தியில் வளச்சியடைந்து வரும் போராட்டங்களை நச்சுக்குவதற்காக, இப்போது அவசிப்படுவது எதேச்சதிகார ஆட்சியே என்பதை அவர்கள் ஆட்சியாளர்களுக்கு அறிவுறுத்துகின்றனர்.

புதிய சுற்று தமிழர் விரோத அலையை கிளறி விடும் முயற்சியாகவே இந்த பௌத்த பிக்குகள், அரசியலைமைப்பு பிரேரணை நாட்டின் ஒரு பகுதியை தமிழ் மக்களுக்கு கொடுத்து இலங்கையை பிளவுபடுத்துவதற்கு உதவுகின்றது என கூச்சலிடுகின்றனர். இந்த விஷமத்தனமான சுலோகம், தொழிலாள வர்க்கத்தை பிளவுபடுத்தி இனவாத மோதல்களை தூண்டிவிட்டு, முதலாளித்துவ ஆட்சியை பேணுவதற்காக எப்போதும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

உலக முதலாளித்துவ வீழ்ச்சியினால் ஆழமடைந்து வரும் தற்போதைய பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நெருக்கடியின் மத்தியில், அரசாங்கத்தைப் போலவே, மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு முயற்சிக்கும் முன்னால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான வலதுசாரி கும்பலும், பிக்குகளின் வரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அழைப்பு விடுத்துக்கொண்டிருகின்றன. இலங்கையில் முதலாளித்துவ தட்டின் அனைத்து கன்னைகளும் பிற்போக்கு பௌத்த ஸ்தாபனத்தில் தங்கியிருப்பது, அதை தொழிலாளர்களுக்கு எதிராகப் பயன்படுத்திக்கொண்டு, முதலாளித்துவ அமைப்பு முறையை பாதுகாத்துக்கொள்வதற்கே.

அரசியலமைப்பின் மூலம் நாடு பிளவுபடுகின்றது எனக் கூறி, அரசாங்கத்தின் திட்டத்தை கண்டனம் செய்து இராஜபக்ஷ அக்டோபர் 16 அன்று அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதன் குறிக்கோள், அரசாங்கத்துக்கு எதிரான வெகுஜன அதிருப்தியை இனவாத பாதையில் தடம்புரளச் செய்வதும் இனவாத பிரச்சாரத்தை தீவிரமாக்குவதுமாகும்.

விக்கிரமசிங்க, பிக்குகளின் கடைசி அறிக்கையின் ஒரு நாளுக்கும் பின்னர் நடந்த ஊடக சந்திப்பில், குறைந்த பட்சம் மல்வத்த மாநாயக்க தேரர்கள் உட்பட பௌத்த பிக்குகளின் ஒரு குழுவேனும் அரசாங்கத்தின் அரசியலமைப்பு திருத்த முயற்சிகளுக்கு ஒத்துழைப்பதாக காட்டும் ஒரு பரிதாப முயற்சியில் ஈடுபட்டார்.

அரசியலமைப்பு சபை வழிகாட்டல் குழுவின் அறிக்கையில், "பௌத்த மதத்துக்கு முதலிடம்" கெடுக்கப்படும் என்பது மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பு சபைக்கு அந்த அறிக்கையை முன்வைத்த விக்ரமசிங்க, "அறிக்கையில்" முதல் பந்தியிலேயே இலங்கை "ஒற்றை ஆட்சியாக இருக்க வேண்டும்" என பிரேரிப்பதாக கூறியுள்ளார். மேலும் கூறிய அவர், "பௌத்த நாடாக இருப்பது பற்றி நாம் பெருமைப்படுகிறோம். எமது அரசியலமைப்பு இந்த நிலைமையை பாதுகாக்கின்றது. பௌத்த அடைப்படைகள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையிலேயே புதிய அரசியலைப்பு உருவாக்கப்படுகிறது," என்றார்.

தேரர்களை கௌரவிப்பதற்காக, செப்டெம்பர் 29 அம்பாறையில் நடந்த ஒரு விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி சிறிசேன, "நாட்டின் ஒற்றையாட்சிக்கு குந்தகம் ஏற்படும் அரசியலமைப்புக்கு நான் எப்போதும் இடம் கொடுக்கமாட்டேன், அதேபோல், நடப்பில் உள்ள அரசியலமைப்பில் பௌத்தத்துக்கு கிடைத்துள்ள முதன்மை நிலையை மாற்றுவதற்கு அனுமதிக்க மாட்டேன்" என கர்ஜித்தார்.

சிறிசேன—விக்ரமசிங்க மற்றும் ஆளும் கும்பலின் ஏனைய பகுதியினரும், அட்டாங்க நமஸ்காரம் செய்து பௌத்த துறவிகளிடம் வரம் கேட்பது, பிற்போக்கு சக்திகளை தூக்கி நிறுத்தி முண்டு கொடுப்பதற்கே ஆகும். அவர்களின் ஆசீர்வாதத்தில் வளரந்த பாசிச பொதுபல சேனா, ராவணா பலய போன்ற அமைப்புகள், பௌத்த அடிப்படைவாதத்தின் உண்மையான கொடூர முகத்தை காட்டுகின்றன.

இலங்கை ஆளும் வர்க்கமும் பேரினவாத கும்பல்களும் தமது செயற்பாடுகளுக்கு தமிழ் முதலாளித்துவம் காட்டும் இனவாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிபலிப்புகளைதூக்கிப்பிடிக்கின்றன. சம உரிமை, சமஷ்டி மற்றும் பிரவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுத போராட்டத்தில் கோரிய தனியான அரசு போன்று, தமிழ் முதலாளித்துவ பிரதிநிதிகள் தமது இனவாத பிரதிபலிப்பை வெளிப்படுத்தியுள்ளனர். தமது வர்க்க நலன்களை தேடும் தமிழ் முதலாளித்துவத்தின் நிலைப்பாடுகளை சோ.ச.க.யும் அதன் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் தொடந்தும் எதிர்த்து வந்துள்ளன. அதன் சிறப்புரிமை கோரிக்கைள் தமிழ் தொழிலாள வர்க்கத்தையும் ஏழைகளையும் சுரண்டுவதற்கான உரிமையை கோருவதாகும். ஆயினும், பிரதான பொறுப்பாளிகள், சிறுபான்மையினருக்கு எதிராக திட்டமிட்டு பாரபட்சங்களை செய்த சிங்கள ஆளும் வர்க்கத்தினரே ஆவர். பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் இருந்தே, இந்த பலவீனமான வர்க்கம் தமது காலனித்துவ எஜமானர்களுக்கு சேவை செய்ததோடு எழுச்சியடைந்து வந்த தொழிலாள வர்க்கத்தை பிளவுபடுத்துவதற்காக இனவாதத்தை பயன்படுத்திக்கொண்டது.

பெயரளவிலான சுதந்திரத்தின் பின்னர், நாட்டில் ஜனநாயக கடமைகளை அல்லது சமூக பிரச்சினகளை தீர்க்க இலாயக்கற்ற இலங்கை முதலாளித்துவம், இனவாத நச்சுக் கருவியை கூர்மைப்படுத்தி, முதலில் தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜா உரிமை மற்றும் வாக்குரிமையை அபகரித்தது. வர்க்கப் போராட்டங்களின் வெடிப்புடன் அரசியல் நெருக்கடியும் உக்கிரமடைந்ததுடன், ஆளும் வர்க்கம் 1956ல் சிங்களம் மட்டும் என்ற பிரச்சாரத்தை கையில் எடுத்ததுடன் 1972 மற்றும் 1978 அரசியல் யாப்புகளுக்குள் சிங்கள மொழிக்கும் பௌத்த மதத்துக்கும் முன்னிலை இடம் கொடுத்து, இன மற்றும் மத பிளவை ஆழப்படுத்தியது.

இலங்கையில் ட்ரொட்ஸ்கிச இயக்கம், இந்த இனவாத தாக்குதல்களுக்கு எதிராக, தொழிலாள வர்க்கத்தை ஐக்கியப்படுத்தியது. எனினும் 1964ல். லங்கா சம சமாஜக் கட்சியானது, ஸ்ராலினிச கம்யூனிஸ்ட் கட்சியுடன் சேர்ந்து, சிறிமா பண்டாரநாயக்கவின் முதலாளித்துவ கூட்டரசாங்கத்தில் சேர்ந்து, சர்வதேச சோசலிச கொள்கைகளை காட்டிக்கொடுத்தது. அது முதல் ல.ச.ச.க. மற்றும் ஸ்ரானிஸ்டுகளின் ஒத்துழைப்புடன் இனவாத தாக்குதல்களை மேலும் உக்கிரமாக்குவதற்கு ஆளும் கும்பலால் முடிந்தது.

போலி இடதுகள் பௌத்த பிக்களை திருப்திப்படுத்த அரசாங்கத்தின் பிரச்சார வண்டியில் ஏறியுள்ளன. வெள்ளிக்கிழமை ஒக்டோபர் 20 அன்று பத்திரிகையாளர் மாநாட்டை நடத்திய, பிரஜைகள் சக்தி அமைப்பின் காமினி வியங்கொடவும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தொழிற்சங்க பிரிவின் சமன் ரத்னப்பிரியவும், மல்வது பீடத்தின் தலைமை பிக்குவும் மற்றும் பிக்குகள் குழுவின் ஒரு பகுதியினரும் அரசியலமைப்பு பிரேரணைகளை எதிர்க்கவில்லை என விக்கரமசிங்க சொல்லியதை மீண்டும் உச்சரித்தனர். பௌத்த பேரினவாத பிரச்சாரத்துக்கு அடிபணிந்துள்ள இவர்கள், தொழிலாளர்களுக்கும் வறியவர்களுக்கும் எதிரான இயக்கத்தையும் பிற்போக்கு சிந்தனைகளையும் ஊக்குவிப்பதில் ஈபட்டுள்ளனர்.

போலி இடது நவ சம சமாஜக் கட்சியின் விக்ரமபாகு கருணாரட்ன, சடவாத மார்க்சிசத்தை கருத்துவாத பௌத்த மதத்துடன் முடிச்சுப் போடும் பிற்போக்கு முயற்சியில் ஈடுபட்டு பேரினவாத பிரச்சாரத்துக்கு முண்டு கொடுப்பதை நீண்டகாலமாக செய்து வருகின்றனார். முதலாளித்துவ வர்க்கத்தின் ஏதாவதொரு குழுவுக்கு ஒத்துழைப்பு கொடுத்துவரும் இந்த கும்பல், தற்போது சிறிசேன—விக்ரமசிங்க அரசாங்கத்திற்கு ஒத்து ஊதுகின்றது.

சிங்கள—பௌத்த மேலாதிக்கத்தை அரசியலமைப்புக்குள் ஸ்தாபிப்பது பிற்போக்கானதும் முற்றிலும் ஜனநாயக விரோத நடவடிக்கையுமாகும். முற்போக்கு நிலைப்பாடு எதுவெனில், அரசில் இருந்து மதத்தை பிரித்து, ஜனநாயக மதச் சார்பற்ற அரசை ஸ்தாபிப்பதே ஆகும். பௌத்தத்தை அல்லது ஏனைய மதங்களை பின்பற்றுவது தனிநபர் விருப்பமாக இருத்தல் வேண்டும். அரசு எந்த மதத்துக்கும் அனுசரணை மற்றும் வரப்பிரசாதம் கொடுக்கக் கூடாது. வர்க்கம், மதம், ஆண், பெண் மற்றும் பாலின அடிப்படையிலான வேறுபாடுகளுக்கு எதிராக, ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டதே சமத்துவமாகும்.

அரசாங்கத்தினதும் இராஜபக்ஷ குழுவினதும் ஒத்துழைப்பு பெறும் பௌத்த பிக்குகளின் பிற்போக்கு பிரச்சாரங்களை உழைக்கும் மக்கள் எதிர்க்க வேண்டும். இந்த பிரச்சார புகையின் மறைவில் அரசாங்கமும் ஆளும் வர்க்கமும், சர்வாதிகாரத்துக்கு திட்டமிடுகின்றன.

பூகோள முதலாளித்துவம் அழுகி நாற்றமெடுக்கும் நிலைமையின் கீழ், அனைத்து நாடுகளிலும் ஆளும் வர்க்கங்கள் தேசியவாதத்தையும் மதவாதத்தையும் புலம்பெயர்ந்து வந்தவர்கள் மீதான பீதியையும் கிளறிவிடும் பிரச்சாரங்களின் மூலம், தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான இயக்கங்களை கட்டியெழுப்ப முனைப்பு காட்டுகின்றன. டொனால்ட் ட்ரம்ப் ஆட்சிக்கு வந்தது முதல், ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் வலதுசாரி மற்றும் பாசிச கட்சிகளின் வளர்ச்சியை கடந்த பல மாதங்களாகக் காணக் கிடைத்தது. அயலில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இந்து அடிப்படைவாத பாரதீய ஜனதாக கட்சி அரசாங்கம், தொடர்ச்சியாக முஸ்லிம் எதிர்ப்பை கிளறிவிடுகின்றது.

இன்று முதலாளித்துவத்திடம் இருந்து வெகுஜனங்களுக்கு சர்வாதிகாரம், சமூக உரிமைகள் பறிப்பு மற்றும் போரைத் தவிர வேறு எதுவும் கிடைப்பதில்லை. இதற்கு எதராகப் போராடுவதற்காக தொழிலாள வர்க்கம் முதலாளித்துவத்தின் சகல கன்னைகளிலும் மற்றும் அதன் முகவர்களிடம் இருந்து பிரிந்து, சோசலிச சர்வதேசவாத கொள்கையின் அடிப்படையிலான சுயாதீன அரசியல் இயக்கத்தை கட்டியெழுப்ப வேண்டும். தெற்காசியாவிலும் மற்றும் உலகம் முழுதும் சோசலிசத்திற்கான போராட்டத்தின் பாகமாக, ஸ்ரீலங்கா—ஈழம் சோசலிச குடியரசை, அதாவது தொழிலாளர்—விவசாயிகள் அரசாங்கத்துக்காக முன்னெடுக்கும் போராட்டத்திலேயே, இலங்கையில் ஜனநாயக உரிமைகளை ஸ்தாபிப்பது பிணைந்துள்ளது.

By K. Ratnayake

அரசாங்கத்தினதும் இராஜபக்ஷ குழுவினதும் ஒத்துழைப்பு பெறும் பௌத்த பிக்குகளின் பிற்போக்கு பிரச்சாரங்களை உழைக்கும் மக்கள் எதிர்க்க வேண்டும். இந்த பிரச்சார புகையின் மறைவில் அரசாங்கமும் ஆளும் வர்க்கமும், சர்வாதிகாரத்துக்கு திட்டமிடுகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குத்து வெட்டு ஆரம்பம்

**மு**தல் மழைக்கே முளைவிடும் காளான்கள் போல ஒவ்வொரு தேர்தல் நெருங்கும் போதும் கூட்டமைப்புக்குள் முரண்பாடுகள் முற்றித் தணிவது வழமையானவை.

இவை ஒன்றும் மக்கள் நலன் சார்ந்தவையமல்ல. கட்சிகளுக்கான ஆசனப் பங்கீடு தொடர்பிலேயே இந்தக் குத்துவெட்டுக்களும், குத்துக் கரணங்களும்.

தற்போது தமிழ் மக்களை ஒரு தேர்தல் நெருங்கி வருகின்றது என்பதற்கான சமிக்ஞைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்களின் பதற்றங்களும் படபடப்புகளும் வெளிப்படுத்தி நிற்கின்றன.



வழமை போன்று கூட்டமைப்பின் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சிக்கும், பங்காளிக் கட்சிகளுக்குமிடையே அறிக்கைப்போர் ஆரம்பமாகி உச்சம் பெற்று வருகின்றது.

கூட்டமைப்பின் பங்காளியான ஈ.பீ.ஆர்.எல்.எப். கட்சித் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனும், தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரனும் வழமைபோன்று முஷ்டியை முறுக்கிக் கொண்டு களத்தில் இறங்கி வார்தைப் போரை ஆரம்பித்து த்திருக்கின்றனர்.

ஆனால், இம்முறை முரண்பாடுகளின் போக்கு பல்வேறு சந்தேகங்களையும், கேள்விகளையும் எழுப்புகின்றது.

இதுவரை, ஆசனப்பங்கீடு தொடர்பில் கட்சிகளுக்கிடையே பிரச்சினைகள் இடம் பெற்றபோதும், வெளிப்படையாகக் கட்சிகள் விமர்சிக்கப்படவில்லை.

ஆனாலும், தற்போது ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சி எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிடப் போவதில்லை என்று வெளிப்படையாகவே அறிவித்துள்ள ந்லையில் கூட்டமைப்பைவிட்டு யாரும் எப்போதும் வெளியேறலாம். அதற்கான சுதந்திரம் அனைவருக்கும் உண்டு என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பதில் கருத்தொன்றை வெளியிட்டிருக்கிறார்.

தமிழரசுக் கட்சி கூட்டமைப்பில் இருந்து பங்காளியான ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியை வெளியேற்றும் அதேசமயம் ஏனைய ரெலோ, புளொட் கட்சிகளை அரவணைத்துக் கொண்டு உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்வதன் மூலம் வெற்றியை உறுதிப்படுத்த முடியும் என்பதில் நம்பிக்கையோடு செயற்படுவதாகவே தென்படுகின்றது. தற்போதைய அரசியல் சூழலில் தமிழரசுக் கட்சி தனித்துக களமிறங்குவதில் தயக்கம் காட்டும் என்பதே அரசியல் நோக்கர்களின் கருத்தாகக் காணப்படுகின்றது.

மறுபுறத்தில் கூட்டமைப்பின் பங்காளிகள் ஏனைய கட்கிளையும் இணைத்துக் கொண்டு வடக்கின் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற வடமாகாண முதலமைச்சரை இணைத் தலைவராகக் கொண்டு உள்ளூராட்சித்தேர்தலில் களமிறங்கும் வியூகம் வகுத்து வருவதாக பங்காளிக் கட்சிகளின் ஆதரவாளர்களிடையே அரசல், புரசலாக செய்திகள் வெளிக்கிளம்பியிருக்கிறது.

தமிழரசுக் கட்சியைத் தனித்து விட்டு தாம் கூட்டாகக் களமிறங்கினால் வெற்றியைத் தமதாக்க முடியும் என்ற நம்பிக்கையில் கூட்டமைப்பின் தமிழரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய பங்காளிகள் நம்புவதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் மீது நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தி பதவி நீக்க முயன்றபோது ஏற்பட்ட மக்கள் புரட்சி மற்றும் 20 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் இடைக்கால அறிக்கையினை அரசுடன் சார்ந்து நின்று ஆதரிக்கும் தமிழரசுக் கட்சியின் போக்கு, அரசியல் கைதிகளின் விடயம் என்பவற்றை பிரசார உத்தியாகக் கொள்வதால் தமிழரசுக் கட்சி மீதான மக்களின் கோபத்தை தமக்கு ஆதரவாகத் திரட்ட முடியும் என்ற நம்பிக்கையில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் சில தொடர் ரகசியப் பேச்சுவார்தைகளில் களமிறங்கியிருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

ஆனாலும், தமிழரசுக் கட்சியின் முக்கிய மூத்த தலைவர்கள் கூட்டமைப்பின் சகல கட்சிகளையும் பிரிந்து விடாது தேர்தலை எதிர்கொள்வதே மக்கள் ஆதரவைப் பெறுவதற்கா வழி என்றும், பங்காளிக் கட்சிகளுடன் சமரசப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து சுமுகமான முடிவைக் காணவேண்டும் என்பதில் முனைப்புக் காட்டி வருகின்றனர்.

கூட்டமைப்புக்குள் ஏறபடும் பிளவு எதிர்காலத்தில் கூட்டமைப்பு மீதான மக்கள் நம்பிக்கையை சிதைத்துவிடும். இவை ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் அரச சார்பு பெரும்பான்மை கட்சிகளின் கை வடக்கு, கிழக்கில் ஓங்கிவிடும் அபாயம் உள்ளதாகவும் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்நிலையில் தமிழரசுக கட்சியுடன், தொடரும் கூடடு எதிர்காலத்தில் பங்காளிக் கட்சிகளி பலத்தைக் குறைத்துவிடும் எனவும் தனித்துக களமிறங்குவதற்குப் பொருத்தமான தருணம் இதுவே என்பது பங்காளிக் கட்சிகளின் நிலைப்பாடு.

இந்நிலையில் 2004 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால் தமிழர்களின் அரசியல் பலத்தை உருவாக்கும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களை அரசியல் ரீதியாகவும், அபிவிருத்தி ரீதியாகவும் முன்னகர்த்தும் என்ற எதிர்பார்ப்பு கேள்விக்குறியாகி வருகின்றது.

கூட்டமைப்பு மக்களை அரசியல் ரீதியாகவும், அபிவிருத்தி ரீதியாகவும் மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன் நகர்த்துவார்கள் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் இழந்து வருகிறது.


தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்று மக்கள் மத்தியில் தமிழ்த் தேசிய உணர்வாளர்களாகக் காட்டிக் கொண்ட தமிழ்த் தலைவர்கள் இன்று மக்களின் நலனை மறந்து பதவிகளுக்காகவும், சுகபோகங்களுக்காகவும் தமக்குள் மோதிக் கொள்ளும் போக்கு எதிர்காலத்தில் இவர்களை தமிழ் மக்கள் மத்தியில் அரசியலில் இருந்து காணாமல் செய்துவிடும் என்பதே உண்மை.

**ச.ஜெ.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹாவர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிக்கான இருக்கை தொடர் நிகழ்வு

Tamil Chair Inc.

ஹாவர்ட் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிக்கான இருக்கை ஒன்றை ஏற்படுத்தும் முயற்சிகளின் தொடர்ச்சியாக கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் கடந்த 11ம் திகதி தமிழிசைக் கலாமன்ற மண்டபத்தில் நிகழ்வொன்றினை ஏற்பாடு செய்திருந்தது.

பேராசிரியர் டேவிட் சூல்மன் அவர தமிழ் ஒரு சரிதம் என்ற. தமிழ் மொழியின் வரலாற்றை சொல்லும் ஆய்வு நூலின் வெளியீடு மற்றும் தமிழ் இருக்கைக்கான எழுச்சிப் பாடலின் வெளியீடு ஆகிய இரண்டு நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன.

தமிழ் மொழி மீதும் அதன் தொன்மை மீதும் ஏற்பட்ட ஈர்ப்பினால் தமிழ் மொழி தொடர்பில் தான் மேற்கொண்ட ஆய்வு குறித்த தனது அனுபவங்களை பேராசிரியர் சூல்மன் பகிர்ந்து கொண்டார்.

தமிழ் மொழிசாரத இனங்களைச் சேரந்த மாணவர்கள் பலர் தமிழ் மொழி குறித்தம் அதன் பண்பாடுகள் குறித்தும் அறிந்து கொள்வதற்கு ஆர்வம் காட்டி வரும் நிலையில் தமிழ் குழந்தைகள் தமது தாய் மொழியினை அறிந்து கொள்வது மிகவும் அவசியமானது என்றும் அவர் வலியுறுத்தினார்.











அதனை தொடர்ந்து கனேடிய இளம் பாடகி ஜெசிக்கா ஜூட்ஸ் அவர்கள் பாடிய உலகத் தமிழர்கோர் தமிழ் இருக்கை என்ற பாடல் வெளியிடப்பட்டது. பெருங்கவிக்கோ சேதுராமன் அவர்களின் வரிகளுக்கு தென்னிந்திய இசையமைப்பாளர் ஜஸ்ரின் பிரபாகரன் இசை வழங்கியிருந்தார்.

இந்த இசைப்பாடல் வெளியீட்டுடன் ஹவாரட்ட தமிழ் இருக்கைக்கான நிதிசேகரிப்பிற்கான தளம் ஒன்றையும் ஜெசிக்கா வெளியட்டார். இந்த தளத்தின் மூலமாக அன்றைய தினம் சுமார் 10,000 டொலர்கள் நிதி திரட்டப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# VETTYVEL LAW PROFESSIONAL CORPORATION

Homelife Future நிறுவனத்தின் அதிபர் திரு செல்வா வெற்றிவேல் அவர்களது புதல்வியும் சட்டத்துறையில் முதுமானிப் பட்டத்தையும் பெற்றவருமான ரிசானி அவர்களின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் சட்டநிறுவனமான Vettyvel Law Professional Corporation, தனது முதலாவது ஆண்டு நிறைவை நவம்பர் 8 ம் திகதி ஸ்காபுறோவில் உள்ள Markham Convention Centre இல் நடைபெற்றது . முதலாவது வருடத்தில் Vettyvel Law நிறுவனத்தின் வளர்ச்சியை பெரிதும் பாராட்டினார்கள்

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றொலொனியாவும் தமிழீழமும்

## வரலாறு சொல்லும் பாடம்



**இ**ந்நாட்களில் ஸ்பெயின் (Spain) மற்றும் போர்த்துக்கல் (Portugal) நாடுகளாக உருவாகியிருக்கின்ற ஐபீரிய தீபகற்பத்தில் (Iberian Peninsula) முன்னொரு காலத்தில் தனக்கென சொந்த மொழி சுங்கம் சட்டம் என தனி நாட்டுக்குரிய அம்சங்களை கொண்டியங்கிய தன்னாட்சித் தேசமே கற்றொலொனியா (Catolonia).

1714 இல் கற்றொலொனியா பிரதேசத்தையும் 1715 இல் எஞ்சிய தீவுகளையும் ஸ்பானியர்கள் கைப்பற்றினார்கள். வெற்றிகொள்ளப் பட்ட இப்பிரதேசங்கள் உள்ளடங்கலாக ஸ்பெயின் என்ற நாட்டைத் தோற்றுவித்தார்கள்.

இதனைத்தொடர்ந்து ஸ்பெயினில் ஆட்சியதிகாரம் ஏறியவர்கள் ஒவ்வொருவரும் ஸ்பானிய மொழியையும் சட்ட இறுக்கங்களையும் கற்றொலொனியா மீது சுமத்த முற்பட்டுக்கொண்டேயிருந்தனர். இத்தகைய தொடர் அதிகார திணிப்பு முயற்சிகளுக்கு எதிராக 1931 ஆம் ஆண்டில் கற்றலோனியா மக்கள் தமது சுயாட்சித் தேசத்திற்கான தேசிய கற்றலோன் அரசை (the national Catalan government) பெற்றுக்கொண்டனர்.

ஸ்பெயினின் இரும்பன் என்று அழைக்கப்படுகின்ற ஜெனரல் பிரான்சிஸ்கோ பிராங்கோ (Francisco Franco) என்பவர் கற்றொலொனியாவின் தன்னாட்சியை சிதைத்தழித்தார்.

1938 ஆம் ஆண்டு நிகழ்ந்த இந்த அழிப்பு நடவடிக்கையில் 3500 இற்கும் அதிகமான கற்றலொனியா வாசிகளைக்கொன்று பல்லாயிரம்பேரை நாட்டைவிட்டு விரட்டி கற்றொலொனியாவையும் அதனை அண்டிய பிரதேசங்களையும் ஸ்பெயினின் முழுமையான ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்தார். இது இப்ரோ சமர் (Battle of Ebro) என அழைக்கப்படுகிறது. இச்சமர் ஸ்பெயின் வரலாற்றில் நிகழ்ந்த மிகப்பெரிய உள்நாட்டு யுத்தமாக பார்க்கப்படுகிறது.

இதனைத்தொடர்ந்து 1939 ஆம் ஆண்டு முதல் 1975 ஆம் ஆண்டு பிரான்சிஸ்கோ பிராங்கோ இறக்கும்வரை அவரின் இராணுவ சர்வாதிகார ஆட்சியின் கீழ் கற்றொலொனியர்கள் பாகுபாட்டுடனேயே நடத்தப்பட்டு வந்தார்கள்.

பின்னர் 1977 ஆம் ஆண்டில் ஸ்பெயினில் மீண்டும் ஜனநாயகம் திரும்பியபோது கற்றொலொனியர்கள் தாம் ஒரு தனித்தேசம் எனவும் வரலாற்றில் முன்பிருந்ததுபோல் தம்மைத்தாமே ஆளும் நிலைவேண்டும் எனவும் கூறினர்.

கற்றொலொனியாவின் பிரிவினையை தடுக்க விரும்பிய அன்றைய ஜனநாயக அரசு பிரிந்து செல்வதற்கு மாற்றீடாக ஸ்பெயின் என்ற நாட்டுக்குள் ஒரு தேசமாக இணைந்திருக்கக்கூடிய தன்னாட்சி உரிமையை கற்றொலொனியாவிற்கு வழங்கியது. அதற்கமைய தமக்கான

**இன்றைய உலகில் எங்கும் எல்லாமுமே அரசியல் பொருளாதார சதுரங்க விளையாட்டுதான். ஒரு சிறிய நகர்வு கூட பெருவெற்றியையோ படுதோல்வியையோ தந்துவிடக்கூடியது.**

பிராந்திய நாடாளுமன்றம் பொலிஸ் என குறிப்பிடத்தக்க அளவு அதிகாரங்களோடு தொடர்ந்து வளர்ச்சியடைந்து வந்தது கற்றொலொனியா.

இந்நிலையில் 2010 ஆம் ஆண்டு ஸ்பெயினின் அரசியலமைப்பு நீதிமன்றமானது 1978 ஆம் ஆண்டின் ஸ்பானிய அரசியலமைப்பின் அடிப்படையிலமைந்த 2006 தன்னாட்சிச் சட்டமூலத்தை மாற்றியமைக்க முற்பட்டதன் மூலம் ஸ்பெயினுக்குள் ஒரு தனித் தேசம் என்று கற்றொலொனியா இயங்குவதற்கும் அங்கீகரிக்கப்படுவதற்கும் தேவையான சட்ட அடிப்படையிலான வாய்ப்பு அல்லது உரிமை பறிக்கப்பட்டது.

இதனால் சுதந்திர கற்றொலொனியாவின் நீறுபூத்திருந்த குரல்கள் மீண்டும் நெருப்பாக பற்றியெரியத் தொடங்கின. நாம் ஒரு தேசம் நம்மை நாமே தீர்மானிப்போம் என்ற சுலோகம் மீண்டும் முன்வைக்கப்பட்டது.

அத்துடன் ஸ்பெயின் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியும் இந்த தனிநாட்டுக்கோரிக்கையை மேலும் வலுவடையச்செய்தது.


ஏனெனில் கற்றொலொனியா தேசத்தின் தலைநகரான பாசிலோனாவின் பெரும் பொருளாதார வளமும் பலமுமே ஸ்பெயினின் ஏனைய பின்தங்கிய பிரதேசங்களுக்கு தாரைவார்க்கப்படுவதால் கற்றொலொனியர்களின் ஆதங்கம் ஸ்பெயினிற்கு எதிராக அதிகரிக்கத்தொடங்கியது.

இந்நிலையில் ஸ்பானிய பிரதமர் மரிஆனோ ரஜோய் (Mariano Rajoy) தலைமையிலான பழமைவாத கட்சியானது (The conservative Popular Party ) கற்றலோனியாவில் ஐந்தாவது பெரிய கட்சியாக இருப்பதுடன் சுதந்திரத்திற்கான நகர்வுகளை கடுமையாக எதிர்த்தது.

இருந்தபோதும் ஏனைய கற்றொலொனிய தேசியவாத இடதுசாரிய கட்சிகள் எல்லாம் கூட்டாகச் சேர்ந்து கற்றொலொனிய நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை நிரூபித்ததுடன் தலைவர் கார்லெஸ் புச்டிமொன்ற் (Carles Puigdemont) இற்கு தமது ஆதரவையும் தெரிவித்தன.

தொடர்ச்சியாக 2017 செப்ரெம்பரில் கற்றொலொனியா தேசம் ஸ்பெயினிடம் இருந்து பிரிந்து செல்வதற்கான வாக்கெடுப்புக்கு கற்றொலொனியா நாடாளுமன்றில் அங்கீகாரத்தையும் வழங்கியது. இந்நிலையில் ஸ்பெயினின் அரசியலமைப்பு நீதிமன்றம் இச்செயல்பாட்டை இடைநிறுத்தும் தடை உத்தரவை பிறப்பித்தது. அது சட்டவிரோதமானது என்றும் எச்சரித்தது.

தடையையும் மீறி கற்றலோனியா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரமையம் சுதந்திர தேசத்திற்கான வாக்கெடுப்பை நடத்தியது. ஸ்பானிய மத்திய அரசின் கெடுபிடிகளுக்கும் வாக்குப்பெட்டிகளின் கைப்பற்றுதல்களுக்கும் மத்தியில் 2.26 மில்லியன் மக்கள் வாக்களித்திருந்தனர் (இது மொத்த கற்றொலொனியர்களின் 42 சதவீதமாகும்). வாக்களித்தவர்களில் 90 வீதமானோர் தனிநாட்டுக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

இவ்வாக்கெடுப்பு வெற்றகரமாக நடைபெற நாடாளுமன்ற அதிகாரம் உட்பட்ட உட்கட்டமைப்பு நிர்வாக வசதியும் பொலிஸ் அதிகாரமும் கற்றொலொனியர்களின் வசமிருந்ததுதான் மிக முக்கியமான காரணமாக இருந்தது.

இந்த மக்களாணையானது ஒருதலைப்பட்சமாக தமது சுதந்திரத்தை அறிவிக்கும் ஆணையை தமக்கு தந்திருந்தாலும் தாம் மத்திய அரசுடன் பிரிந்துசெல்வது தொடர்பாகவும் தமது உரிமைகள் தொடர்பாகவும் பேரம்பேச தயாராக இருப்பதாக அறிவித்தார் கற்றொலொனியா தலைவர் புச்டிமொன்ற்.

ஆனாலும் ஸ்பானிய அரசு




இவ்விடயத்தில் கடும்போக்காக நடந்துகொண்டதைத் தொடர்ந்து புச்டிமொன்ற் தலையிலான கற்றொலெனியா அரசு மக்களாணைப்படி சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தது.

ஸ்பானிய அரசு அதன் அரசியலமைப்பின் 155 ஆவது சரத்துப்படி கற்றொலொனிய நாடாளுமன்றைக் கலைத்து கற்றொலொனியாவை மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்ததுடன் தனிநாட்டு வாக்கெடுப்புக்கு துணைநின்ற நாடாளுமன்றத் தலைவர்கள் உட்பட்ட பலரைக்கைதுசெய்து சிறைவைத்துள்ளது. கற்றொலொனியா தலைவர் புச்டிமொன்ற் பெல்ஜியத்தில் (Belgiam) தஞ்சமடைந்துள்ளார்.

இந்நிலையில் கலைக்கப்பட்ட கற்றொலொனியா பாராளுமன்றத்திற்கு 2017 டிசம்பர் 21 ஆம் திகதி தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இது கற்றொலொனியா நாடாளு மன்றத்திற்கான மீள் தேர்தலாக இருந்தாலும் பிரச்சாரமும் வாக்களிப்பும் பிரிவினைக்கு ஆதரவு எதிர் என்ற இரட்டை நிலைப்பாடுகளை மட்டுமே கொண்டிருக்கப்போகிறது.

இந்நிலையில்தான் ஸ்பானிய பிரதமர் மரிஆனோ ரஜோய் கற்றொலினியாவிற்கு பயணம் மேற்கொண்டு தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்திருக்கிறார். அவரின் வரவை எதிர்த்து ஒரு மில்லியன் பேர்வரையில் தெருக்களில் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.

இருந்தபோதிலும் பிரிவினைவாத அழிவை தடுத்துநிறுத்துவேன் என பிரதமர் சூளுரைத்துள்ளார்.

அவருடைய பழமைவாதக் கட்சி எட்டு வீதம் அளவிலான வாக்கு வங்கியையே கற்றொலொனியாவில் கொண்டிருக்கின்றபோதும் இத்தேர்தல் முடிவுகள் பிரிவினையைத் தடுக்கும் என்று அவர் நம்புகின்றார்.

காரணம் நடந்துமுடிந்த தனிநாட்டுக்கான வாக்கெடுப்பில் பங்குபற்றியது 43 வீதமான கற்றொலொனியா வாசிகள் மட்டுமே. ஏனையவர்கள் அமைதியாக இருக்கும் வாக்காளர்கள் (silent voters) எனப்படுகின்றனர். இந்த அமைதியான வாக்காளர்களில் அனேகர் பிரிவினைக்கு எதிரானவர்களாக இருக்க வாய்ப்பிருப்பதாக நம்பப்படுகிறது.

ஆனாலும் கற்றலோனியாவில் வாக்குவங்கியில் முன்னிலையில் நிற்கும் ஏனைய கற்றொலொன் தேசியவாத மற்றும் இடதுசாரியக் கட்சிகள் பொதுவாக்கெடுப்புக்கு ஒன்றிணைந்ததுபோல கூட்டாக இயங்கினால் மத்திய அரசிற்கு இத்தேர்தல் சவாலாகவே அமையும். கருத்துக்கணிப்புகளும் பிரிவினைவாதத்திற்கு ஆதரவளிப்பவர்களே வெல்வார்கள் என்று தெரிவிக்கின்றது.

நிலமை இவ்வாறு இருக்கையில் ஏன் இந்த விசப்பரீட்சையை ஸ்பெயின் அரசு எடுக்கின்றது என்பதற்கு காரணம் இதுதான்.

கற்றொலொன் பிரதேசம் நீண்டகாலமாகவே ஸ்பெயினின் தொழில்துறை மைய நகரமாக விளங்குகிறது. முதலில் அதன் கடல்வழிபலமும் உணவு மற்றும் ஆடை வர்த்தமும் பிரதான பொருளாதாரமாக இருந்தது. பின்னர் பொருளாதாரம் பொருட்கள் சேவைகள் மற்றும் உயர்தொழில்நுட்ப நிறுவனங்களின் மையமாகவும் வளர்ச்சியடைந்தது.

மொத்தமாக 19 பிரதேசங்களைக் கொண்ட ஸ்பெயினின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கற்றலோனியா 19 சதவிகிதத்தை கொண்டுள்ளது. இதன் மதிப்பு 314 பில்லியன் அமெரிக்க டொலீலர்கள் ஆகும். இது உலகின் முப்பத்திநான்காவது பெரிய பொருளாதாரமாக கணிக்கப்பட்டிருக்கிறது. இது போர்த்துக்கல் கொங்கொங் தென்கொரியா ஸ்ரேல் இத்தாலி போன்ற நாடுகளைவிட பெரிய பொருளாதாரமாகும்.

இன்னுமொரு முக்கிய விடயம் ஸ்பெயினிற்கு கற்றலோனியா வழங்கும் பொருளாதார பங்களிப்பானது இங்கிலாந்துக்கு ஸ்கொட்லாந்து வழங்கும் பொருளாதார பக்களிப்பைப்போல இரண்டு மடங்காக இருக்கின்றது. அத்துடன் கற்றொலொனியாவின் மக்கள்தொகை ஸ்பெயினின் 46.6 மில்லியன் மக்கள்தொகையின் 16.1 வீதத்தைக்கொண்டிருக்கிறது.

இத்தகைய யதார்த்தப் புறநிலையில் பிரிவினையை ஏதாவதொரு சர்வாதிகார முறையில் நசுக்க முற்பட்டால் கற்றொலொனியாவின் பொருளாதாரம் சரியும் அது கற்றொலொனியாவுடன் சேர்த்து ஸ்பெயினை இலகுவில் மீளமுடியாத அதளபாதாளத்திற்கு கொண்டு செல்வதுடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதாரத்தையும் ஆபத்துக்குள் கொண்டுசெல்லும் அபாயமிருக்கின்றது. (ஏற்கெனவே அரசியல் உறுதித்தன்மையின்மையால் கற்றொலொனியாவை விட்டு வெளியேறும் பல்தேசிய நிறுவனங்களை வெளியேறவேண்டாம் என ஸ்பானிய பிரதமர் கோரிக்கை விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது)

அதே நேரம் பிரிவினையை அனுமதிப்பதும் ஸ்பெயினைப் பொறுத்த அளவில் பெரிய இழப்பாகவே இருக்கும்.

ஆகையால்தான் கற்றொலொனியா வின் பொருளாதாரம் உட்பட ஸ்பெயினின் பொருளாதாரத்தில் அரசியல் உறுதித்தன்மையின்மை என்கின்ற நிலையால் கீறல் ஏதும் விழாமல் நிலமையைக் கையாள முற்படுகிறது ஸ்பெயின்.

ஸ்பெயினிற்கு இருக்கும் முதன்நிலைத்தெரிவு டிசம்பரில் நடைபெறும் கற்றலொனியா நாடாளுமன்ற தேர்தலை வென்றெடுப்பதன்மூலம் பிரிவினையைத் தடுப்பதுடன் நிலமையையும் தற்காலிகமாகவேனும் கட்டுக்குள் கொண்டுவரலாம்.

இதற்காக அமைதியான வாக்காளர்களாக இருக்கும் 57 சதவீதமான வாக்காளர்கள் உட்பட ஏனைய கற்றொலொனியர்களைக் கவரும் விதத்தில் இன்னும் அரசியல் பொருளாதார அதிகாரங்களைக்கூட அதிகரித்து வழங்கும் வாக்குறுதிகளைக்கூட வழங்கும் வாய்ப்பிருக்கிறது. கூடவே தனிநாட்டு வாக்கெடுப்பில் இணைந்து பங்கேற்ற கட்சிகளைக்கூட வாக்குறுதிகள்மூலம் கவர்ந்திழுக்கும் வாய்ப்புகளும் இருக்கின்றது.

ஒட்டுமொத்தத்தில் கற்றொலொனியாவிற்கும் ஸ்பெயினிற்கும் இடையில் நடப்பது ஒரு அரசியல் பொருளாதார சதுரங்க விளையாட்டு. கற்றொலொனியர்கள் சரியான தருணம் பார்த்துக் காய் நகர்த்தியிருக்கிறார்கள். ஸ்பெயின் அதனை அத்தனை வாய்ப்பான வழிமுறைகள்மூலமும் வெல்ல முற்படுகிறது. ஆனாலும் கற்றொலொனியர்களின் இந்த நகர்வுவிதமானது ஒரு செக்மேற்றாகவோ குறைந்தது ஆட்டம் சமநிலையில் முடியும் வாய்ப்புகளையோதான் அதிகம் கொண்டிருக்கிறது. தலைவலியும் ஆபத்தும் ஸ்பெயினிற்கே அதிகம்.

இதிலிருந்து ஈழத்தீவு கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் நிறையவே இருக்கின்றது.

முதலாவது ஆட்சிஅதிகாரத்தில் இருக்கும் சிங்களதேசம் கற்றுக்கொள்ளவேண்டியது. (இது பற்றி புதிய அரசியலமைப்பு விவாதங்களில் அவர்கள் ஏற்கெனவே பேச ஆரம்பித்துவிட்டார்கள்)

**தமிழர் தேசத்திற்கு தன்னாட்சியுடன் கூடிய அதிகாரத்தையோ தனியான நாடாளுமன்றத்தையோ பொலிஸ் காணி அதிகாரம் உட்பட்ட உட்கட்டமைப்பை வலுப்படுத்தக்கூடிய அதிகாரங்கள் எதையுமே வழங்காமல் பார்த்துக்கொள்வதுடன் எக்காலத்திலும் பிரிந்து செல்லமுடியாதவாறு சட்டரீதியாக பூட்டுப்போட்டு வைத்திருக்க வேண்டும் என்பது. அடுத்தது ஆட்சி அதிகாரத்தின் ஆளுகையில் இருக்கும் தமிழர் தேசம் கற்றுக்கொள்ளவேண்டியது.**

தமிழர் தேசத்திற்கு தன்னாட்சியுடன் கூடிய அதிகாரத்தையோ தனியான நாடாளுமன்றத்தையோ பொலிஸ் காணி அதிகாரம் உட்பட்ட உட்கட்டமைப்பை வலுப்படுத்தக்கூடிய அதிகாரங்கள் எதையுமே வழங்காமல் பார்த்துக்கொள்வதுடன் எக்காலத்திலும் பிரிந்து செல்லமுடியாதவாறு சட்டரீதியாக பூட்டுப்போட்டு வைத்திருக்க வேண்டும் என்பது.

அடுத்தது ஆட்சி அதிகாரத்தின் ஆளுகையில் இருக்கும் தமிழர் தேசம் கற்றுக்கொள்ளவேண்டியது.

மேற்சொன்ன அதிகாரங்களை எப்படியாவது பெற்றுக்கொள்ள முயற்சிப்பதுடன் இலங்கையின் பொருளாதாரத்தில் மிகப்பெரிய செல்வாக்குச் செலுத்துபவர்களாக ஸ்பெயினிற்கு கற்றொலொனியாபோல் வடகிழக்கில் தம்மை நிலைநிறுத்தி வளர்த்துக்கொள்ளவேண்டும். கற்றொலொனியாவின் இந்தப் பொருளாதார வளப்படுத்தல் அரசியலோடு நேரடியாக பல்தேசிய நிறுவனங்களாக இருப்பதையும் கவனிக்கவேண்டும்.

இன்றைய உலகில் எங்கும் எல்லாமுமே அரசியல் பொருளாதார சதுரங்க விளையாட்டுதான். ஒரு சிறிய நகர்வு கூட பெருவெற்றியையோ படுதோல்வியையோ தந்துவிடக்கூடியது.

நிறைவாக கற்றொலோனியாவின் தனிநாட்டுக்கோரிக்கை என்பது அவர்களது பொருளாதாரம் ஏனையவர்களுக்கு தாரைவார்க்கப்படுகின்றது என்பதுடன் தொடர்புபட்டது என்பதுபோல் வெளிப்படையாக தோன்றினாலும் உள்ளுக்குள் மூன்று நூற்றாண்டுகள் கடந்தும் நீறுபூத்த நெருப்பாகவிருக்கும் சுதந்திரதாகமே அவர்களை அவ்வாறு இயக்குகிறது. அது 1938 இல் நிகழ்ந்த இப்ரோ நதிக்கரை பேரழிப்பின் பின்னரும் நீடித்து நிலைத்து நிமிர்ந்து வந்திருக்கிறது. இது 2009 நந்திக்கடலுக்கும் பொருந்தும்.

**— இந்திரன் ரவீந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா தமிழர் வரலாறு–17

# கனடாவில் பதுமவயதினரும் பெற்றோரும்

குரு அரவிந்தன்

கனடாவில் தமிழ் பிள்ளைகள் சிறுவர்களாக இருக்கும்போது பெற்றோரின் சொல்வழி கேட்பவர்களாக இருக்கின்றார்கள். ஆனால் கொஞ்சம் வளர்ந்ததும் அவர்களில் பலர் சினேகிதர்களின் வழியைப் பின்பற்றத் தொடங்குகிறார்கள். சில தமிழ் மாணவர்கள் பல்லின மாணவர்களுடன் நெருங்கிப் பழகுவதால் அவர்களுடைய பண்பாடு கலாச்சாரத்திற்கு ஏற்றமாதிரி தங்களை மாற்றிக் கொள்கிறார்கள். பொதுவாக ஆங்கில மொழியிலேலோ அல்லது பிரெஞ்சு மொழியிலோ அவர்களின் உரையாடல் அமைகின்றது. இதனால் வீட்டில் உள்ளவர்களுடனும் ஆங்கிலத்தில் அல்லது பிரெஞ்சு மொழியில் உரையாட விரும்புகிறார்கள். பொதுவாக ஐந்தாம் அல்லது ஆறாம் வகுப்பில்தான் இவை ஆரம்பமாகின்றன. பதுமவயதில் நுழையும்போது அவர்கள் தங்களுக்கு எல்லாம் தெரியும் என்ற தவறான சிந்தனையை வளர்த்துக் கொள்கின்றார்கள். இங்கே நான் கணக்காளராக வேலை செய்தாலும், பகுதி நேர ஆசிரியராக ரொறன்ரோ கல்விச்சபையில் நான் கல்வி கற்பிப்பதால் பிள்ளைகளிடம் ஏற்படும் மாற்றங்களை ஓரளவு என்னால் அவதானிக்க முடிகின்றது. வாரத்தில் ஒரு நாள்தான் அவர்களைச் சந்திப்பதால் மற்ற நாட்களில் பாடசாலையிலோ அல்லது வீட்டிலேயோ என்ன நடக்கிறது என்பது தெரியாது.

எனது வகுப்பிலே இருந்த மிகவும் கெட்டிக்கார மாணவி ஒருவர் திடீரென மௌனமானது என்னைச் சிந்திக்க வைத்தது. என்ன கேள்வி கேட்டாலும் முதலில் கையை உயர்த்திப் பதில் சொல்வது அவராகத்தான் இருந்தார். திடீரென அந்த மாணவியிடம் ஏதோ மாற்றம் தெரிந்தது. அந்த மாணவி எந்த முறைப்பாடும் செய்யாததால் மேற்கொண்டு என்னால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. கல்விச் சபையின் சட்டத்தின்படி அவர் ஏதாவது முறையிட்டால், அல்லது அவரைப்பற்றி சினேகிதிகள் முறையிட்டால் கட்டாயம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த மாணவியின் தாயார் மகளை வகுப்பில் இருந்து அழைத்துச் செல்ல வந்தபோது, 'மகள் நன்றாகப் படிக்கிறாவா' என்று விசாரித்தார். கடந்த இரண்டு வாரங்களாக அவர் படிப்பிலே கவனம் செலுத்துவது குறைவு என்பதையும், காரணம் என்ன என்பதையும் அறியும்படியும் சொன்னேன். தாயாரின் மனம் நோகாமல் மெல்ல அவருக்கு எடுத்துச் சொன்னேன். தாயார் மகளிடம் அதைப்பற்றி விசாரித்தபோது பல விடயங்கள் அவரிடம் இருந்து வெளிவந்ததாகவும், புரிந்துணர்வு இருந்ததால் அது சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டதும் தெரியவந்தது.

ஆணோ பெண்ணோ பதுமவயதுப் பிள்ளைகளுடன் யாரெல்லாம் பழகுகிறார்கள் என்பதைப் பெற்றோர்கள் எட்ட நின்று கவனித்துக் கொண்டிருப்பது அவர்களின் எதிர்காலத்திற்கு நல்லது.தேவை ஏற்படின் சுமுகமான முறையில் தலையிடுவதும் குடும்பத்திற்கு நல்லது. பெற்றோர் இருவரும் அனேகமான வீடுகளில் வேலைக்குச் செல்வதால் பதுமவயதுப் பிள்ளைகள் பாடசாலையால் வந்து வீட்டில் தனியே இருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. ஏதாவது நடந்தாலும் அதைச் சொல்வதற்கு எமது பெற்றோர் பிள்ளைகளுக்கு இடம் கொடுப்பதில்லை. பெற்றோர்கள் இந்த மனோபாவத்தை மாற்றிக் கொண்டால் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே உள்ள இடைவெளி குறைவதற்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைக்கும்.

பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே மொழியும் ஒரு தடையாக இருக்கின்றது. சில வீடுகளில் ஆங்கிலம் தெரியாத பெற்றோரைப் பிள்ளைகளே வழிநடத்துகின்றார்கள். முடிவு எடுப்பதும் பிள்ளைகளாகவே இருக்கிறார்கள். பண்பாடு, கலாச்சாரம் காரணமாகக் கட்டுப்பாடுகளைப் பெற்றோர் விதிப்பதால் பிள்ளைகள் தனிமைப் படுத்தப்படுகின்றார்கள். செல்லப் பிராணிகளை வளர்ப்பதால் பிள்ளைகளுக்கு பாசம், காருண்யம், மனிதநேயம் என்பன தானாகவே ஏற்பட வழியுண்டு. தனிமையில் இருக்கும் பிள்ளைகளுக்கு செல்லப்பிராணிகள் மன அழுத்தத்தைக் குறைக்கும் மருந்தாக இருக்கின்றன. என்னிடம் பல பெற்றோர்கள் முறையிட்ட போது இதைத்தான் நான் சிபார்சு செய்தேன். இப்பொழுதெல்லாம் மகள் நேரத்திற்கு வீட்டிற்கு வந்து விடுவதாகவும் நாய்க்குட்டியுடன் சிறிது தூரம் நடந்து செல்வதாகவும் தாயார் குறிப்பிட்டார். பெற்றோருக்கும் நிம்மதி, பிள்ளைக்கும் தினமும் நாய்க்குட்டியுடன் நடப்பதால் உடல் ஆரேக்கியமாக இருக்கிறது. சில பெற்றோர்கள் பிள்ளைகளுடன் தாங்களும் நடப்பதால் அவர்களின் உடல் ஆரோக்கியத்திற்கும்;, உரையாடலுக்கும் சிறந்தது. சில பெற்றோர்கள் பிள்ளைகளின் செல்லப் பிராணிகளையும் பராமரிக்க வேண்டிய பெறுப்பும் தங்களிடம் கைமாறிவிட்டதாகக் குறைப்பட்டுக் கொண்டார்கள். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் புரிந்துணர்வு இல்லாவிட்டால் இதுபோன்ற குறைகள் தொடரத்தான் செய்யும்.

> **பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே மொழியும் ஒரு தடையாக இருக்கின்றது. சில வீடுகளில் ஆங்கிலம் தெரியாத பெற்றோரைப் பிள்ளைகளே வழிநடத்துகின்றார்கள். முடிவு எடுப்பதும் பிள்ளைகளாகவே இருக்கிறார்கள்.**

பாடசாலையில் நடைபெறும் பெற்றோர் தினத்தன்று ஆசியர்களைப் பெற்றோர்; சந்திப்பது மிகவும் முக்கியமானது. பிள்ளைகளின் கல்வி நிலை எங்கே இருக்கிறது என்பதை ஆசிரியர்களிடம் இருந்து ஓரளவு புரிந்து கொள்ள முடியும். பாடசாலைக்குப் பிள்ளைகள் ஒழுங்காக வருகிறார்களா என்பதையும் அவர்களிடம் இருந்து அறிந்து கொள்ள முடியும். சில பிள்ளைகள் தாங்கள் படிப்பதாக ஒரு மாயையைப் பெற்றோருக்கும், சமூகத்திற்கும் உருவாக்கி வைத்திருப்பார்கள். ஒரு பொய்யை மறைப்பதற்குத் தொடர்ச்சியாகப் பல பொய்கள் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். பதுமவயதில் பிள்ளைகள் அப்படி இப்படி நடக்கத்தான் பார்ப்பார்கள் ஆனாலும் ஒழுக்கம், கட்டுப்பாடு போன்ற விடயங்களில் கவனம் செலுத்துவது நல்லது. இசை, நடனம், கலை, விளையாட்டுத்துறை போன்ற அவர்களுக்குப் பிடித்த துறைகளில் அவர்களை ஈடுபடுத்தலாம். பெற்றோர் இதற்காகத் தங்கள் நேரத்தைச் சிறிது செலவிடலாம். இல்லாவிட்டால் பின்நாளில் அதற்காக வருந்த வேண்டி வரலாம்.

ஆங்கிலம் தெரியாத பெற்றோர் பிள்ளைகளை நம்பியிருப்பதால் சில சமயங்களில் பிள்ளைகளே சுயமாக முடிவெடுக்கும் நிலைக்குத் தள்ளிவிடும்.

தமிழ் வகுப்புக்கு பெற்றோரால் அழைத்து வரப்பட்ட ஐந்தாம் வகுப்பு பையன் பதிவு செய்யும் நேரத்தில் நான் தமிழ் படிக்க வரமாட்டேன் என்று சொல்லிக் கொண்டு வெளிக்கதவை திறந்து வெளியே சென்றதை எல்லோரும் வியப்போடு பார்த்துக் கொண்டு நின்றார்கள். பெற்றோரின் கைகள் இந்த மண்ணில் கட்டிப் போடப்பட்டுள்ளதால் எதுவும் செய்ய முடியாத நிலையில் அவர்களும் அந்த இடத்தைவிட்டு வெளியேறினார்கள். 'இரண்டு போடு போட்டால் எல்லாம் சரிவரும்' என்று அருகே நின்ற பெற்றார் ஒருவர் ஆத்திரத்தில் குறிப்பிட்டார். அப்படி ஏதாவது செய்தால் செய்தவருக்குச் சட்டப்படி கனடாவில் என்ன தண்டனை கிடைக்கும் என்பதையும் அவர் அறிந்தேயிருந்தார். சில பெற்றோரைப் பார்த்துத்தான் அவர்களின் பிள்ளைகள் தங்கள் பழக்க வழக்கங்களைத் தொடருகின்றார்கள். சில பிள்ளைகளுக்குப் பொய்சொல்ல, சுற்றுமாற்றுச் செய்யப் பெற்றோரே சொல்லிக் கொடுக்கிறார்கள். ஏன் என்று கேட்டால் 'கனடாவில் அப்படி வாழ்ந்தால்தான் வாழலாம்' என்று சொல்லும் பெறோரும் இருக்கிறார்கள்.

இலங்கையில் சமீபத்தில் நடந்த ஒரு மாணவியின் கொலை பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். அதன் பின்னணி பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். இந்தக் கொலைக்கும் வீடியோ படத்திற்கும் உள்ள தொடர்பு என்னவென்று பலருக்குத் தெரியாது. இது போன்ற பல வீடியோக்கள் எடுக்கப்பட்டு வெளி நாடுகளில் நீலப்படங்களாக மாற்றப்பட்டிருக்கும் உண்மை விசாரனையின் போது வெளிவந்தது. ஒரு மலருக்குள் மறைத்து வைக்கக் கூடிய அளவு சிறிய வீடியோ பதிவு சாதனங்கள் இப்போது பாவனைக்கு வந்து விட்டன. தென்கொரியா அரசு இதைப்பற்றிய விழிப்புணர்வைப் பகிரங்மாகவே விட்டிருக்கின்றது. இப்போது வீடியோத் துறையில் உள்ள நவீன தொழில் நுட்பம் இல்லாததையும் இருப்பதுபோல பிரமையை உருவாக்கக்கூடியது. அவர்களுக்கு அழகான ஒரு இளம் பெண்ணின் ஒரு வினாடிக்கான வீடியோ படம் இருந்தாலே போதுமானது. போட்டோசொப் என்ற மென்பொருள் போல பல நவீன மென்பொருள்கள் இப்போது சந்தைக்கு வந்துவிட்டன. தலையை மட்டும் எடுத்து வேறு ஒரு பெண்ணின் உடம்போடு பொருத்தி இயக்குவார்கள். போததற்கு காட்சிக்கேற்ற ஒலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமைப்பையும் பொருத்தி விடுவார்கள். அந்த மென்பொருளே அவர்களின் தேவைக்கு ஏற்ப இதை எல்லாம் மாற்றிக் கொடுத்துவிடும். பெரும் தொகையான பணத்திற்கு அந்த வீடியோக்களை விற்றுப் பணமாக்குகிறார்கள். இதைப் பற்றி அதிபர் அமரர் பொ. கனகசபாபதி அவர்களுக்கு ஐரோப்பாவில் இருக்கும் அவரிடம் படித்த மாணவன் ஒருவர் 'இப்படி எல்லாம் அங்கே நடக்கிறது' என்று முறைப்பாடு செய்திருந்தார். அதிபருடன் உரையாடும் போது ஒரு சந்தர்ப்பத்தில் அவர் இதைப்பற்றி என்னிடம் குறிப்பிட்டார். அவர் சொன்ன கதைகளைக் கேட்டு எனக்கே அதிர்ச்சியாக இருந்தது. இதை நான் ஏன் இங்கே குறிப்பிடுகின்றேன் என்றால் சில பெற்றோர்களின் பேராசையால் அல்லது கவலையீனத்தால் ஒன்றும் அறியாப் பதுமவயதுப் பெண்பிள்ளைகள் பலியாக்கப் படுகிறார்கள். தங்களுக்கு நடந்த பாலியல் துன்புறுத்தல்களை வெளியே சொல்ல முடியாமல் தவிக்கும் பதும வயதினர் அதைப்பற்றி பெற்றோரிடம் முறையிட்டாலும், அதை நம்பாத பெற்றோர்கள் பிள்ளைகள் மீதுதான் பழியைப் போடுகின்றார்கள். அந்தப் பயத்தில் பெண்பிள்ளைகள் மட்டுமல்ல, பாதிக்கப்படும் ஆண் பிள்ளைகளும் வெளியே சொல்ல முடியாமல் மௌனமாகி விரக்தியின் உச்சத்திற்குச் சென்று விடுகிறார்கள். பெற்றோர்கள் சற்றுக் கவனம் செலுத்தினால் பிள்ளைகளின் எதிர்காலம் சிறக்க வாய்ப்புண்டு.


நான் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தில் முக்கிய பதவியில் இருந்த போது KMஐ தொலைக்காட்சியில் பதுமவயதினர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த ஒரு நேர்காணலை நடத்தியிருந்தோம். அதிலே எங்கள் தொலைபேசி எண்களையும் குறிப்பிட்டிருந்தோம். ஒரு நாள் காலையில் ஒரு வயோதிப பெண்மணியிடம் இருந்து தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. தனது பேரனின் நடவடிக்கையில் சில மாற்றங்கள் தெரிவதாகவும் அதைப்பற்றிப் பெற்றோரிடம் சொல்லியும் அவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டார். பள்ளிக்கூடத்தால் வந்தால் தனக்குச் சமைப்தற்கு முன்பெல்லாம் உதவி செய்வார் என்றும் இப்போது கதைவைச் சாத்திவிட்டுப் படுத்திருக்கிறார் என்றும் குறிப்பட்டார். பெற்றோர்கள் பெரிய வீடு வாங்க வேண்டும் என்ற ஆசையில் இராப்பகலாய் இரண்டு வேலை செய்வதாகவும் அவர் குறிப்பிட்டார். நான் விபரங்களைப் பெற்று மாணவன் படிக்கும் பாடசாலைக்குச் சென்று இதுபற்றி அதிபருடன் உரையாடினேன். அப்போதுதான் மாணவன் போதை வஸ்து பாவிப்பது தெரியவந்தது. விடுமுறையின் போது காம்ப் சென்றபோது இந்தப் பழக்கம் ஏற்பட்டதாக அறிய முடிந்தது. அதிபரின் ஆலோசனையின்படி மாணவனின் பெற்றோரின் விருப்பத்துடன் பாடசாலையும், இடமும் மாற்றப் பட்டதால் மாணவனால் அதன் பாதிப்பில் இருந்து வெளியே வர முடிந்தது. விரைவாக நடவடிக்கை எடுத்ததால், இன்று பல்கலைக் கழகப் படிப்பைத் தொடரக்கூடிய நிலையில் அவர் இருக்கின்றார். தனது இந்த முன்னேற்றத்திற்குக் காரணம் அவரது பாட்டிதான் என்பது அவருக்குத் தெரியுமோ தெரியாது. அன்று பாட்டி எடுத்த விரைவான நடவடிக்கையே இன்று அவரைக் காப்பாற்றி இருந்தது.

குறைகளையே சொல்வதாக நினைக்க வேண்டாம். எந்த ஒரு தவறும் செய்யாமலே வன்முறை காரணமாகச் சேறுபூசப்பட்ட பதுமவயதினர் பலர் தாய்மண்ணில் செய்வதறியாது தவிக்கின்றனர். செய்யாத தவறுக்காகச் சமுதாயத்தால் தண்டிக்கப் பட்டவர்கள் அவர்கள். 'புதிய வெளிச்சம்' கடந்த காலத்தை, அதன் வலியை மறந்து எதிர்காலத்தை நோக்கி துணிவோடு நடக்க அவர்களுக்கு வழி வகுத்திருக்கின்றது. நாமோ இந்த மண்ணில் அளவுக்கு மிஞ்சிய வசதிகளை வைத்துக் கொண்டு மீண்டும் மீண்டும் சேறுபூசிக் கொள்கிறோம். இந்த மண்ணில் ஈழத் தமிழர்களுக்கான கடந்த 40 வருடங்களில் எமது மொழி, பண்பாடு, கலாச்சார முறைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. நான் கல்வி கற்பிக்கும் பாடசாலையில் சென்ற மாதம் இரண்டு தமிழ் வகுப்புகள் பிள்ளைகள் போதாமையால் மூடப்பட்டது நல்ல சகுனமாக எனக்குத் தெரியவில்லை. வீடுவீடாகச் சென்று கேட்டும் பெற்றோர்கள் பிள்ளைகளை அனுப்புவதில் கவனம் செலுத்த வில்லை. பெற்றோர்களும், சமூக ஆர்வலர்களும் கனடிய மண்ணில் ஒன்றுபட்டுச் செயற்படாவிட்டால் வெகுவிரைவில் ஆங்கிலமும் பிரெஞ்சும் எங்கள் அடுத்த தலைமுறையின் மொழியாக மாறினாலும் ஆச்சரியப்பட இடமில்லை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழம் விற்பனைக்கல்ல!

## மக்களேபடைப்புகள்குறித்துஎச்சரிக்கையாயிருங்கள்!!

படைப்புவெளியின் மீதான மக்களின் நம்பிக்கை என்ற தளத்தைப் பற்றிப்பிடித்துக்கொண்டு படைப்புகள் முகிழ்ந்துகொண்டிருக்கின்றன. படைப்புகளுக்கான இலக்கணங்கள் ஒவ்வொரு படைப்பும் உருவாக்கப்படும் போதே அதற்கான இலக்கணத்தையும் மொழியையும் அழகியலையும் அதன் வடிவத்தையும் உருவாக்கும் என்பது கலையியலாளர்களது கருத்தாகும். படைப்பு மக்களிடம் சேரும்போது அவை இலகுவில் மக்களால் நம்பப்படுபவையாகிவிடுகின்றன. படைப்பின் வெளியீட்டுத்தன்மை என்பது பார்வையாளன் அதனை எவ்வாறு தன்சார்ந்து புரிந்துகொண்டு நகலெடுக்கிறான் என்பதிலேயே தங்கியிருக்கும்.

ஆனால் மக்கள் தம் வாழ்வியலுடன் பொருத்தி நகலெடுக்க முடியாததான படைப்புக்கள் புரியாத புதிர்களாகிவிடுகின்றபோது அவை எவ்வாறு படைப்புக்களாகும்? படைப்புகள் என்பவை ஏதோவொரு இலக்கினை முன்னிறுத்தி, குறிப்பிட்ட தளத்தின் களத்தையும் மக்களது வாழ்நிலையையும் பதிவுசெய்வதற்கான ஒரு ஊடகமாக பார்க்கப்படவேண்டும். அந்த ஊடகங்களிற்குள் அதன் வடிவம் சார்ந்து கவிதை, சிறுகதை, நாவல், பத்தி, நாடகம், குறும்படங்கள், முழு நீளத்திரைப்படங்கள், சிற்பம், ஓவியம் என வெவ்வேறு பெயர்களைப் பெறுகின்றது. இந்த ஊடகங்கள் அவற்றின் வடிவங்களினால் மட்டும் படைப்பாகிவிடுவதனால் உள்ளடக்கங்கள் கேள்விக்குள்ளாக்கப் படும்.

படைப்புகளின் வடிவத்திற்கும் உள்ளடக்கத்திற்குமான ஊடாட்டமானது மக்களது வாழ்வியலைச் சார்ந்திருக்கும்போது தான் குறிப்பிட்ட படைப்புகள் மண்ணின் படைப்புகளாகும். ஆனால் இன்று ஈழத்தைப் பொறுத்தவரையில் படைப்புகள் மண்சார்ந்து இருப்பது கேள்விக்குள்ளாகியிருக்கிறது. ஆனால் படைப்பாளர்களும் படைப்புவெளியும் நிறைந்துகொண்டே வருகின்றது. இந்நிலையில் மக்களுக்கு படைப்பு சார்ந்து தெளிவூட்டப்படவேண்டிய தேவை இருக்கிறது. அந்த தேவையின்பாற்பட்டே இப்பத்தி எழுதப்படுகின்றது.

ஈழத்துச் சூழலில் எழும் படைப்புகள் ஒரு காலத்தில் விடுதலை என்ற ஒற்றைப்புள்ளியிலிருந்து மக்களின் குரலாக அடையாளம் காணப்பட்டன. ஈழத்தின் படைப்புவெளியில் இன முரண்பாடு என்பது தவிர்க்கமுடியாத பேசுபொருள் என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

ஆனால் மாற்றுக்கருத்து கூறுகிறோம் என்ற பெயரில் படைப்புவெளியை மாற்றுக்கருத்தாளர்களுக்கான தளமாகவும் தனிமாந்த இருப்புக்களையும் அவர்களது அடையாளச்சிக்கல்களையும் கொண்ட படைப்புகளுக்கான தளமாகவும் மாற்றிவிட்டிருக்கிறோம். தனிமாந்த இருப்புக்களை முதன்மையாகக் கொண்டு எழும் படைப்புகள் அந்த சமூகஞ்சார்ந்த அக அரசியலையும் மண்ணின் விடுதலையையும் பற்றி பேசாது, புறத்தாக்கங்களின் கருத்தியலிலிருந்து தோன்றும் முரண் அரசியலைப் பற்றி பேசுகின்றன. அவர்களை இனங்காணவேண்டிய தேவை மக்களுக்கு இருக்கின்றது.

படைப்பு என்றால் என்ன? படைப்பு எப்படி இருக்க வேண்டும்? படைப்பை எப்படி அணுகவேண்டும் எனற விடயத்தை மக்கள் தெளிவாக உணர்வார்களெனின் இவ்வாறான படைப்புப்போலிகளை இலகுவாக புறந்தள்ள முடியும்.

தெளிவான அரசியல் புரிதலோடு சமூக வாஞ்சையுடன் மக்கள் குறித்த சமூகப் பார்வையுடன் எழும் படைப்புகள் கூட தேசியம் சார்ந்து புறநடைப்படைப்புக்களாகிவிடக்கூடிய சிக்கலும் இருக்கின்றது. மக்கள் சார்ந்த சமூகச்சிக்கல்கள் முதன்மைச் சிக்கல் மற்றும் அடிப்படைச் சிக்கல் என்பனவாகும்.

சிங்கள பேரினவாதத்தாலும் இந்திய மேற்குலக கூட்டுச் சூழ்ச்சியினாலும் ஒடுக்குமுறைக்குள்ளாகி, அந்த முதன்மைச்சிக்கலை நோக்கி மக்களை ஒன்றுபடுத்துபவர்களாக படைப்பாளிகள் இயங்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அடிப்படைச் சிக்கலை முதன்மைப்படுத்தி முதன்மைச் சிக்கல் அதன் தீர்வை நோக்கி செல்லும் பாதையை மறித்தலென்னும் அரசியல் சூழ்ச்சிக்குள் விழுந்துவிடக்கூடாது என்பதில் சமூகமும் சமூகத்தைப் படைக்கும் படைப்பாளிகளும் தெளிவாக இருக்க வேண்டிய அதேவேளை, அடிப்படைச் சிக்கல்களை பேசாப்பொருளாக்கி முதன்மைச் சிக்கலை மட்டும் பேசுவது சமூக நீதியின் அடிப்படையில் ஏற்புடையதல்ல என்பதையும் உணர வேண்டும்.

சுடுகலன்களின் பேசாநிலையில் மக்களின் குரல்கள் படைப்புத்தளத்தில் ஒலிக்கவேண்டிய தேவைப்பாடுடைய இந்த சூழலில் படைப்புகள் சமூக மாற்றமொன்றினை நோக்கியதாக இருக்க வேண்டும். படைப்பு சார்ந்த சமூகத்தை அதனது விடுதலை நோக்கி முன்னகர்த்துவதாக இருக்க வேண்டும். மறவழிப்போராட்டம் பேசாநிலைக்கு சென்றுவிட்டதால் நாம் எமது விடுதலைத் தாகத்திலிருந்து பின்னகர்ந்துவிடவில்லை என்ற செய்தியை உலகுக்கு கூறுவனவாக இருக்க வேண்டும்.

விடுதலைப்போராட்டத்தையும் அதன் அரசியலையும் சமூகத்தளத்திலிருந்து பேசி, சமூகத்தை ஒடுக்குமுறைக்கெதிராக போராடி, இன்று இறைமையை இழந்து கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பிற்கு உள்ளாகி, சொந்த மண்ணிலேயே ஏதிலிகளாக்கப்பட்டு நிற்கும் நிலையே தமிழ்த்தேசிய இனத்தின் முதன்மைச் சிக்கல். சாதிய ஏற்றத்தாழ்வுகள், பொருண்மிய ரீதியிலான வர்க்க வேறுபாடுகள், பெண்ணுரிமை மறுக்கப்படுதல், பிரதேச வாதம் என தமிழர்களின் அடிப்படைச் சிக்கல்களும் நீள்கின்றன.

மக்களுடைய சமூக அசைவைப் படைக்கும்போது அங்கே அடிப்படைச் சிக்கல்களும் பேசுபொருளாக வேண்டியவை. ஆனால் அவ்வாறு அடிப்படைச் சிக்கல்களைப் பற்றி பேசும் போது, அந்த அடிப்படைச் சிக்கல்களின் வெளிப்பாட்டின் கூர்மையில் முதன்மைச் சிக்கல் மழுங்கடிக்கப்படக்கூடாது. ஆனால் அரச இயந்திரத்தின் அதிகாரத்தினை நேரடியாகக் கேள்விக்குள்ளாக்கும் முதன்மைச்சிக்கலை திசைதிருப்புவதற்காக அடிப்படைச் சிக்கல்களை கூர்மைப்படுத்தும் வேலைகளை அரச பயங்கரவாதத்தின் கைக்கூலிகள் செய்துவருகின்றனர்.

அரசியல் புரிதலுடன் அடிப்படைச் சிக்கல்கள் குறித்து மக்களுக்கு தெளிவூட்டி அவற்றைக் களைவதோடு விழிப்போடிருக்க செய்பவையான படைப்புகள் எழ வேண்டும். மக்களை, அவர்களது வாழ்வியலை, மண்ணினை, சூழலை கூறும் மண்சார்ந்தவையாக படைப்புகள் இருக்கவேண்டும். சமூக வாழ்வியலின் நேர்க்கூற்றினை மட்டும் புலப்படுத்தி, அதன் சிக்கல்களை தவிர்ப்பதென்பது சமூகத்தின் படைப்பாகாது. மக்களது சிக்கல்கள் அவர்களது தனிப்பட்ட வாழ்வியல் சார்ந்தும் சமூகம் சார்ந்தும் பேசப்பட வேண்டிய கடப்பாடு படைப்பாளிகளுக்கு இருக்கிறது.

படைப்புக்கள் சமூகத்தின் தேவைக்கான உற்பத்திகளாக இருக்கின்றது என்பதை படைப்பாளிகள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். தேவைகளிலிருந்து தான் உற்பத்தி பிறக்கும். தேவை இருந்தால் உற்பத்தி பிறக்கும். தேவைகள் இருந்ததால் தான் உற்பத்திகள் பிறந்தன.

மக்களின் வாழ்வியலை வெறுமனே அழகியல் நோக்கில் பதிவுசெய்துகொண்டிருந்த எம் படைப்புவெளியை விடுதலைப்போராட்டமும் அதன் அரசியலும் இன்னொரு தளத்திற்கு இட்டுச்சென்றன. படைப்புவெளியானது விடுதலைக்கான வெளியாக இருக்கவேண்டியது காலத்தின் கட்டாயமாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தழிழரின் படைப்புவெளி விடுதலை சார்ந்து நிரம்பி வழிந்தது. இனத்தினதும் இன விடுதலையின் நோக்கங்களும் தன்னாட்சியுரிமை என்ற அரசியல் சொல்லாடல்களும் படைப்புகளினூடாக மக்களை சென்றடைந்திருந்தன. ஆனால் முள்ளிவாய்க்கால் என்ற அழிவின் பின் எழுந்த படைப்பு வெளி மக்களுடைய தேவைகளை புறந்தள்ளி படைப்பாளிகளின் புகழ் வாஞ்சைக்கு பலியாகிப்போனது. தமிழீழ விடுதலையும் அதன் போராட்டமும் இன்றும் மக்கள் முன் நிற்கின்ற வலுவான சமூகத்தேவை.

தமிழீழ நாடு என்ற புள்ளியில் தான் அந்த தேவை நிறைவுபெறும். ஆனால் இன்றைய படைப்பாளிகள் சமூகத்தின் தேவைகள் நிற்கும் தளத்தினை விடுத்து, தேவையற்ற உற்பத்திகளை நிகழ்த்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த தேவையற்ற படைப்புகள் மக்களது நுகர்வுப்பண்பாட்டை கேள்விக்குட்படுத்தி, கண்டதையும் நுகரும் சமூகமாக மாற்றி விடும். நுகர்ச்சி சுட்டெண்ணுக்கு மேலாக அவர்களது மிகை நுகர்ச்சியை தூண்டி, ஒரு தேசிய இனத்தின் தற்சார்பினைக் கேள்விக்குள்ளாக்கும் கேவலமான வேலையை சில படைப்பாளிகள் செய்துவருகின்றனர்.

சொந்த புகழரிப்புக்களுக்காக ஒரு தேசிய இனம் தன் தற்சார்பை இழத்தலென்பது ஏற்புடையதன்று. வெளியும் பொருண்மியமும் இருப்பதென்பதற்காக இரண்டு ஏக்கர் நிலத்தில் குறோட்டன் செடியை நடமுடியுமா என்ன?

படைப்பின் உள்ளடக்கம் வினைத்திறனாக இருப்பதை உறுதிப்படுத்துவதும் படைப்பாளியின் கடமைகளிலொன்று. இரண்டு நிமிடங்களில் சில காட்சிப் படிமங்களுடனோ அல்லது அழுத்தமான சொல்லாடல்களினூடாகவோ சொல்ல வேண்டிய கருத்தை சொல்ல வேண்டிய பேசுபொருளை தனது ஆற்றல் குறைபாட்டினால் இரண்டு மணித்தியாலங்களுக்கு சொல்வதென்பது மக்களின் மாந்த மணித்தியாலங்களை திருடுவதாகும்.

சொல்ல வந்த கருத்தினை ஆழமாகவும் அறிவியலுடனும் சொல்ல முடியாத படைப்பாளிகள் படைப்பாளிகள் அல்லர். படைப்பாளிகளாக நிலைக்க வேண்டுமெனில் அவர்கள் தமது அறிவுத்தளத்தை விரிவுபடுத்தப்படவேண்டிய நெருக்குவாரத்துக்குள் இருக்கிறார்கள் என்றே பொருள்கொள்ள வேண்டும்.

எத்தகைய தளத்திலிருந்து படைப்பு எழுகின்றதோ அந்த தளம் தொடர்பான ஆழமான புலமை, சமூகம் குறித்த ஆழ்ந்த பார்வை, அந்த தளம் சார்ந்து ஏலவே பேசப்பட்டுவரும் சர்ச்சைகள், அந்த படைப்புத்தளம் குறித்த புதிதான கருத்து வெளிகள் தொடர்பான தெளிவு, அந்த சமூகம் சார்ந்த அரசியல் என்பன குறித்த முழுமையான அறிவுடன் படைப்பாளி தன்னை தகவமைத்துக்கொள்ள வேண்டும்.

அந்த தகுதிநிலையுடன் எவரிற்கான படைப்போ, யாருடைய நோக்கிற்காக குறித்த படைப்பு படைக்கப்படுகின்றதோ, குறிப்பிட்ட படைப்பு உற்பத்தி யாருடைய தளத்தில் நிகழ்கிறதோ, அந்த உற்பத்தி எங்கு மாற்றங்களை வேண்டி நிற்கின்றதோ அந்த மக்கள் சார்ந்து இலகுத்தன்மையுடன் இருக்கவேண்டும். படைப்பாளி தனது அறிவுச் செருக்கை திணிப்பதற்கு அவை நிகண்டுகளோ வாய்;ப்பாடுகளோ அல்ல என்ற தெளிவும் படைப்பாளிக்கு இருக்க வேண்டும். ஆனால் தனது மொழிச்செழுமை குறித்தும் மொழி அறிவு குறித்தும் தன் சார்ந்த தேடல் எப்போதும் படைப்பாளிக்கு இருக்க வேண்டும். மக்களுக்கு விளங்கமுடியாத படைப்புக்களே உயர்வானதென்று எண்ணி, எளிமையான படைப்புக்களை எள்ளி நகையாடும் தன்மையும் படைப்பு வெளியில் இருக்கிறது.

மொழி சார்ந்தும் காண்பியம் சார்ந்தும் புலமை உடையவர்களென்பதால் மட்டும் நல்ல படைப்புகளை படைப்பாளியால் உருவாக்கிவிட முடியாது. சிக்கல்களான மொழிக்கோர்வைகளில் நான்கு வரிகள் எழுதிவிட்டு அதனை படைப்பென கொண்டாடுதல் எவ்வளவு அபத்தமோ, அதை விட குறிப்பிட்ட பிரதேசம் சார்ந்து அதன் வட்டார வழக்கில் ஒரு படைப்பு வெளிவருமிடத்து, வட்டார வழக்கு என்ற ஒரேயொரு காரணத்துக்காக அது அந்த மண்ணுக்கான படைப்பாக கொண்டாடப்படுவதும் அபத்தம். அது மண்சார்ந்த படைப்பும் அல்ல. வெறுமனே அந்த படைப்பாளியின் சொந்த சொறிதலுக்காக படைக்கப்பட்ட படைப்பாகவே அது நோக்கப்பட வேண்டும்.

அதேபோல குறிப்பிட்ட படைப்புக்கான காட்சிவெளி குறிப்பிட்ட மண்ணை தளமாகக் கொண்டது என்பதற்காக அது அந்த மண்ணுக்கான படைப்பாகி விடாது. மண்ணுக்கான படைப்பு அதன் உள்ளடக்கம் சார்ந்து மக்களுடையதாக இருக்கும்போதே மண்ணுக்கான படைப்பாக மாறும்.

ஈழத்து படைப்பு வெளியில் படைப்பவர் குறித்த முன்முடிவுகளை வைத்துக்கொண்டு அவரின் படைப்புகள் குறித்தும் முற்கற்பிதங்களுடன் நோக்குதல் வளர்ந்து வருகின்றது. எந்தவொரு படைப்பையும் படைப்பாளியின் முன்முடிவு குறித்த நோக்குநிலையில் நின்று ஒதுக்குவதும் சரி, வலுவூட்டுவதும் சரி ஏற்படையதாகாது. எமது திறனாய்வின் குறைபாடாகவே இதை நோக்க வேண்டும்.

சமூக வலைத்தளங்களின் கட்டுமீறிய வருகையின் காரணமாக விளம்பர உலகம் ஒவ்வொருவரின் அறையிலும் குந்திக்கொண்டு இருக்கிறது அந்த விளம்பர நுட்பங்களாலும் இந்த நோக்குநிலைகள் மாற்றியமைக்கப்படுகின்றன. படைப்புகளை எவ்வாறு நோக்கவேண்டும் என்ற அறிவியலை மயக்கி, படைப்பு குறித்த அடையாளத்தை மட்டும் நோக்கச் செய்துவிடுகின்ற விளம்பரங்களால் குறிப்பிட்ட படைப்பு படைப்பாகி விடாது.

புகழ் வெளிச்சத்தின் பரிதிக்குள் ஆட்பட்டவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக அவர்களின் எல்லா படைப்புக்களும் படைப்புகளாகிவிடுமா என்ன? அவை குறிப்பிட்ட நபரின் படைப்புகள் என்ற பெயரை பெறும். பெரும்பாலான படைப்பாளிகள் புகழ்வெளிச்சத்துக்குள் இடம் தேடுபவர்கள். தமது அறிவுநிலைக்கு ஏற்றாற்போல, சொந்த விருப்பு வெறுப்புகளின் பாற்பட்டு, அவர்களது தனிப்பட்ட வாழ்வியல் தாக்கங்களுக்கு ஏற்றாற்போல போல வெளிவரும் படைப்புகள் மண்ணிற்கான படைப்புக்களாகவேண்டுமெனில் தன்னிலிருந்து படைப்பைப் படைக்காமல் சமூகத்திலிருந்து படைப்பைப் படைத்தல் வேண்டும்.

தத்தமது அறிவுநிலைக்கேற்ப அறிவியலுக்கு புறம்பாக நின்று அழகியலை மட்டும் முன்னிறுத்தும் படைப்பாளிகளால் சமூகத்தின் அறிவார்ந்த தேவைக்குரிய படைப்புக்களை படைக்க முடியாது. அத்தகையோரின் படைப்புக்களால் சமூகத்தில் எந்த மாற்றமும் நிகழ்ந்துவிடப்போவதுமில்லை. சமூக மாற்றத்திற்கான உற்பத்தியை அந்த சமூகத்தின் பண்பாட்டுத் தளத்தில் நின்று நிகழ்த்தாதவர்களின் படைப்புகள் மண்ணிலிருந்து புறந்தள்ளப்படவேண்டியவை. படைப்பின் மூலம் பொருளீட்டுதல் என்பது தவறல்ல.

ஆனால் மண்ணிற்கு தேவையற்ற உற்பத்திகளை நிகழ்த்திவிட்டுமண்ணின் அடையாளத்தை பயன்படுத்தி, ஈழப்படைப்பு என்ற சுட்டியின் வலுவால் பொருளீட்டுதலென்பது மிகவும் கேவலமானது. அத்துடன் விளம்பர உத்திகளின் மூலம் சமூகத்தில் தேவையில்லாத நுகர்வுகளை புகுத்திவிடுவது கயமைத்தனமும் எம் மண்ணிற்கு செய்கின்ற இரண்டகமுமாகும். "ஈழம்" என்பது விற்பனைக்கல்ல. அது எம் மக்களுக்கானது. மண்ணுக்கானது. வியாபாரிகளின் விற்பனைக்கானதென நினைத்தால் அவர்களை புறக்கணிக்க வேணடிய கடமை மக்களுக்குண்டு.

மக்களிடையே தேவையற்ற நுகர்வுகளை உட்புகுத்தி, அவர்களின் தற்சார்பினைக் கேள்விக்குள்ளாக்குவது இன அழிப்பு அரச பயங்கரவாத உளவுத்துறைகளின் நுண்ணிய செயற்றிட்டங்களாகும். குறிப்பாக ஈழத்து தளத்தில் இந்திய உளவுத்துறையின் ஊடுருவலைச் சுட்டலாம். எப்போதுமே உளவுத்துறைகள் தமக்குரிய கூலிகளை உளவியல் சிக்கல்கள் உள்ளோர், அடையாளச் சிக்கலில் இருப்போர், புகழ் வாஞ்சை உடையோர் என்ற கூட்டத்தினுள் தேடும்.

படைப்பாளிகள் இலகுவில் உளவுத்துறைகளின் வலைக்குள் வீழ்ந்துவிடக்கூடிய நிகழ்தகவு அதிகம். செய்தி ஊடகங்கள், காட்சி ஊடகங்கள், துணைத் தூதரகங்கள், கல்வி நிறுவனங்கள், தனியார் அமைப்புக்கள் என உளவுத்துறையின் கால்கள் எங்கும் வைக்கப்பட்டுள்ளன. தகுதியற்றவர்களை உருவாக்கி, அவர்களின்மூலம்உருவாகும்தகுதியற்ற படைப்புகளின் வழி, மண்சார்ந்த வலுவான படைப்புக்கள் எழுவதைத் தடுப்பதற்காக விருதுகள் என்னும் புகழ் மாயை பயன்படுத்தப்படும். தகுதியானவர்களின் குரல்களை முடக்கி தகுதியற்றவர்களின் குரல்களை படைப்புக்களாக்கும் இந்த சூழ்ச்சிக்கு எம் மண்ணும் பலியாகிக்கொண்டிருக்கிறது.

மக்களிடையே மண்சார்ந்த கருத்துருவாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய ஊடகங்களை புறந்தள்ளியோ அல்லது ஊடகர்களை புறந்தள்ளியோ தகுதியற்ற ஊடகங்களும் தகுதியற்ற ஊடகர்களும் முன்னிலைப்படுத்தப்படுவதன் பின்னாலுள்ள அரசியல் மிகவும் நுண்ணியது. சமூகப்பார்வையும் தெளிவான அறிவும் சமூகம் சார்ந்த புலனாய்வுப் பார்வையும் உள்ள படைப்புக்களும் அவற்றிலிருக்கும் கருத்துருவாக்கங்களும் மக்களிடம் செல்லாமலே படைப்பு போலிகளாலும் கூலிகளாலும் மறுத்தாடப்படுகின்றன.

தகுதியற்றவர்களின் படைப்புகளை வெளியே கொண்டு செல்லப்படுவதற்கான பொருண்மிய உதவிகளை வழங்கி, அதன் மூலம் அந்த படைப்புக்களுக்கான வெளி எம் மண்ணில் உறுதிசெய்யப்படுகிறது. பெரும்பொருட்செலவில் வரக்கூடிய இலக்கியப் படைப்புக்களோ காண்பியம் சார்ந்த திரைப்படம், குறும்படம் போன்ற படைப்புக்களோ வரும்போது, அவை குறித்தும், அந்த உற்பத்தியின் பின்னாலிருக்கும் பொருளியல் மூலம் குறித்தும் அந்த வருவாயைப் பெற்ற படைப்பாளியின் மீதும் மக்கள் கவனமாக இருக்க வேண்டும்.

தகுதியற்ற படைப்பாளிகளை உருவாக்குவதும், தகுதியற்ற படைப்பாளிகளை ஊக்குவித்தலும் படைப்பு வெளியினை ஆளும் அதிகாரம் தன் கையில் எடுப்பதற்கான செயற்பாடுகளாகும். இன்றைய புகழ்வெளிச்சம் பெற்ற படைப்பாளிகளில் சிலர் இந்திய உளவுத்துறையின் வரம் பெற்றவர்கள். ஆனால் புகழடைபவர்கள் எல்லாரும் அப்படியானவர்கள் என்று சொல்வதல்ல எமது நோக்கம். எனினும் இதுகுறித்த விழிப்பு மக்களிடம் இருக்கவேண்டும். வெறுமனே புகழ்வெளிச்சம் பெற்றதுக்காக, குறித்த படைப்பாளியின் முகத்துக்காக தகுதியற்ற படைப்பாளிகளை வளர்த்துவிடக்கூடாது என்பதில் மக்கள் தெளிவாக இருக்க வேண்டும்.

தமிழ்த்தேசியத்தின் இருப்பை படைப்புவெளியில் சிதைப்பதற்காகவும் மக்கள் தமது விடுதலை நோக்கிய பாதையில் தமது படைப்புவெளியை

**ஈழத்து படைப்பு வெளியில் படைப்பவர் குறித்த முன்முடிவுகளை வைத்துக்கொண்டு அவரின் படைப்புகள் குறித்தும் முற்கற்பிதங்களுடன் நோக்குதல் வளர்ந்து வருகின்றது. எந்தவொரு படைப்பையும் படைப்பாளியின் முன்முடிவு குறித்த நோக்குநிலையில் நின்று ஒதுக்குவதும் சரி, வலுவூட்டுவதும் சரி ஏற்படையதாகாது. எமது திறனாய்வின் குறைபாடாகவே இதை நோக்க வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எந்த வகையிலும் எமது சமூகத்தின் தேவைக்கேற்ற உற்பத்தி இல்லாத படைப்புகளை இனங்காண்பதில் சிக்கல்கள் இருப்பதால் படைப்பை ஆய்வு செய்து மக்களுக்கு அறிமுகம் செய்யவேண்டிய தேவை எமக்கு இருக்கிறது. மக்களுக்குத் தேவையான படைப்புகளே உற்பத்தியாக வரவேண்டும். மக்களினின்றும் எம் மண்ணினின்றும் அந்நியப்படும் படைப்புகள் எமக்கு தேவையற்றவை. அவ்வாறான கேடு கெட்ட படைப்புக்களுக்கு விடைகொடுக்க வேண்டிய தேவை எமக்கு உள்ளது.**

கட்டியமைப்பதை தடுப்பதற்காகவும் கருத்துருவாக்கவெளி அரசியல் அறிவிலிகளான படைப்பு போலிகளால் படைப்புவெளி நிரம்பிக்கொண்டிருக்கிறது. புலி எதிர்ப்பு, தேசிய மறுப்பு, நல்லிணக்க நாடகம் என கூலிகளுக்கான தளம் விரிவடையச் செய்யப்படுகிறது. ஆரியப் பார்ப்பனிய கருத்துருவாக்கங்களும் அந்த படைப்பு வெளியில் மெல்ல மெல்ல ஊடுருவிக்கொண்டிருக்கிறது.

மக்களோடு மக்களாக நின்று சமூக மாற்றத்தைப் பேசவேண்டியர்கள் புகழுக்காகவும் பொருண்மியத் தேவைகளுக்காகவும் அந்த சமூகத்தை எதிரியிடம் அடகுவைத்து, தம் இருப்பினை தக்கவைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆய்வின் அடிப்படை தெரியாதவன் ஆய்வாளன் எனவும் ஒரு கவிதை நூலை வெளியிட்டவுடன் இலக்கியர் எனவும் விருதுகள் கிடைப்பதை எடுத்துக்காட்டாகச் சுட்டலாம்.

அந்த விருதுகளின் பின்னால் உள்ள அரசியல் சூழ்ச்சிக்குள் தாங்களும் மாண்டுபோய் மக்களையும் மாளவைப்பதென்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. மக்கள் "ஈழ" வியாபாரிகளை போல "விருது" வியாபாரிகளிடத்திலும் கவனமாக இருத்தல் வேண்டும். விருது வியாபாரிகள் படைப்பாளிகளை விருதுகளின் மூலம் தம்வயப்படுத்தி, தம் கைப்பாவைகளாக்கி விடுகின்றார்கள். தகுதிக்கு மீறிய விருது கிடைக்கும்போது மக்களும் படைப்பாளிகளும் அந்த படைப்புகள் குறித்தும் படைப்பாளிகள் குறித்தும் எச்சரிக்கையுடனிருத்தல் வேண்டும்.

ஈழத்து படைப்பு வெளியில் சமூகத்தை படைப்பவன் பிற்போக்குவாதி எனவும் அதிலிருந்து மாற்றுக்கருத்தை படைப்பவன் முற்போக்குவாதியெனவும் எண்ணுகின்ற தன்மையொன்று உள்ளது. சுருங்கக்கூறின் புலியை எதிர்த்தலென்பது படைப்பாளிகளின் முற்போக்குத்தனம் என்னும் கருத்தாக்கம் ஏற்படுத்திவிடப்படுகின்றது. எதிர்ப்பு கருத்துக்கள் எல்லாம் முற்போக்கானவை அல்ல எனவும் அதைப் படைப்பவர்கள் முற்போக்குவாதிகள் அல்ல எனவும் அந்த படைப்பாளிகளின் முகத்திலறைந்து சொல்ல வேண்டிய தேவையும் எமக்கு இருக்கிறது.

அதன் மறுபக்கத்தில் போராளிகளையும் போராட்டத்தையும் கொச்சைப்படுத்துபவர்கள் மட்டும் ஆபத்தானவர்கள் அல்ல; தமிழ்த்தேசிய சித்தாந்தத்தை ஏற்றுக்கொள்பவர்கள் என்ற காரணத்துக்காக அவர்களது படைப்புக்களில் தமிழர்களுக்கான கருத்தாக்கம் தான் வெளிப்படும் என நினைத்து, அந்த படைப்புகளை ஏற்றுக்கொள்வதும் ஆபத்தானதே. அவர்களது படைப்பில் வெளியாரது கருத்தூட்டங்கள், படைப்பிற்கான பொருண்மிய அனுசரணையின் பாற்பட்ட இணக்கப்பாடுகள் போன்றவையும் இருக்கக்கூடும். அந்த விடயம் தொடர்பிலும் தமிழ்மக்கள் விழிப்பாக இருத்தல் வேண்டும். எனினும் தமிழ்த்தேசிய சிந்தனை அல்லாதவர்கள் எளிதாக படைப்புவெளியின் சூழ்ச்சிகளுக்கு தடுமாறிவிடுவார்கள்.

படைப்புவெளியானது விடுதலைக்கானதாக மட்டும் தன்னை நிலைநாட்டிக்கொள்வதில் சில படைப்பாளிகளுக்கு உடன்பாடில்லை. விடுதலைமட்டுமேமக்களதுவாழ்வியல் என்பதோ அல்லது விடுதலை குறித்து மட்டும் தான் படைப்புவெளி நிரம்பியிருக்கவேண்டுமென்றோ அல்லது ஒரு புரட்சிகர இயக்கத்தின் வெளியீடுகளாக படைப்புக்கள் இருக்கவேண்டுமென்றோ நாம் சொல்ல வரவில்லை. தமிழ்த்தேசிய சித்தாந்தத்தை சொல்லி சமூக வாழ்வின் தன்மைகளை முற்றுமுழுதாகப் புறக்கணிப்பது எமது நோக்கம் அல்ல.

மக்களது அழகியலுணர்வை புறந்தள்ளுவதும் நோக்கமல்ல. அழகியலுடன் இணைந்த அறிவியலுடன் மக்களது நுகர்வு இருக்கவேண்டும் என நினைக்கிறோம். படைப்புகள் என்ற போர்வையில் கவர்ச்சிகரமாக உள்நுழையும் நயவஞ்சக நுழைப்புகளையும் அரசியற் பார்வையை மூடிமறைக்கும் படைப்புக்களையும் குறித்து மக்கள் எச்சரிக்கையுடனிருக்கவேண்டும். அவ்வாறான படைப்புகள் குறித்து மக்களை எச்சரிக்கையுடனிருங்கள் என்று சொல்வதே தவிர படைப்புக்களையும் படைப்பாளிகளையும் புறந்தள்ளுவதல்ல எமது நோக்கம். தமிழீழ ஆட்சிப்புலமொன்று இருக்குமெனில் உள்வரும் படைப்புகள் எமக்கானதா இல்லையா என்று வடிகட்டி, மக்களுக்கான படைப்புகளை தணிக்கைக்குழு கொடுக்கும்.

ஆனால் இன்று அந்த கொடுப்பினை எமக்கு இல்லை. எந்த வகையிலும் எமது சமூகத்தின் தேவைக்கேற்ற உற்பத்தி இல்லாத படைப்புகளை இனங்காண்பதில் சிக்கல்கள் இருப்பதால் படைப்பை ஆய்வு செய்து மக்களுக்கு அறிமுகம் செய்யவேண்டிய தேவை எமக்கு இருக்கிறது. மக்களுக்குத் தேவையான படைப்புகளே உற்பத்தியாக வரவேண்டும். மக்களினின்றும் எம் மண்ணினின்றும் அந்நியப்படும் படைப்புகள் எமக்கு தேவையற்றவை. அவ்வாறான கேடு கெட்ட படைப்புக்களுக்கு விடைகொடுக்க வேண்டிய தேவை எமக்கு உள்ளது.


ஆனால் கேடான விடயங்கள் உள்ளே வருவதைத் தடுப்பதற்கான தணிக்கைக்குழு என்னும் பொறிமுறை இன்று எம்மிடமில்லை. மக்கள் அந்தப் பொறிமுறையை தமது கைகளில் எடுத்துக்கொள்ளவேண்டிய கட்டாயத்திலிருக்கிறார்கள்.

மக்கள் அரசியற்படுத்தப்பட்டால், தமது அரசியல் அறிவினை உயர்த்திக்கொண்டு தமக்கான படைப்புவெளியை தாமே தீர்மானிக்கும் தடுப்பரண்களை அமைப்பார்கள். எங்கள் மண்ணிற்கான படைப்புகளையும்; தீர்மானம் செய்யும் தணிக்கையாளர்களாக மாறி, எமக்கான படைப்புவெளியினை எமது மண்ணிற்குரிய வெளியாக மக்கள் மாற்றுவார்களா?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களின் சாதனைகளை அங்கீகரிக்கிறது CanTYD





கனடியத் தமிழ் இளைஞர் மேம்பாட்டு மையத்தின் 18வது 'சிறப்பு' விருது வழங்கும் நிகழ்ச்சி, ஃப்ளாடோ மார்கம் தியேட்டரில் அக்டோபர் 29ஆம் தேதி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியின் முதன்மையான நோக்கமே, தமிழ் கனடிய மாணவர்களின் வியத்தகு சாதனைகளை உலகறிய அங்கீகரிப்பதே ஆகும்.

இந்த நிகழ்ச்சியில் விருது பெற்ற சில மாணவர்களின் புகைப்படங்கள்.





A FABRICA Grand Opening Ceremony- Indoor High performance soccer training facility
480 ATpscot Road, Unit #10, Scarborough. Asok Santhiralingam -6472972765







Career Guidance Workshop for High School Students Organized by the Associaation of Sri Lankan Graduates of Canada (ASGC) and York Region District School Board (YRDSB) - Nov 4 2017

# Royal Brokers காப்புறுதி நிறுவனத்தின் முகவர் மதிப்பளித்து நிகழ்வு




Royal Brokers காப்புறுதி நிறுவன அதிபர் சிவா கந்தையாவிடமிருந்து காப்புறுதி துறையில் வெற்றியாளர் தனா மாணிக்கவாசன் அவர்கள் மதிப்பளிப்பதை படத்தில் காணலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூத்த பத்திரிகையாளர் கோபு காலமானார்

இலங்கையில் மூத்த தமிழ் பத்திரிகையாளரான கோபு எனப்படும் எஸ்.எம். கோபாலரெத்தினம் 11/15/2017 புதன்கிழமை அன்று 87—வது வயதில் மட்டக்களப்பில் காலமானார்.

தமிழ் பத்திரிகை துறையில் 1953—ஆம் ஆண்டு வீரகேசரி நாளிதழில் ஒப்பு நோக்குநராக இணைந்து கொண்ட இவர் அதே ஆண்டில் உதவி ஆசிரியரானார்.


1960—ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வெளிவந்த 'ஈழநாடு' நாளிதழில் செய்தி ஆசிரியராக இணைந்து கொண்ட அவர், அந்தப் பத்திரிகையின் ஆசிரியராக உயர்வு பெற்று 20 வருடங்களுக்கு மேல் அந்நிறுவனத்தில் பணியாற்றினார்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் வெளியான காலைக்கதிர், செய்திக்கதிர் , ஈழமுரசு ஆகிய பத்திரிகைகளிலும் ஆசிரியராக பணியாற்றி இறுதியாக 2000—ஆம் ஆண்டு மட்டக்களப்பில் வெளியான " தினக்கதிர் " நாளிதழ் ஆசிரியராக இணைந்து சில வருடங்கள் பணியாற்றினார்.

யாழ்பாணத்தில் வெளிவந்த " ஈழமுரசு "பத்திரிகை ஆசிரியராக பணியாற்றிய வேளை 1987ம் ஆண்டு நவம்பர் 23—ஆம் தேதி இந்திய அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்டு இரண்டு மாதங்கள் வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்திய அமைதிப்படையினரால் கைதாகி தடுத்து வைக்கப்பட்டிருந்த தனது அனுபவத்தை " ஈழ மண்ணில் ஓர் இந்திய சிறை " என்ற தலைப்பில் எழுதினார்.

இந்த கட்டுரை "ஜூனியர் விகடன் " இதழில் தொடர் கட்டுரையாக வெளியாகியிருந்தன.





கோபுவின் அரை நூற்றாண்டு கால பத்திரிகைப்பணியைப் பாராட்டி தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர், 2004ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4ஆம் திகதி தேசியச் சின்னம் பொறிக்கப்பட்ட தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவித்திருந்தார்.

2002ஆம், 2004ஆம் ஆண்டுகளில் ஜேர்மனி பிரான்ஸ், லண்டன் முதலிய ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று திரும்பிய கோபு, அங்கு எழுத்தாளர் சங்கங்களின் வரவேற்றுகளையும் பெற்றார்.

கோபு, பத்திரிகையாளர் என்பதற்கு அப்பால், ஸ்ரீ ரங்கன் என்ற பெயரில் பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

எஸ்.எம்.ஜீ.பாலரெத்தினம், ஊர் சுற்றி எனப் பல பெயர்களிலும் திரை விமர்சனம், இசை விமர்சனம், நூல் விமர்சனம், என அவர் பல விடயங்களையும் எழுதியுள்ளார்.

அரசியல் கட்டுரைகள், பொதுக் கட்டுரைகள் என ஆயிரக்கணக்கில் எழுதியுள்ள எஸ்.எம்.ஜீ., "ஈழ மண்ணில் ஓர் இந்தியச்சிறை", "அந்த ஓர் உயிர்தானா உயிர்", "பத்திரிகைப் பணியில் அரை நூற்றாண்டு", "ஈழம் முடிவில்லாப் பயணத்தில் முடியாத வரலாறு" ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணம், கன்னாதிட்டியில் 1930.10.03இல் பிறந்து பெருமாள் கோயிலடியில் வாழ்ந்த கோபலரத்தினம், தனது ஆரம்பகல்வியை சேணிய தெரு சன்மார்க்க போதனா துவிபாசா பாடசாலையிலும் பின்னர் இராமகிருஷ்ண மிஷன் யாழ்.வைதீஸ்வரா கல்லூரியிலும் கற்றார். சில மாதங்கள் மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா வித்தியாலயத்திலும் கற்றுள்ளார்.

இலங்கை தமிழ் பத்திரிகை உலகில் கோபு ,எஸ்.எம்.ஜி என பலராலும் அறியப்பட்ட எஸ்.எம். கோபாலரெத்தினம் ஆணித்தரமான அரசியல் தலையங்கங்கள், கட்டுரைகள் மற்றும் செய்திகள் மூலம் துணிச்சல் மிக்க பத்திரிகையாளராக விளங்கினார்.

தன்னை தானே விளம்பரப்படுத்திக்கொள்ளும் திறமை தெரியாத மனிதர். தன்னளவில் நிறைவான பணியை செய்தால் போதும் என்று ஒதுங்கிக்கொள்பவர். பத்திரிகைத்துறைதனதுவாழ்வைஉள்ளும் புறமுமாக உரித்தெறிந்துவிட்டதே என்ற வெளியில் சொல்ல முடியாத கவலை. இப்படி பல வரண்ட உணர்வுகளை சுமந்துகொண்டிருந்தவர். இன்று ஓய்ந்துவிட்டார்.

இகுருவியின் அஞ்சலிகள்!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RE/MAX ACE நிறுவன Award & Gala 2017












RE/MAX ACE வீடு விற்பனை முகவர் நிறுவனம் தனது முகவர்களுக்கான விருது விழாவை 12 /11/2017 அன்று நடாத்தியிருந்தது . ஶ்ரீ நடராஜசுந்தரம், ரதீஸ் பரமலிங்கம் மற்றும் சுரேஷ் பரமலிங்கம் ஆகியவர்களின் தலைமையில் மிக சிறப்பாக நடைபெற்றது


























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்க ஒவ்வருத்தரும் நிச்சயமாக எங்கள் நாட்டிலுள்ள மக்களுக்கு ஒரு சின்ன உதவி எண்டாலும் செய்ய வேண்டும்.

**செ**ப்டம்பர் மாதம் 16ம் திகதி பெரிய சிவன் ஆலயத்தில் நடைபெற்ற சிவன் பவுண்டேசன் விழாவிற்கு இலங்கையில் இருந்து வருகை தந்திருந்த சிவன் பவுண்டேசன் நிறுவனர் திரு. கணேஷ் வேலாயுதத்தை ஈகுருவி சந்தித் பொழுதில் அவர் பகிந்து கொண்டவை.

**சிவன் ஃபவுண்டேசனை பற்றிய சிறு விளக்கம் ஒன்றை தாங்கோ..?**

சிவன் ஃபவுண்டேசன ஆரம்பிச்சதுக்கு காரணம் வந்து என்றைய மகன் எனக்கு ஒரு மகன் பிறந்தவர் அஞ்சு மாதத்தில் பிறந்தவர் அதால அவருக்கு கண் தெரியாது நடக்க மாட்டார் கதைக்க மாட்டார். அவரோட வெயிட் 665 கிராம் அப்ப டாக்டர் கூப்பிட்டு சொன்னார் தப்பமாட்டாரென்று.. சோ அவர நான் வளக்கப்பட்ட கஷ்டம் பண வசதிகள் அரசாங்க உதவிகள் இருந்தும் அவர வளக்கப்பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ் சமில்ல.. அப்ப நான் யோசிச்சேன் என்னதென்றா இலங்கையில இப்படியான பெற்றோர்கள் எப்படி சமாளிப்பினும் இந்த மாதிரி குழந்தைகள வச்சிக்கொண்டு.. அப்ப 2008 ஆம் ஆண்டு நான் ஒரு முடிவெடுத்தேன் நான் அங்க போய் ஒரு பெரிய இடம் ஒன்று எடுத்து இப்படியான பெற்றோருக்கு ஒரு பிரேக் குடுக்கிறமாதிரி ஒரு ரெஸ்ட் பாயிண்ட் மாதிரி என்றுதான் ஆரம்பிச்சது 2008ஆம் ஆண்டுல காணி வேண்டி ,கட்டிடம் கட்ட துவங்கினேன் நான்.. அப்ப என்னிடம் பெருசா காசு இருக்கல அப்ப நான் காசு வார நேரம் கட்றது பொறவு நிப்பாட்டுறது அப்படிண்ணு 12 ஆம் ஆண்டுல கட்டிட வேலைகள கட்டி முசிச்சேன் நான்.

அதுல இருந்து இந்த டிரீட்மெண்ட் சித்த மருத்துவம் டிரை பண்ணி பார்த்தோம் நாங்க இந்த பிள்ளைகளுக்கு எவ்வளவு முன்னேற்றம் வருதென்று பாப்போமென்று அந்த சித்த மருத்துவத்தால எக்கச்சக்கமான் நல்ல முன்னேற்றங்கள் வந்தது உதாரணமாச் சொல்லப்போனா ஒரு பிள்ள வந்து கிளிநொச்சில பத்து வயது வரைக்கும் படுத்திருந்த பிள்ள அத ஒரு வருஷ ட்ரீட்மென்ல நாங்க நடக்க பண்ணினோம் மற்றது பள்ளிக்கூடம் போகாமல் வீடு வழியே இருந்த பிள்ளைகள் பள்ளிக்கூடம் எடுக்க மாட்டோம்ணு சொன்ன பிள்ளைகளையெல்லாம் நாங்க பள்ளிக்கூடத்துக்கு அனுப்பியிருக்கோம் திரும்ப ஒ டி சிம்டம் தொடர்பான இதுலயெல்லாம் நிறைய குணப்படுத்தியிருக்கோம் அதுக்கு பிறகு இதை நாடு முழுக்க செய்யணும் என்று கிட்டத்தட்ட ஆறு இடங்களில் செய்து கொண்டிருக்கிறோம்.

சில இடங்களில் திறந்த நாங்கள் ஆட்கள் காணாதபடியால் அத மூட வேண்டி வந்தது முல்லைத்தீவு கிளி நொச்சியெல்லாம் இருந்தது. அத நிப்பாட்டியாச்சு. அப்ப நாங்க சில இடங்கள்ள க்ளோஸ் பண்ணியிருக்கிறோம் இப்ப ஆறு இடங்கள்ள செய்யிறோம் யாழ்ப்பாணம், நெல்லியடி, சித்தாண்டி,கண்டி,மாத்தள , திகால இதுதான் சிவன் பவுண்டேசன் ஆரம்பைச்சதுக்கான மெயின் காரணம்


**இந்த சிவன் ஃப்வுண்டேசனுக்கு இந்த தொண்டை தாண்டி வேறு ஏதேனும் கனவுகள் லட்சியங்கள் இருக்கின்றனவா..?**

இப்ப சிவன் பவுண்டேசன் இந்த இயலாத பிள்ளைகளோட வேலை செய்து கொண்டிருக்கிறோம் அதைவிட இப்ப கல்வியில நியாயமான வேலைகள தொடங்கியிருக்கிறோம், நான் வந்து பதினாறு வயதுல இயக்கத்துக்கு போன நான் எங்கட மக்களுக்காக போராடணும்ணு போன நான் இன்றைக்கும் நம் மக்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் அவர்களை முன்னுக்கு கொண்டுவரவேண்டும் என்பதில் பதினாறு வயதில் நான் எப்படி இருந்தேனோ இன்றைக்கும் அதே போலத்தான் இருக்கிறேன்.

உங்களுக்கு தெரியுமோ தெரியல வடமாகாணம் கல்வியில ஒன்பதாவது இடத்துல இருக்கு, எங்கட மாகாண சபை பொறுப்பெடுக்கைல 13 ஆண்டு அவியள்ட கொடுக்கப்பட்டது ஆறாவது இடத்துல வச்சு.. ஆனா இன்றைக்கு நாங்க ஒன்பதாவது இடத்துல இருக்கிறோம். மற்றது தீவகத்தை பொறுத்தவரைக்கும் போனவருஷம் இலங்கையிலேயே கடைசியான வலையம் தொண்ணூதி நாலு வலையங்கள்ள தீவகம் தான் தொண்ணூத்து நாலாவது வலையம் இப்ப தொண்ணூத்து நாலு வலையத்த தொண்ணூத்து ஆறாக்கியிருக்கினும் அதால இந்த முற ரெண்டு வல மேல வந்திருக்கு தீவகம், போன வருஷம் ஒ லெவல் ரிசல்ட எடுத்து பாத்தீங்களன்றா 8222 பேர் ஒ லெவல் எடுத்திருக்கினும் அதுல வட மாகாணத்துல 284 பேர்தான் எடுத்திருக்கினும் அப்ப எங்கட கல்வி சரியா பின்னுக்கு போய்க்கொண்டிருக்கிறது.

அது மட்டுமில்ல இருபது வீதமான பாடசாலையில கல்வி கற்றிருக்கிற மாணவர்களுக்கு முற்றாக எழுதப் படிக்கத் தெரியாது மலையகத்துல பாத்தீங்கண்ணா அஞ்சு வீதம்தான் அப்படி நாங்க கல்வியில சரியா பின்னடைஞ்சுட்டே போறோம் கல்வி மிக முக்கியமான ஒன்று கல்வியாலதான் நாம வெற்றி பெறலாம்.. எங்கட அடுத்த போராட்டம் கல்விப் போராட்டமாத்தான் மாற வேண்டும் நாங்க அஹிம்சையால பாத்தோம் நாங்கள் ஆயுதத்தால போராடிப் பார்த்தோம்

> உங்களுக்கென்று ஒரு கடமை இருக்கிறது, ஆயுதப் போராட்டதுக்கெல்லாம் நீங்கள் நிறைய உதவிகள் செய்தியள், இன்றைக்கு இப்படி இருக்கிறதுக்கும் நீங்கள்தான் காரணம், நீங்களும் இதாலதான் வெளிநாடுகளுக்கு வந்திருகீங்க, ஆகவே நீங்க ஒவ்வருத்தரும் நிச்சயமாக எங்கள்நாட்டிலுள்ள மக்களுக்கு ஒரு சின்ன உதவி எண்டாலும் செய்ய வேண்டும்,




ஆனா இதுதான் நமக்கு நிரந்தரமான வெற்றியத் தரும் என்பதில் உறுதியா இருக்கிறோம்.

இப்படியான பிரச்சனைகள் இருக்கிறபடியா நாங்கள் 'மெல்ல கற்போர்' என்று சொல்லி பத்தாம் வகுப்பில எழுத தெரியாத பிள்ளைகள எடுத்து முதல்ல எழுத்து படிப்பிக்கிறோம், அவியள வேற வேற குரூப்பா பிரிச்சு, எழுத படிப்பிக்கிறோம் அங்கயிருந்து மிச்சத்த கொண்டு போற மாதிரி, இப்ப இத கிட்டத்தட்ட ஒன்பது மாதமா செய்து கொண்டு வாறோம்.

இப்ப லோன், பிரண்ட்ஸ் வந்து இப்ப எங்களுக்கு மாதத்திற்கு கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாய் அனுப்பியிருக்கினும் அதைவிட மீதி முழுக்க என்னுடைய சொந்த நிதியிலத்தான் நடந்து கொண்டிருக்கிறது உதாரணமாக போனமாசம் எங்களுக்கு கிட்டத்தட்ட பதினொன்றரை லட்சம் முடிஞ்சது அப்ப பத்தரை லட்சம் என் இதுக்குள்ளதான் வந்தது. இத நாங்கள் வட மாகாணம் முழுக்க செய்யிறோம் மன்னார் முதல் தீவகம் வரைக்கும் அபப் இதை பெரிய அளவில் கொண்டு போறதென்றால் எங்களுக்கு உதவிகள் தேவை,

**நீங்கள் போராட்டத்துக்கு போனதை பற்றி சொன்னீர்கள் போராட்டம் வெற்றியடைஞ்சு நமக்கு ஒரு நாடு அமைந்திருந்தால் நீங்கள் சொல்கிற இந்த அத்தனை பிரச்சனைகளுக்கும் தீர்வு கிடைச்சிருக்குமா..?**

நல்ல கேள்வி, இப்ப வட மாகாண சபையை எடுத்த பிறகு நாங்க பாக்கிறோம் அது தோல்வியடைய காரணம் அதில் உள்ள ஆட்கள்தான். ஆனால் சரியான் ஆட்கள் இருந்தால் நல்லபடியாக் கொண்டு போலாம்,

**புலம் பெயர்ந்த பிறகு ஒரு முப்பது வருடங்களுக்கு பிறகு நீங்கள் வடக்கு கிழக்கு அல்லது தமிழர் வாழும் பகுதிகளுக்கு போகும் போது எதை நீங்கள் வெற்றிடமாக காண்கிறீர்கள்..? கல்வியைத் தவிர என்னென்ன வெற்றிடங்கள் என்னென்ன பின் தங்கல்கள் உள்ளன என்று கருதுகிறீர்கள்..?**

உண்மையிலே எங்கட சமுதாயம் வந்து சரியாக பின்னுக்கு போயிருக்கு நான் ஒரு உதாரணம் சொல்றேன் நான் இப்ப பருத்தித் துறையில ஒரு ஹோட்டல் செய்து கொண்டிருக்கிறேன், மரத்து வீடுகள் இந்தோனேசியாவில் இருந்து கொண்டு வந்து பொருத்த வேண்டும் அதை பொருத்த எங்கட பகுதியில இருந்து ஆட்கள கூப்பிட்டால் அதுக்கு எட்டரை இலட்சம் ஆகுது ஆனால் அதே வேலையை கண்டியிலயிருந்து சிங்களவர்களைக் கொண்டு செய்தால் இரண்ட்ரை இலட்சம்தான் ஆகிறது, எங்கட ஆட்களுக்கு ஸ்கில்ஸ் துப்பரவா இல்ல எப்ப பாத்தாலும் எங்களுக்கு ஒரு ஷாட்டேஜ் இருக்கு , ஒரு நல்ல டிரைவர் வேலைக்கு எடுக்கிறது என்றாலும் சரியான கஷ்டம் ஒரு கம்யூட்டர் வேல செய்யிற ஆள ஓபீஸ் வேலைக்கு எடுக்கிறதென்றாலும் கஷ்டம் எங்கட கையில ஒன்றுமே இல்ல ஒரு டிரைனிங்கோ, ஒரு புரோகிராமோ இல்ல சரியா பின்னுக்கு வந்திருக்கோம், இத திரும்ப கொண்டு வர எத்தினை காலம் எடுக்கும்கிறது ஒரு கேள்விக் குறிதான்.

**இப்ப சிவன் பவுண்டேசன் மாதிரி நிறைய அமைப்புகள் புலம் பெயர் தேசங்களிலெல்லாம் இருக்கிறது தானே உதாரணமாக கனடாவில இருக்கிற ஒரு அமைப்பு கல்விக்காக தன்னை முற்படுத்திக் கொண்டால் ஏனைய அமைப்புகள் வேற வேற விடயங்களில் செயல்படுவதுதான் நல்லது என்று சொல்வீர்களா..? எப்படிப் பணியாற்றினாலும் பலன் ஒன்று என்கிறீர்களா?**

இல்ல எல்லாரும் அதுக்குள்ள போகவேணுமென்று தேவையில்ல ஒரு சில ஆட்கள் செய்து கொண்டிருந்தாலே போதுமென நம்புறேன் அவர்களுக்குரிய சப்போர்ட்டை குடுப்பீங்களென்றால் அது போதும் நாங்கள் வேறு வேறு விஷயங்கள் செய்ய வேண்டும் கட்டாயம் தொழில் பயிற்சி செய்ய வேண்டும் மற்றது நீங்க பாத்தீங்கண்ணால் வடக்கில காங்கேசன் துறை சிமெண்ட் பேக்டரியும், பரந்தன் கெமிக்கல் பேக்டரியும் நான் நெனக்கிறேன் ஜிஜி பொன்னம்பலம் இருந்த காலத்துல வந்தது, அதுக்கு பிறகு இன்றைக்கு ஒன்றுமே இல்ல,ரெண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்மெண்ட் பேக்டரி இருக்கு அது சிங்கள ஆட்கள்தான் போட்டிருக்கினும் கிளிநொச்சில அதவிட இண்ணைக்கு ஒன்றுமே இல்ல, அதனாலதான் இந்த வாழ் வெட்டு பிரச்சனையெல்லாம் இருக்கென்று நம்புறேன், பார்திங்கண்ணா நாங்க இங்க பிசியா இருக்கிறோம் பொருளாதாரத்துல எங்கள வளத்துக் கொள்ளுறோம் வெளிநாடுகள்ள ஆனா அங்க அந்த மாதிரியான வசதிகள் ஒண்ணுமில்ல.

**இந்த மாதிரியான வசதிகள் இல்லாமல் போறதுக்கு காரணம் சிங்கள அரசின் அடக்குமுறை அல்லது ஒருவிதமாக தமிழர்களை ஒதுக்குகிற முறை என்று இங்க புலம் பெயர் தேசங்களில் இருக்கிற சில அரசியல் அமைப்புகள் கூறுகிறது, இதுதான் உண்மை நிலையா இல்லை அந்த பிரதேசங்களிலிருக்கும் தமிழர்களுக்கும் தமிழர்களை பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அதைப் பற்றிய அக்கறையே இல்லையா..?**

நிச்சயமா இப்ப வட மாகாண சபைய நாங்கதான் ஆளுகிறோம், அதே நேரத்துல காசையும் நாங்க அனுப்பிறோம் அது எங்கட பிழைணுதான் சொல்லுவேன் சிங்கள ஆட்கள நான் குறை சொல்ல மாட்டேன், நாங்கள் நிச்சயமாக எங்கட இத முன்னுக்கு கொண்டு வரலாம் நான் சும்மா ஒரு உதாரணம் சொல்றேன் கிட்டத்தட்ட 9 மில்லியன் டாலர்சுக்கு இன்வெஸ்டர்ஸ் ரெடியா இருக்கினும் இந்த ஹோட்டலை ஆரம்பிக்கிறதுக்கு அதுக்கு முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருக்கிறது எங்கட ஆட்கள்தான் அப்ப யோசிச்சுப்பாருங்க இங்க வெளிய இருந்து யாரும் காசு கொண்டுபோய் செய்யவேணும் எண்டு சொன்னா அத ஊக்குவிக்கவேணும், அத ஈசியாக்கணும் அத விட்டுட்டு முட்டுக்கட்ட போட்டுக் கொண்டிருப்பது எங்கட ஆட்களுடைய பிரச்சனைதான்.

**புலம் பெயர் தமிழர்களுக்கும் புலத்தில வாழ்கிற தமிழர்களுக்கும் ஒரு நிரந்தரமான உறவுப்பாலம் வர வேண்டுமென்றால்? அடுத்த ஜெனரேஷனில சாத்தியம் எப்படி இருக்கும்?**

நிச்சயமா அங்கத்த பிள்ளைகளோட ஒரு தொடர்பை கொண்டு வந்து,பின் தங்கிய ஆட்களுக்கு நாங்கள் சப்போர்ட் ஒன்றை கொடுக்கவேணும், மற்றது இந்த ஊர்ப் பிள்ளைகள் சமர் லீவுக்கு போகும்போது மேலைத்தேய கற்றல் முறைகளை ஊர்ப் பிள்ளைகளுக்கு வகுப்பெடுப்பது அவர்களிடம் இருக்கும் நல்ல மனசைக் கற்றுக் கொள்வது இரு பகுதியினரும் நட்பைப் பேணுவது போன்றவற்றை நாங்கள் ஊக்குவிப்பதன் மூலம் உறவை நிச்சயமாக வளர்க்கலாம்.

**இப்ப உங்கட மெல்ல கற்போம் மாதிரியான ஸ்கூல்ஸ்ல அந்த மாதிரியான சந்தர்ப்பத்த நீங்க உருவாக்கிக் குடுபீங்களா..?**

அதாவது இங்கயிருந்து ஒரு பிள்ளை அங்க வந்து ஒரு சம்மர் ஹாலிடேல ஆங்கிலம் கற்பிக்கிறேன் என்று முன் வந்தால் நிச்சயம் எங்கட சிவன் பவுண்டேசன் கரம் கொடுக்கும். கனடா சிவன் பவுண்டேசன் நிர்வாகி லோகன் குமுதினியென்று ஒரு பிள்ளையை ரெகமெண்ட் பண்ணி அவ எங்கட இடத்துல வந்து இரண்டு கிழமை படிப்பிச்சிருக்கா பின்னர் அவர் பிள்ளைகளுக்கு கொம்பாஸ் எல்லாம் வாங்கிக் கொடுத்து நல்ல சந்தோஷம். அவ மற்றும் லோகன் சேர்ந்து அவசரமா கனேடிய இந்த கலை விழாவ ஆர்கனேஸ் பண்ணினோம். அவ அங்க வந்த படியால்தான் அத சொல்லிக்கொள்ளக் கூடியதாயிருக்கு , அதனால் அப்படியான ஆட்கள் நாங்க வரவேற்போம் , மற்றை அவைக்கும் ஒரு விருப்பம் இருக்கு, கனடாவில இருந்து வந்து தங்கள படிப்பிக்கிறோம் என்று ஆர்வமா இருக்கினும்.

**இறுதியாக ஒரு தமிழனாய் தமிழனிடம் எதிர்பார்ப்பது என்ன..?**

உங்களுக்கென்று ஒரு கடமை இருக்கிறது, ஆயுதப் போராட்டதுக்கெல்லாம் நீங்கள் நிறைய உதவிகள் செய்தியள், இன்றைக்கு இப்படி இருக்கிறதுக்கும் நீங்கள்தான் காரணம், நீங்களும் இதாலதான் வெளிநாடுகளுக்கு வந்திருகீங்க, ஆகவே நீங்க ஒவ்வருத்தரும் நிச்சயமாக எங்கள்நாட்டிலுள்ள மக்களுக்கு ஒரு சின்ன உதவி எண்டாலும் செய்ய வேண்டும், அப்படி இல்லேண்ணா நீங்களா வந்து உங்க சரீர உழைப்ப எண்டாலும் குடுங்கோ, மற்றபடி இன்னும்மொன்றையும் சொல்றேன் இந்த கற்பித்தல் பக்கத்தில நான் செயல்படுறதால எக்கச்சக்கமான சவால்களை எதிர் கொள்கிறேன்.

சங்கானையில் 33 பாடசாலைகளுக்கு வேர்ல்ட் விஷன் வந்து படிப்பிச்சுக் கொண்டிருந்தவைய சரியான பின் தங்கிய இடங்கள் இந்தப் பகுதிகள், வேர்ல்ட் விஷன் வெளியேறும்போது எங்களுடைய மெல்ல கற்போர் பாடத்திட்டத்தை தொடங்கச் சொல்லி 33 பள்ளிக் கூடங்களிலும் ஆசிரியர்களுக்கு நாங்கள் சம்பளம் கொடுத்து செய்து கொண்டிருந்தோம், ஆனா எதிர்கட்சித் தலைவர் தவராசா வந்து மாகாணச் செயலாளருக்குச் சொல்லியிருக்கிறார்.'சிவன் பவுண்டேஷன எப்படி பள்ளிக்குடத்துக்குள்ள விட முடியுமென்று..?' உடனே நிறுத்தி விட்டார்கள் நான் உடனே கல்வி அமைச்சர் சர்வேஸ்வரனோடு கதச்சேன் ஆனா அவரும் சொன்னார் தான் ஒரு மீட்டிங் ஒன்றை கூட்டிப் பேசிவிட்டு கதைக்கிறேன் என்று செப்டம்பர் 9 ஆம் தேசி வரச்சொன்னார்.


ஆனா எனக்குத் தெரியும் 9ஆம் தேதி என்னை சந்திக்க மாட்டார் என்று உறுதியாய் தெரியும், நான் அன்று காலையில போன் அடிச்சேன் அப்ப அவர் சொன்னார் 'நான் இன்னும் அந்த குழுவ கூட்டல' தான் கூட்டிபோட்டு சொறேனென்று, இப்ப அடுத்தது வேலையாய் நான் முதலமைச்சரப் போய் சந்திக்கப் போகிறேன். அவர் என்னச் சொல்லப்போகிறார் என்று பார்ப்போம். இந்த தமிழ் அரசியல் வாதிகள் தாங்கள் செய்ய வேண்டியத செய்றதில மத்தவங்களையும் செய்ய விடுறதில்ல அப்ப எப்படி தமிழ் மக்களாகிய நாங்கள் முன்னுக்கு வரப்போறோம்.. இது ஒரு பெரிய பிரச்சனையான் விஷயம் ஒன்று.

**பேரினவாதத்திற்கு எதிராக போராடிய நீங்கள் இப்போது தமிழ் அரசியல் வாதிகளுக்கு எதிராகவும் போராட வேண்டியிருக்கிறது என்கிறீர்களா?.**

கட்டாயம் நிச்சயமாக இவை செய்ய வேண்டிய வேலையையும் செய்யல மற்றவையளையும் செய்ய விடாததுதான் நாங்கள் இன்றைக்கு கல்வியில வீழ்ந்ததுக்கு காரணம். இப்ப இந்த மாகாண சபையில பாருங்க நடந்த ஊழல்களுக்கு ஒரு விசாரணைகூட நடக்கலையே? ஒரு குற்றம் செய்தவர் தண்டிக்கப்படாட்டி குற்றம் தொடர்ந்து கொண்டேயிருக்கும் . இப்ப அடுத்து வருபவரும் தானும் குற்றத்தைச் செய்து விட்டு தப்பலாம் என்று நினைப்பார்.

உலகளவிய ரீதியில் தமிழ் மக்கள் அனைவரும் இணைந்து இதற்காக வேலை செய்யாவிட்டால் இதை கட்டுப்படுத்துவது கஷ்டம்.

சந்தித்தவர்: **க.சிவமணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வ**றட்சியால் பாதிக்கப்பட்டுக் கடன்காரர்களாக இருக்கும் விவசாயிகள் தங்களது கடன்களைத் தள்ளுபடி செய்யக் கோரி போராடிக்கொண்டிருக்கிறார்கள்- எரிவாயுத் திட்டங்களுக்காகத் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்று அஞ்சி, ஆர்ப்பாட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்ஞ் நகரங்களில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களிடமிருந்து விவசாயிகளுக்கு ஆதரவாக ஏதேனும் குரல்கள் ஒலிக்கிறதா என்றால் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக இல்லை.

அல்லது ஆட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுக்கிற வலிமை அந்தக் குரல்களுக்கு இல்லை. உழைப்புச் சுரண்டலின் வெவ்வேறு வடிவங்களால் வஞ்சிக்கப்படுபவர்களுக்கு இடையில் பரஸ்பர ஆதரவோ உரையாடலோ இல்லாமல் போனதன் விளைவுகளைத் தொடர்ந்து அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். ஆக, தொழிலாளர்களிடமும் விவசாயிகளிடம் ஒருங்கிணைப்பை ஏற்படுத்த முடியுமா?

பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேச சோஷலிஸ்ட் புரட்சி ரஷ்யாவில் தொடங்கியதன் 100—வது ஆண்டு இது. ஆதிப் பொதுவுடைமைச் சமூகம் தொடங்கி நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் என்று வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களைக் கடந்துவந்த மனிதகுல வரலாற்றில் ரஷ்யாவில்தான் சமதர்மத்துக்கான புதுயுகம் பிறந்தது. விஞ்ஞான சோஷலிஸத்தின் மூலவர்களான கார்ல் மார்க்ஸும் ஃப்ரெடரிக் எங்கெல்ஸும் முதலாளித்துவப் பொருளாதார

> 'முதலாளித்துவத்தின் வீழ்ச்சி தவிர்க்கவியலாதது மனிதரை மனிதர் இனிமேலும் சுரண்ட முடியாத அமைப்பாகிய கம்யூனிஸத்துக்கு சமூகம் மாற்றமுறும்.'

நோக்கிய முன்னகர்வு இருக்கும் என்று கணித்திருந்தார்கள்.

ஆனால், அதற்கு மாறாக நிலவுடைமைச் சமூக அமைப்பிலிருந்து முதலாளித்துவத்தை நோக்கி ரஷ்யா நகர்வதற்கு முன்பே அங்கு சோஷலிஸக் கனவு முகிழ்த்தது. அப்போதைய உலகப் போர்ச் சூழலும் ரஷ்யாவில் புரட்சியை முன்னெடுத்த லெனின் தலைமையிலான புரட்சிகரப் பொதுவுடைமைக் குழுவினர் அச்சூழலைச் சாதகமாக்கிக்கொண்டு வகுத்த வியூகங்களும் முக்கியமானவை. எனினும், ரஷ்யப் புரட்சி சோவியத் ஒன்றியமாக உருவெடுத்ததற்கும் உலகத்தையே சோஷலிஸப் பாதையை நோக்கி அழைத்துச் சென்றதற்கும் அடிப்படை, தொழிலாளர்களுக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் இடையில் இருந்த ஒருங்கிணைவுதான்.

### என்ன செய்தார் லெனின்?

ரஷ்யப் புரட்சியைக் காட்டிலும் அந்தப் புரட்சி வெற்றி பெற்றதற்குப் பிறகான ஆண்டுகள் மிகமுக்கியமானவை. ரஷ்யா விவசாய உற்பத்தி முறையை அடிப்படையாகக் கொண்டிருந்த நாடு. ஆனால், நிலவுடைமையை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவருவது அவ்வளவு எளிதானதல்ல. விவசாயிகளிடத்தில் ஒருங்கிணைவு ஏற்படுத்துவதும் எளிதானதல்ல. நகரத்தில் ஒரு தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்களிடையே இயல்பாகவே ஒருங்கிணைவு நடக்கிறது. தாம் சுரண்டப்படுவதை எதிர்த்துக் கேள்வியெழுப்புவதற்கான சக்தி அந்த ஒருங்கிணைப்பிலிருந்தே கிடைக்கிறது.

கிராமப்புறங்களில் நிலவுடைமையாளர்களிடம் சிக்கிக் கிடக்கும் விவசாயக் கூலிகளிடம் அது சாத்தியமில்லை. அதனாலேயே விஞ்ஞான சோஷலிஸத்தின் மூலவர்கள் தொழில் உற்பத்தி சமூகங்களிலேயே சோஷலிஸத்துக்கான வாய்ப்பு இருக்கிறது என்று எதிர்பார்த்தார்கள்.

ரஷ்யப் புரட்சியை முன்னின்று நடத்திய லெனின் இதை மிகச் சரியாக அறிந்துவைத்திருந்தார். எனவேதான், ரஷ்யப் புரட்சியின் போதாமைகளை இட்டுநிரப்ப அவரால் முடிந்தது. நகர்ப்புறத் தொழிலாளிகளையும் விவசாயத் தொழிலாளர்களையும் கட்சியின் கட்டுப்பாட்டில் வழிநடத்தினார்.

நவம்பர் புரட்சியின் முதலாண்டு விழாவையொட்டி அவர் பங்கேற்றுப் பேசிய பல்வேறு நிகழ்வுகளில் மீண்டும் மீண்டும் உழைப்பாளர்களின் ஒருங்கிணைவைப் பற்றியே அவர் பேசியிருக்கிறார். அந்த உரைகளில் யாதொன்றிலும் அவர் புரட்சியின் வெற்றியைப் பற்றி பிரஸ்தாபிக்கவில்லை. ஜார் மன்னரின் கொடுங்கோலாட்சிக்குப் பரணி பாடி மகிழவில்லை. மாறாக, ரஷ்யா எதிர்கொண்டிருக்கும் சர்வதேச அளவிலான சவால்களைப் பற்றியும் அவற்றை எப்படி எதிர்கொள்வது என்பதைப் பற்றியுமே மக்களிடம் எடுத்துரைத்திருக்கிறார்.

"தொழிலாளி வர்க்கம் பொருளாதாரத்தை எவ்வாறு நிர்வகித்து நடத்துவது என்பதை அறிந்துகொண்ட பின்பே, உழைக்கும் மக்களின் அதிகாரம் உறுதியாக நிலைநாட்டப்படும்போதே, சோஷலிஸம் உருப்பெற்றுக் கெட்டிப்பட முடியும். இவை இல்லையேல், சோஷலிஸம் வெறும் கற்பனையே" என்று அப்போது ஒரு கூட்டத்தில் பேசியிருக்கிறார் லெனின். பொருளாதாரத்தை நிர்வகித்து நடத்துவதில் எதிர்கொள்ளும் சவால்கள்தான் சோஷலிஸப் புரட்சிக்குத் தடைக்கல்லாக அமையக்கூடும் என்பதையும்கூட அவர் அனுமானித்திருந்தார் என்று புரிந்துகொள்ள முடியும். சோஷலிஸப் பாதைகளில் சந்தித்திருக்கும் இடறல்கள் எல்லாமும் பொருளாதாரத்தை நிர்வகிப்பதில் ஏற்பட்ட தடுமாற்றங்கள்தான் என்று எளிய விளக்கத்தையும்கூட நாம் உருவாக்கிக்கொள்ள முடியும்.

ஒரு கேள்வி. ஒரு நம்பிக்கை.

நவம்பர் புரட்சியையொட்டி லெனின் ஆற்றிய உரையொன்றில் இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்: "ஏகாதிபத்தியக் கழுகுகள் இன்னும் நம்மைவிட பலமானவை என்பதை நாம் அறிவோம். அவை இன்னும் நம் மீதும் நமது நாட்டின் மீதும் ஒரேயடியான சேதத்தை, கொடுமைகளை, அட்டூழியங்களை விளைவிக்க முடியும். ஆனால், உலகப் புரட்சியை அவற்றால் தோற்கடிக்க முடியாது" ரஷ்யாவில் நடந்த சோஷலிஸப் புரட்சி தோல்வியை நோக்கித் தள்ளப்படலாம் என்பதையும் அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆனால், அது முடிவல்ல, தாம் எதிர்நோக்கியிருப்பது உலகம் தழுவிய ஓர் புரட்சியை என்பதை அவர் அடிக்கோடிட்டுச் சென்றிருக்கிறார்.

ரஷ்யாவில் சோஷலிஸம் தோற்றுவிட்டதுஎன்றுஎக்காளமிடுபவர்களுக்குப் பதிலாகவும் இந்த வார்த்தைகளைக் கொள்ள முடியும். சோஷலிஸ விதை உலகெங்கும் தூவப்பட்டிருக்கிறது. இந்திய அரசியலமைப்பின் முகப்பிலும்கூட அந்த வார்த்தை இடம்பிடித்திருக்கிறது. வார்த்தைக்கான வரையறைகளை நாம் மாற்றி மாற்றிச் சொல்லிக்கொண்டிருக்கலாம். ஆனால், அந்த வார்த்தைக்கான வரலாறு அதன் உண்மையான அர்த்தத்தை நினைவுபடுத்திக்கொண்டே இருக்கும்.

புரட்சி எதற்கு?

தற்போதைய ஜனநாயக ஆட்சி முறையிலேயே சோஷலிஸம் சாத்தியமில்லையா என்ற கேள்விகளும் கூட எழலாம். லெனின் வார்த்தைகளில் அதற்குப் பதில் இருக்கிறது. "மிக மிக ஜனநாயகமான, மிக மிக சுதந்திரமான குடியரசிலும்கூட மூலதனம் ஆதிக்கம் செலுத்துகிறவரை, நிலம் தனியார் சொத்தாய் இருக்கிறவரை, அரசாங்கமானது எப்போதும் மிகச் சிறிய சிறுபான்மையோரின் கையிலேதான் இருக்கும்'.

ஒரு பொன்னுலகக் கனவுக்காக எத்தனை ஆயிரம் உயிர்கள் பலிகொடுக்கப்பட்டன? லட்சியவாதம், தியாகம் என்ற பெயர்களால் அவற்றை நியாயப்படுத்தலாமா என்று குமுறியெழும் வினாக்களின் அலைகளும் தொடர்கின்றன. சகமனிதர்களின் உழைப்பை ஈவிரக்கமின்றிச் சுரண்டித் தின்னும் முதலாளித்துவத்தின் கொடூர முகத்தைக் கண்டு மனம் வருந்தாதவர்களுக்கு அந்தக் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காகத் தங்கள் இன்னுயிரை அளித்தவர்களின் தியாகத்தை அலட்சியம் செய்வது அறமல்ல என்று எப்படி உணர்த்துவது?

எழுச்சிகளாலும் வீழ்ச்சிகளாலும் ஆனதுதான் வரலாறு. ஆனால், எழுச்சியையும் வீழ்ச்சியையும் பற்றிய வரலாறுகள் அனைத்தும் நிலப்பிரபுத்துவக் காலக்கட்டத்தின் வரலாறு. வரலாற்றுக் கண்ணோட்டத்தையே இன்று மாற்றியாகிவிட்டது. உழைக்கும் மக்களின் வரலாறு சமநிலைக்கானது. அங்கு வீழ்வதற்கும் எதுவுமில்லை. அதைப் போல அடைவதற்கும்கூட எதுவுமில்லை. சோஷலிஸத்தின் இலக்கு, உணர்ச்சிகரமான நாடகக் காட்சிகள் அல்ல, இயற்கையுடன் இயைந்த அனைவருக்கும் அனைத்திலும் சம உரிமை உள்ள இயல்பான சீரிய வாழ்க்கை.

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியிலிருந்து கற்றுக்கொள்ள எவ்வளவோ இருக்கிறது. பொருளாதாரத்தை நிர்வகிப்பதில், பல்வேறு தேசிய இனங்களை ஒருங்கிணைத்துச் செல்வதில், அரசியலமைப்பு அதிகாரங்களைக் கையாள்வதில் எவ்வளவோ இன்னும் கற்றுத்தேற வேண்டியிருக்கிறது. மார்க்ஸிடமிருந்தும் எங்கெல்ஸிடமிருந்தும் தத்துவங்களைப் பெறலாம். ஆனால், லெனினிடமிருந்து அரசியல் வியூகங்களை இன்னும் பொறுமையாகவும் உளப்பூர்வமாகவும் கற்றுத்தேற வேண்டியிருக்கிறது.

முதலாளித்துவத்தின் மோசமான முன்னுதாரணங்கள் அரசியல் துறையில் பரவிக்கிடக்கின்றன. மாற்று அரசியலமைப்பை முன்னெடுப்பவர்கள் தவறாக வழிநடத்தப்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு என்பதையும் வரலாறு மெய்ப்பித்துவிட்டது, ஆனாலும் லெனின் நமக்கு மீண்டும் இப்படி நம்பிக்கை தருகிறார்:

'முதலாளித்துவத்தின் வீழ்ச்சி தவிர்க்கவியலாதது — மனிதரை மனிதர் இனிமேலும் சுரண்ட முடியாத அமைப்பாகிய கம்யூனிஸத்துக்கு சமூகம் மாற்றமுறும்.'

**செல்வ புவியரசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அன்னபூரணி அம்மாளின் அமெரிக்கப் பயணம்-1938

**வ**ல்வெட்டித்துறையில் உள்ள மேற்குத்தெரு வாடியில் வைத்து, 1930ஆம் ஆண்டில், சுந்தரம் மேத்திரியாரினால் உள்ளூர் வேப்ப மரத்தில் தயாரிக்கப்பட்ட "அன்னபூரணி அம்மாள்" என்ற பெயரிலான இரட்டைப்பாய்மரக் கப்பல் 89 அடி நீளமும், 19 அடி அகலமும் கொண்ட ஒரு பாரிய கப்பலாக அந்த நாட்களில் விளங்கியது.

அன்னபூரணி என்பது இமயமலையில் அமைந்திருக்கும் மலைச்சிகரங்களில் ஒன்றாகும். இன்றைய நேபாளத்தின் எல்லைக்குட்பட்ட இதன்உயரம் 26504 அடிகளாகும். அத்துடன் அள்ளஅள்ளக் குறையாத அமுதசுரபி கொண்ட தெய்வமாக இந்துக்களால் ஆராதிக்கப்படும் பெண் தெய்வத்தின் பெயரும் அன்னபூரணியாகும். இப்பெயரே அன்னபூரணிஅம்மாளின் சுட்டுப் பெயராக பல இடங்களிலும் பயன்படுத்தப்படுகின்றது.

1936 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வல்வெட்டித்துறைக்கு வருகை தந்திருந்த அமெரிக்கரான பிரபலகடலோடியான அமெரிக்கரான றொபின்சன் "Florence C. Robinson" அன்னபூரணியின்; அழகால் கவரப்பட்டவராக அதனை வாங்கிக் கொண்டு அமெரிக்காவுக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்று விரும்பினார். அதனைக் கொள்வனவு செய்ததும், அன்னபூரணி அம்மாள் என்ற பெயரில் உள்ள அந்தக் கப்பலை

தெற்காசிய நாடொன்றில் உள்ள சின்னஞ்சிறிய தீவான இலங்கையில் உள்ள வல்வெட்டித்துறையில் கட்டப்பட்டு காற்றின் துணையுடன் இயங்கும் கப்பலொன்று, இந்து சமுத்திரத்தைக் கடந்து ஐரோப்பாவின் ஊடாக மத்திய தரைக் கடலையும் கடந்து, அத்திலாந்திக் சமுத்திரத்தின் ஊடாக, அமெரிக்காவின் குளோசெஸ்ரர் துறைமுகம் வரை பயணம் செய்தது, உலக வரலாற்றில் இதுதான் முதல் தடவை. இச்சாதனை நிறைந்த கடற்பயணத்தில், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தண்டையல் கனகரத்தினம் தம்பிப்பிள்ளை (48வயது) அவர்களின் தலைமையில், திருபூரணவேலுப்பிள்ளை சுப்பிரமணியம் (29 வயது), திரு.தாமோதரம்பிளளை சபாரத்தினம் (28வயது) திரு.சின்னத்தம்பி சிதம்பரப்பிள்ளை, (28 வயது)) திரு.ஐயாத்துரை இரத்தினசாமி(24 வயது) ஆகிய ஐந்து கடலோடிககளும் பயணத்தின் இறுதி இலக்கு வரை பங்கேற்றிருந்தனர். அமெரிக்காவின் தலைநகரான வாசிங்டன் நகருக்கு அண்மையில் உள்ள பால்ரிமோர் என்ற துறைமுகத்தில் தரித்து நின்றபொழுது எடுக்கப்பட்ட படத்தை அது தொடர்பான கட்டுரையுடன், பால்ரிமோரில் இருந்து வெளிவரும், "Baltimore Sun" என்ற செய்தித்தாள் பிரசுரித்திருந்தது. அன்னபூரணி அம்மாள், கப்பலை அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லும் பொழுது கப்டன்





"Florence.C.Robinson" என்ற தனது மனைவியின் பெயருக்கு மாற்றியபின்னரே அமெரிக்காவுக்குக் கொண்டு சென்றார். வல்வெட்டித்துறை மாலுமிகளின் உதவியுடன் கொந்தளிக்கும் இராட்சச அலைகளையும் கடந்து சுயஸ் கால்வாயினூடாக அமெரிக்காவின் போஸ்ரன் துறைமுகத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட சாதனை இன்றும் உலகளாவிய ரீதியில் பேசப்படுகின்றது.

சூயெஸ் கால்வாயினூடாக மத்தியதரைக் கடலில் பயணம் செய்த போது, ஏற்பட்ட புயலில் சிக்கிய கப்பல் 250 கடல்மைலகள் பின்புறமாக பெய்ரூத் வரை அடித்துச் செல்லப்பட்டது. இவ்வாறு பல்லாயிரக்கணக்கான மைல்களையும்› பல கடல்களையும் கடந்து சென்ற இத்துணிகர கடற்பயணம் 1938 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் முதலாம் திகதி அமெரிக்காவின் மசாசுசெட்ஸ் (Massachusetts) மாநிலத்தில் உள்ள குளோசெஸ்ரர் (Gloucester) துறைமுகத்தில் நிறைவடைந்தது.

மக்குயிஸ் என்பவரின் தலைமையில், வல்வெட்டித்துறை மாலுமிகளின் உதவியுடன் பயணம் செய்து குளோசெஸ்டர் துறை முகத்தைச் சென்றடைந்தது. அன்று குளோசெஸ்டர நகரில் இருந்து வெளியிடப்பட்ட ஊடகங்கள் பிரசுரித்த கருத்துக்கள் மிகச் சிறந்த சான்றுகளாகவும், ஆதாரங்களாகவும் விளங்கின.

அன்னபூரணி அம்மாளின் இந்த திகில் நிறைந்த பயணம் பற்றிய இலக்கியங்கள் நூல்களாகவும்› பத்திரிகைகள்› சஞ்சிகைகளில் கட்டுரைகளாகவும் வெளிவந்துள்ளமை அதன் சிறப்பைப் பல மடங்கு உயர்த்தியுள்ளது. இச்சாதனைப் பயணம்பற்றிய விபரங்கள் 02 ஓகஸ்ட் 1938 வெளிவந்த The Boston Globe பத்திரிகையில் Voyage Ended By Brigantine . Barrows என்பவரால் விவரிக்கப் பட்டிருந்தது. மற்றும் அன்றையநாளில் வெளிவந்த மற்றாரு தினசரியான 02.08.1938 அன்று வெளியிடப்பட்ட Gloucester Time பத்திரிகையில் Ceylon Brige Arrives After Long Voyage எனவும் மேற்படி அன்னபூரணி யின் நீண்ட கடற்பயணம் அதன் முன்பக்க செய்தியாக வெளிவந்த ருந்தது. அதில் குறிப்பிடப்பட்ட பின்வரும் செய்திக் குறிப்பினூடாக தமிழர்களின் கடல் ஆளுமைகளை பற்றி மேறகத்தைய நாட்டவர்க ளின் உள்ளக் கிடக்கையையும் கருத்தையும் அறிய முடிகின்றது.

"வல்வெட்டித்துறையில் கட்டப்பட்ட ஒன்பது பாய்களையும் விரித்தபடி, கம்பீரமாக ஆடிஆடிப் பயணம் செய்து கொண்டிருந்த கப்பல் ஒன்று, அத்திலாந்திக் சமுத்திரத்தையும் கடந்து அமெரிக்கக் கிழக்குக் கரையை அடைந்ததோர் நீண்ட கடல் பயணம் பற்றிய உண்மைக் கதை. இத்தகைய கப்பல்கள், வல்வெட்டித்துறையிலும் அதனை அடுத்துள்ள பருத்தித் துறையிலும் கட்டப்பட்டு வல்வெட்டித்துறைக் கடலோடிகளால் செலுத்தப்பட்டன. இவை தமிழ் நாட்டில் பணம் படைத்த செட்டிமாருக்காகவும், வல்வெட்டித்துறையை வதிவடமாகக் கொண்ட செட்டிமாருக்காகவும், வல்வெட்டித்துறை வணிகர்களுக்காகவும் இலங்கை வடக்கில் உள்ள வல்வெட்டித்துறை பருத்தித்துறை மேஸ்திரிமார்களால் கட்டப்பட்டவை."

அன்னபூரணி அம்மாளுடன் அமெரிக்கா சென்றடைந்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த மாலுமிகள் அங்கிருந்து திரும்பும்போது தம்முடன் எடுத்துவந்த இருபத்திரிகைக் குறிப்புகளே மேற்கண்டவையாகும்.

அமெரிக்கா சென்ற மூன்றாவது மாதத்தில் அன்னபூரணி 22 நவம்பர் 1938 இல் தென்பசிபிக் (South Pacific) சமுத்திரத்தில் உள்ள Tahiti தீவைநோக்கி ஒருதுணிகரபயணத்தைமேற்கொண்டது. இம்முறையும் மீண்டும் மூன்றுநாட்கள் கடும் புயலில் சிக்கிக்கொண்டது. அத்திலாந்திக்கடலில் 100மைல்வேகத்தில் வீசியகாற்றையும் 40அடி உயரத்திற்கு எழுந்தஅலைகளையும் அன்னபூரணி அனாசயமாக வெற்றிகொண்டவாறு தனது பயணத்தை தொடர்ந்தது. வல்வெட்டித்துறையின் உறுதியான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேப்பமர கட்டுமானமும் அதன் செய்வினைத் தொழில்நுட்பத்திறனும் இவ்வெற்றிக்கு காரணங்களாகின. இறுதியில் 8196 மைல்களைக் கடந்து 15 பெப்ரவரி 1939 இல் பசிபிக் சமுத்திரத்தில் உள்ள Tahiti தீவை அடைந்து தனது இரண்டாவது உலகசாதனைப் பயணத்தையும் வெற்றி கரமாக முடித்துக்கொண்டது.

அன்னபூரணியின் Tahiti பயணம்பற்றி Tahiti Bound மற்றும் Wandere எனும் இருநூல்கள் வெளிவந்துள்ளன. Florence C. Robinson இன் இப்பயணத்தின்போது அமெரிக்க தலைநகரான Washington நகருக்கு அண்மையில் உள்ள Baltimore துறைமுகத்திற்கு அண்மையில் நிறுத்தப்பட்டிருந்த கப்பலின் படத்தின் மூலம், தனது ஒன்பது பாய்களையும் முழுமையாக விரித்தபடி ஓடிவரும் இரட்டைப்பாய்மரக்கப்பலான அன்னபூரணியின் கண்ணைக்கவரும் கம்பீரத்தோற்றத்தை இதில் உள்ள புகைப்படத்தில் பார்க்கலாம்.


பொங்கியெழும் கடலின் இராட்சத அலைகளின் மத்தியில் துணிகரப் பயணத்தின் மூலம், சுயெஸ் கால்வாயினூடாக அமெரிக்காவின் போஸ்ரன் துறைமுகத்திற்கு வல்வை மாலுமிகளால் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்ட அந்த வரலாற்றுச் சாதனை இன்றும் உலக மக்களால் பெருமையாகப் பேசப்படுகின்றது.

இவ்வளவு சாதனைகளையும் செய்து இந்துசமுத்திரம் அத்திலாந்திக்சமுத்திரம் பசுபிக்சமுத்திரம் என உலகத்தை சுற்றிய அன்னபூரணியின் பயணம் 1957 ஆம் ஆண்டு Tahiti யில் மூழ்கி தனது வாழ்வை முடித்துக் கொண்டது. ஆயினும் › சாகசம் மிக்க கடற்பயணத்தை மேற்கொண்ட அன்னபூரணி என்ற அந்த இரட்டைப் பாய்க்கப்பல் வல்வெட்டித்துறையின் பெருமை மிக்க ஒரு முதுசொமாகும்.

அமெரிக்க மற்றும் ஸ்ரீலங்காப் படையினர் இணைந்து நடத்திய 'ஒப்ரேசன் பசுபிக் ஏஞ்சல்' நிகழ்விற்காக(15.08.2016) அமெரிக்க தூதுவரான அதுல்ஹேசப் (Atul Keshap) யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்திருந்தார். அங்கு அவர் தனதுரையில் 1813இல் அமெரிக்க மிசனரியினர் ஏற்படுத்திய இலங்கைக்கான தொடர்பினை தாம் உருவாக்கிய அன்னபூரணிஅம்மாள் என்ற பாய்க்கப்பலில் அமெரிக்காவின் குளோஸ்ரர்துறை முகத்திற்கு வந்த வல்வெட்டித்துறை கடலோடிகள் மீளவும் தொடர்ந்துள்ளனர் என்பதைச் சுட்டிக் காட்டினார். அத்துடன் ஆச்சரியமிக்க அன்னபூரணியின் இக்கடல்வழிப் பயணம் சரித்திரபூர்வமானது என்பதையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

இலங்கைமக்கள் அனைவரும் குறிப்பாக ஈழத்தமிழர்கள்கூட மறந்துவிட்ட ஒருநிகழ்வினை எழுபத்தைந்து வருடங்களின்பின் யாழ்ப்பாண மண்ணில் மீண்டும் ஓர் அமெரிக்கர் நினைவு கூர்ந்துள்ளார். இதுபோலவே 1987 மே மாதத்தில்; வடமராட்சியை கைப்பற்றுவதற்காக அப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத்முதலியின் பணிப்பின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சிறிலங்கா படையினரின் 'லிபரேசன் ஒப்பரேசன்' எனும் பெயரில் பெரும் தாக்குதலை தொடுத்திருந்தனர். இதனைத் தொடர்ந்து உலகவங்கியைச் சேர்ந்த சில அதிகாரிகள் வல்வெட்டித்துறைக்கு விஜயம்செய்திருந்தனர். அவர்களில் ஒருவர் குறிப்பிட்ட அன்னபூரணி அம்மாளின் பயணம்பற்றி அன்று உதவி அரசாங்க அதிபராக இருந்த திரு.வை.வேலும்மயிலும் அவர்களிடம்; தெளிவாக உரையாடியிருந்தமையும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

75 ஆண்டுகளுக்கு முன்னர் தொழி;ல் நுட்பத்திறனும், அறிவியல் நுட்பங்களும் விருத்தியடைந்திராத காலத்தில் உள்ளூர் வேப்ப மரங்களைக் கொண்டு பாயும் நீரையும் கிழித்துச் செல்லக்கூடிய பல கப்பல்களைத் தயாரித்த தமிழர்கள் அன்று அமெரிக்கா மட்டுமின்றி பர்மா, காக்கிநாடா, தூத்துக்குடி போன்ற பல துறைமுகங்களுக்குச் சென்று வர்த்தகத் தொடர்பை ஏற்படுத்தித் திரவியம் தேடி நமது நாட்டுக்கே பெருமை சேர்த்தவர்கள்..ஆனால் காலத்திற்குக் காலம் தமிழ் அரசியல் தலைவர்களின் துணையுடன் பதவி ஏற்றுவரும் இலங்கை அரசுகளின் இனவாதப் போக்குகளின் காரணத்தால் தமிழ் மக்களின் கப்பல் கட்டும் தொழிலுக்கே சாவுமணி அடிக்கப்பட்டது.



VOYAGE TO AMERICA OF VALVAI SCHOONER

ஆனால் இன்றும் கூடத் தமிழர்களின் கண்களைத் தமிழர்களின் கைகளினாலேயே குத்திக் காயப்படுத்த வைக்கின்ற செயலில் சிங்கள பேரினவாத அரசும், அதற்குத் துணைபோகின்ற இனவாதிகளும் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது நாட்டில் சாந்தி, சமாதானம் ஏற்படுவதற்கு, இலங்கையில் ஒற்றுமையாகவே வாழ ஆசைப்படுகின்ற சிங்கள,தமிழ், முஸ்லிம் மக்கள் இன்னும் நீண்ட தூரம் பயணிக்கவேண்டியுள்ளது.......!

விலைபோகாத நல்லதொரு தலைமைத்துவத்தைக் கொண்டு நிமிர்ந்து நின்ற எமது மக்களின் தலைவிதியென்றால் என்ன செய்வது...?

ஆதாரம்: **வல்வையின் முதுசொம்**

**வல்வை.ந.அனந்தராஜ்**


BEST DEAL FROM ROGERS

Student Offer is Back

High Speed Unlimited Internet

Free advance Wifi Modem

$ 49.99 Only

Home Phone, Internet Digital Basic TV $ 99.95

Tamil Channel Starting from $ 8.00

Internet Starting from $ 49.95

Home Phone $ 8.99 only

தமிழ் TV அலைவரிசைகளின் புதிய பொதி

VIJAY JAYA TV KTV $30 மாதம் ஒன்றுக்கு

தமிழில் தொடர்புகளிற்கு:

ROGERS

SANJAY : 416.315.2917


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியூயோர்க் டைம்ஸ் மற்றும் வோல் ஸ்ட்ரீட் நாளிதழ்கள் யூ டியூப் இன் தணிக்கைக்கு கோரிக்கை விடுக்கின்றன

நியூயோர்க் டைம்ஸ் மற்றும் வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் நாளிதழ்களின் முதல் பக்கங்களில் செவ்வாயன்று பிரசுரமான இரண்டு கட்டுரைகளில் அந்நாளிதழ்கள், யூடியூப் இன் சேவை ரஷ்ய பிரச்சாரத்தை பரப்புவதற்கு உதவுவதாக குற்றம்சாட்டி அதன் இணையவழி சேவையை தணிக்கை செய்ய நியாயப்படுத்துதல்களை முன்வைக்கின்றன.

கூகுளுக்கு சொந்தமான யூடியூபின் மூலம் சென்றடையும், ரஷ்ய அரசாங்க நிதியளிப்பினைக் கொண்ட சர்வதேச தொலைக்காட்சி வலை அமைப்பான RT இன் கணிசமான பரவலை இந்தக் கட்டுரைகள் குறிப்பிடுகின்றன. RTவீடியோக்கள், CNN ஐ போல அதிக பார்வையாளர்களையும், மேலும் ஃபாக்ஸ் நியூஸைக் காட்டிலும் கூடுதலாக கணிசமான அளவு பார்வையாளர்களையும் கொண்டுள்ளன.

ஜனவரி 6ம் தேதிய தேசிய உளவுத்துறையின் அமெரிக்க இயக்குனரின் அறிக்கையை மேற்கோளிட்டு, "கிரெம்ளினின் 'முக்கிய சர்வதேச பிரச்சார நம்பமுடியாத செய்தி ஆதாரங்கள், அரசாங்க ஆதரவுடைய பிரச்சார மையங்களில் இருந்து சதித் திட்ட குழுக்களையும், பின்னர் தொடர்ந்து தீவிரவாதக் குழுக்களையும் எவ்வாறு சென்றடைகின்றது என்பதை சமூக ஊடக நிறுவனங்களின் வெளிப்படையான அணுகுமுறை எப்படி வலுப்படுத்த முடியுமெனக் காட்டுகிறது. இந்த "வெளிப்படையான" அணுகுமுறை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்பதே இதன் உட்குறிப்பாகும்.

யூடியூபில் RT இன் பிரபலத்தன்மையை குற்றம்சாட்டி, இந்த சேனல், அரசியல் சாராத காட்சிகளை அதன் "பிரச்சாரத்துடன்" கலப்பதன் மூலம் சேவை நெறிமுறைகளில் "விளையாடுகிறது" என இந்த கட்டுரைகள் கற்பிதம் செய்கின்றன. அதே போல, RT ஐ தண்டிப்பதற்கும் அமெரிக்க ஆளும்வர்க்கத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத ஏனைய செய்தி வெளியீட்டு நிறுவனங்களைத் தண்டிப்பதற்கும் யூடியூபின் நெறிமுறைகளை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்ற வாதத்தை அவர்கள் உருவாக்குகின்றனர்.

நிகழ்வுகளை அறிக்கை செய்வதில் வளர்ச்சியடைந்துள்ளதால் RT பிரபலமாகியுள்ளது என்பது இந்த இரு கட்டுரைகளிலும் தவிர்க்கப்பட்டுள்ளது உண்மைதான்.

"கிரெம்ளின் பொதுவாக அதன் பார்வையை ஊக்குவிக்க ஆர்வமாக இருக்கும் விடயங்களைத் தேடுகிறது, அதாவது, சிரியாவில் அமெரிக்கத் தலையீடு, உக்ரேனிய உள்நாட்டுப் போர். போன்ற தலைப்புகள் பெரும்பாலும் RT வீடியோக்களை சிறந்த முடிவுகளில் ஒன்றாக மாற்றி விடும்" என்று டைம்ஸ் கட்டுரை குற்றம்சாட்டுகிறது. நிச்சயமாக, RT வீடியோக்கள் உட்பட, எதிர்க்கும் கோணத்திலான கருத்துக்களை இணையதளத்தில் தேடுவதற்கு முன்னணி பார்வையாளர்கள் அமெரிக்க பிரதான ஊடகங்களைச் சார்ந்திருப்பது மிக வெளிப்படையானது என்ற வகையில் இது வெளியுறவு கொள்கையின் முக்கிய விடயங்களைச் சார்ந்துள்ளது.

கடந்த மாதம் யூடியூப், "நிலையான நெறிமுறை மேம்படுத்தல்" என அழைக்கப்படுவதன் ஒரு கூறாக, தனது "விருப்பமான" சேனல்களின் பட்டியலில் இருந்து RT ஐ விலக்கி அதற்கு எதிரான முதல் வெளிப்படையான முகவர்களாக" பதிவு செய்ய நிர்பந்திக்கப்படுவார்களோ என்ற அச்சத்திற்கு இட்டுச்சென்றது.

RT க்கு எதிரான கோரிக்கைகளின் அபத்தத்தை அடிக்கோடிட்டுக் காட்டும் ஒரு அறிக்கையில், வோல் ஸ்ட்ரீட் பத்திரிகை, "இங்கிலாந்தின் BBC அல்லது அமெரிக்காவின் Radio Free Europe போன்ற, ஏனைய அரசாங்க நிதியளிப்பு பெறும் செய்தி ஊடக நிறுவனங்கள் போலல்லாமல், RT, மேற்கத்திய நிறுவனங்கள் மற்றும் ஜனநாயகங்களை கீழறுப்பதற்கான ஒரு இலக்குடன் மிக வெளிப்படையாக அரசியல் சார்ந்துள்ளது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்" என குறிப்பிடுகிறது. சோவியத் பிளாக்கை இலக்காகக் கொண்ட கம்யூனிச எதிர்ப்பு பிரச்சாரத்தின் ஆதாரமாக நிறுவப்பட்ட Radio Free Europe ஐ காட்டிலும் RT எப்படி "மிக வெளிப்படையாக அரசியல் சார்ந்ததாகும்" என்று ஒருபோதும் விளக்கப்படவில்லை.

வார்னரோ அல்லது டைம்ஸோ அல்லது எந்தவொரு பத்திரிகையோ, RT வெளியிட்ட எந்தவொரு அறிக்கையும் மறுப்பிற்கு இடமின்றி தவறானது என்பதைக் காட்ட எந்த முயற்சியும் செய்யவில்லை. மாறாக,




நடவடிக்கையை எடுத்துள்ளது.

RT இன் தலைமை துணை ஆசிரியர் கிரில் கர்னோவிச்—வலுவா, இந்த நடவடிக்கை "அமெரிக்க சந்தையிலிருந்து ஒட்டுமொத்தமாக எங்களது சேனலை வெளியேற்றுவதற்கு எந்தவொரு வகையிலாவது சாத்தியமாக்கும் ஒருங்கிணைந்த முயற்சியில், அனைத்து ஸிஜி பங்குதாரர்களுக்கும் உறவுகளுக்கும் அதிகரித்தளவில் பொருந்தக்கூடிய முன்என்றுமிருந்திராத அரசியல் அழுத்தத்தை குறித்து பேசுகிறது" என்று டைம்ஸ் பத்திரிகைக்கு தெரிவித்தார்.

வோல் ஸ்ட்ரீட் ஜேர்னலுக்கு விடுத்த தனி அறிக்கை ஒன்றில், RT குறிப்பிட்டதாவது, "தகவல் பற்றியதில் ஏகபோகத்தை இழப்பதாய் ஸ்தாபனத்தின் அச்சத்திற்கு நடைமுறையில் அனைத்து செய்தி அமைப்புக்களாலும் பேசப்பட்ட அதன் ஏதோ ஒரு உள்ளடக்கத்தை RT இன் சமூக ஊடகம் விளம்பரம் செய்தல்போல அத்தகைய மனக் கிளர்ச்சியற்ற நடவடிக்கைகளைச் சுற்றி ஒரு வெறி நிலவுகிறது, மற்றும் அமெரிக்க சந்தையிலிருந்து RT ஐ வெளியேற்றும் ஒருங்கிணைந்த முயற்சியையும் காட்டிக்கொடுக்கிறது"

கடந்த மாதம், அமெரிக்காவுடன் ஒரு "வெளிநாட்டு முகவராக" இணைந்து கொண்ட RT இன் பதிவை அமெரிக்க நீதித்துறை கோரியமையானது, அந்த சேனலுடன் பணியாற்றும் சுயாதீனமான பத்திரிகையாளர்கள் சிலரை, அவர்களும் "வெளிநாட்டு

ரஷ்ய அரசாங்கத்துடனான அதன் இணைப்பின் காரணமாக அந்தச் செய்தி வெளியீட்டு நிறுவனத்தை சட்டவிரோதமானது என்று அவர்கள் முத்திரைகுத்தவே முனைகின்றனர்.

இருப்பினும், அவர்களது உண்மையான இலக்கு ரஷ்யா அல்ல, உள்நாட்டில் தான் அரசியல் எதிர்ப்பு உள்ளது. இந்த காட்சிகளுக்குப் பின்னால், இடதுசாரி, போர் எதிர்ப்பு மற்றும் முற்போக்கு வலைத் தளங்களுக்கான தேடல் நெரிசலில் 55 சதவிகிதத்தை வீழ்த்தும் வகையில் கூகுள், "அதிகாரபூர்வ" உள்ளடக்கத்தை மேற்பார்வையிடுவதாக அதன் நெறிமுறைகளில் ஏற்கனவே மாற்றங்களை செயல்படுத்தியுள்ளது. உலக சோசலிச வலைத் தளம் மட்டும் தான் அதன் தேடல் நெரிசலில் 74 சதவிகிதத்திற்கும் மேலான வீழ்ச்சியினைக் கொண்டு மிக கடுமையான இலக்காக இருந்து வருகிறது.

கடந்த வாரம், கூகுள் செய்திகளுக்கான ஒரு சமீபத்திய புதுப்பிப்பு, உலக சோசலிச வலைத் தளத்தின் கட்டுரைகளையும், அத்துடன் பிற முக்கிய சுயாதீனமான பத்திரிகையாளர்கள் எழுதிய கட்டுரைகளையும் சேர்த்து கிட்டத்தட்ட முற்றிலும் ஒதுக்கியுள்ளது என்று உலக சோசலிச வலைத் தளம் தெரிவித்துள்ளது.

வெளியீடாகவும்,' மற்றும் உலகம் முழுவதிலுமான ரஷ்யாவின் தகவல் போர் நடவடிக்கைகளின் ஒரு முக்கிய செயற்பாட்டாளராகவும்" செயல்படுவதாக RT ஐ டைம்ஸ் பத்திரிகை விவரிக்கிறது.

"யூடியூபின் தேடல் முடிவுகளில் ஸிஜி க்கு இருக்கும் முக்கிய முன்னிலை," என்பது "உலகெங்கிலும் உள்ள எந்தவொரு செய்தி அமைப்பினது மிகப்பெரிய அளவிலான இணையவழி பார்வையாளர்களையும்" அதன்வசம் இழுக்க அனுமதிக்கிறதென இந்தக் கட்டுரை குறைகூறுகிறது.

இது, இணையதளத்தில் அரசியல் எதிர்ப்பிற்கு எதிரான ஜனநாயகவாதிகளின் நவ—மெக்கார்த்தியிச சதிவேட்டையை வென்ற வெர்ஜீனியா ஜனநாயக செனட்டரான மார்க் வார்னரை மேற்கோளிட்டுக் காட்டுகின்றது: "ஒரு நீண்டகால, அடுத்த தலைமுறைக்கான சவாலை பிரதிநிதித்துவம் செய்யும் எந்தவொரு தவறான தகவல் பிரச்சாரத்திற்கும், அது ரஷ்யாவினது அல்லது வேறொன்றினது எதுவானாலும் சரி, யூடியூப் ஒரு இலக்கு நிறைந்த சூழலாக உள்ளது."

இப் பத்திரிகை அதன் பங்கிற்கு குற்றம்சாட்டுகிறது, "யூடியூப், பேஸ்புக் மற்றும் ட்விட்டர் காட்சிகளில் காணப்படும் RT இன் பிரபலத்தன்மை,

"யூடியூப் நேரிடையாக தலையீடு செய்வதைத் தீர்மானிக்காமல், அவை [RT] தமது காட்சிகளை தொடரும்" என்று கட்டுரையை நிறைவு செய்யும் ஆய்வாளர் ஒருவரின் கருத்தின் மூலமாக தனது நோக்கங்களை டைம்ஸ் பத்திரிகை முன்னெடுக்கிறது.

வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல், "யூடியூப் மற்றும் பேஸ்புக் இரண்டும் பல வருடங்கள் பழமைவாய்ந்த காட்சிகளை உயிரோட்டமாக வைத்திருக்க உதவுவதன் மூலமாகவும், மேலும் முக்கியபோக்கிற்கு வெளியேயுள்ள செய்தி ஆதாரங்களில் ஆர்வம் காட்டும் பார்வையாளர்களுக்கு RT இன் வீடியோக்களை பரிந்துரைத்தும் RT க்கு ஊக்கமளித்துள்ளது" என்பதாகக் குற்றம்சாட்டுகிறது.

"இந்த பத்திரிகையின் கட்டுரை, வெவ்வேறு ஆய்வாளர்களின் பொழிப்புரை கூறுவது போல் தொழில்நுட்ப நிறுவனங்கள், "அதன் உள்ளடக்கத்தை ரஷ்ய பிரச்சாரமாக முத்திரைகுத்த வேண்டும்" என்பது போன்ற மேற்கோள்களுடன் முடிவடைகிறது, மேலும், "RT கதைகளை உள்ளடக்கி கூகுள் செய்திகளும், இந்த தளத்தை வாசகர்களுடன் சட்டபூர்வமானதாக்க உதவுகிறது" என்றும் இது குற்றம்சாட்டுகிறது.

அரசாங்க ஸ்தாபக பத்திரிகைகளால் வழமையாக புறக்கணிக்கப்படும்

By Andre Damon

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு - அமைதிக் கொலைகாரன்

நவம்பர் 14: உலக நீரிழிவு தினம்

இன்றைய நவீன யுகத்தில் மனித சமூகத்திற்கு பெரும் சாவலாக மாறியுள்ள நோய் நீரிழிவு (Diabetes). மனிதன் தன் உணவுப் பழக்கவழக்கம் மற்றும் நடத்தைக் கோலம் மூலம் தேடிக் கொள்ளும் நோயே இது. இந்நோயை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்தால் உரிய உணவு மற்றும் நடத்தை கோலத்தைக் கையாண்டு இந்நோயைப் பல வருடங்களுக்கு தாமதப்படுத்திக் கொள்ளலாம் என்பதே மருத்துவ நிபுணர்களின் கருத்து. உலகலாவிய ரீதியில் மெற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் மூலமும் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இருந்தும் பெரும்பாலானவர்கள் இந்நோய் வளர்ச்சியடைந்த பின்னர்தான் மருத்துவ ஆலோசனையை நாடுகின்றனர். இந்நோய்க்கு உரிய முறைப்படி சிகிச்சை அளித்தால் ஆபத்துகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். அத்தோடு நோயைக் கட்டுப்பாட்டிலும் வைத்துக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில் இந்நோய்க்கான நெருக்கடிகள் எற்படத் தொடங்கினால் அவை பெரும் பாதிப்பாகவே அமையும்.

அதன் காரணத்தினால்தான் இந்நோயை இனம் காண்பதை ஊக்குவிப்பதை இம்முறை உலக நீரிழிவு தினம் பிரதான தொனிப்பொருளாகக் கொண்டிருக்கின்றது.

இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு இருவரில் ஒருவர் நீரிழிவு அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதாக நம்பப்படுகின்றது. அதிலும் இந்நாட்டு சனத்தொகையில் 20 வீதத்தினருக்கு அதாவது ஐவரில் ஒருவருக்கு குளுக்கோஸ் அளவு சாதாரண மட்டத்தில் இல்லை. இருந்தும் இதனைப் பெரும்பாலானவர்கள் அறியாதுள்ளனர். இந்நோயை அறிந்து கொள்ளாதிருப்பது என்பது நோய்க்கு சிகிச்சை பெறாதிருப்பதையே குறிக்கும். இதன் விளைவாக இந்நோய்க்குள்ளாகி இருப்பவர் அறியாத நிலையிலேயே அவரது அவயவங்கள் நாளுக்கு நாள் பாதிக்கப்படுகின்றன.

பொதுவாக குருதியில் குளுக்கோஸ் மட்டம் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தும் பணியை இன்சுலின் ஹோர்மோன் மேற்கொண்டு வருகின்றது. இந்த ஹோர்மோனை சதை சுரக்கின்றது. இந்த இன்சுலின் குருதியில் அதிகரித்து காணப்படும் குளுக்கோஸை ஈரலிலும், தசையிலும் படிய வைக்கும். அதனால் ஒருவர் உண்ணும் உணவில் காணப்படும் காபோஹைதரேட்டுகளிலுள்ள மேலதிக குளுக்கோஸ் உடலுக்கு தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தவதற்காக இன்சுலின் மூலம் சேமிக்கப்படுகின்றது. அதாவது ஒருவர் சாப்பிடாத நேரத்தில் அவரது உடலுக்குத் தேவையான அளவு குளுக்கோஸ் இதனூடாக வழங்கப்பட்டு உடலின் சக்தி பேணப்படுகின்றது.

அதனால் சாதாரண உடலாரோக்கியம் கொண்ட ஒருவர் உணவு உண்பதோடு சேர்த்து உடலில் குளுக்கோஸின் அளவு அதிகரிக்குமாயின் மறுகணமே நிழல் போன்று இன்சுலின் சுரக்கும். அதன் ஊடாக குருதியில் குளுக்கோஸின் மட்டம் சீரமைக்கப்படுகின்றது. ஆனால் நீரிழிவு நோயாளர்களுக்கு இன்சுலின் பணி இவ்வாறு சீராக இடம்பெறாது. அதனால் இந்நோயாளர்கள் உரிய சிகிச்சையைப் பெற வேண்டும்.

நீரிழிவு நோயில் இருவகை உள்ளது. அவற்றில் ஒன்று சிறுவர்களுக்கு ஏற்படும் முதல் வகை நீரிழிவு. மற்றையது வளர்ந்தவர்களுக்கு எற்படக் கூடிய இரண்டாம் வகை நீரிழிவு. இரண்டாம் வகைக்கு உள்ளாகின்றவர்களிடம் போதியளவில் இன்சுலின் காணப்பட்டாலும் அவை உரிய முறையில் செயற்படாததன் விளைவாக இந்நோய் தோற்றம் பெறுகின்றது.

## பாதிப்புக்கள்:

அதேநேரம் ஒருவரின் குருதியில் நீண்ட காலம் குளுக்கோஸ் அதிகரித்துக் காணப்படுமாயின் உடலில் எல்லாவித நெருக்கடிகளும் தோற்றம் பெறும். குறிப்பாக கண்கள், சிறுநீரகம், நரம்புத் தொகுதி உள்ளிட்ட அவயவங்களிலும் பாதிப்புகள் ஏற்படும். அதனால் மனிதனின் அவயவக் கட்டமைப்பைப் பாதிக்கும் நோய் என்றும் இந்நோய் அழைக்கப்படுகின்றது.

குறிப்பாக இந்நோய் ஒருவரின் கண்ணைப் பாதிக்குமாயின், அவரது கண்ணின் இரத்த நாடி பாதிக்கப்படும். அதனால் கண்ணினுள் இரத்தக் கசிவு, கொலஸ்ரோல் படிவு என்பன இடம்பெறுவதோடு கண்பார்வைக்கான சீரான இரத்தோட்டமும் குறைவடையும். சில சமயங்களில் அதிக இரத்தக் கசிவு கூட ஏற்படலாம். அப்படியாயின் கண் பார்வையே பாதிக்கப்படும்.

மேலும் இந்நோய்க்கு உள்ளானவர்களின் சிறுநீரகத்தில் சிறுநீரை வெளியேற்றும் பகுதி பாதிக்கப் படுமாயின் புரதம் சிறுநீரில் அதிகளவில் வெளியேறத் தொடங்கும். இதனை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்தால் சிறுநீரகம் பாதிக்கப்படுவதைக் குறைக்கவும், நீரிழிவு கட்டுப்பாட்டை நீடிக்கவும் முடியும். இதற்கான விஷேட சிகிச்சைகளும் புழக்கத்திலுள்ளன. இருந்தும் சிகிச்சை பெறத் தவறினால் குருதி மாற்றீடு அல்லது சிறுநீரக மாற்று சிகிச்சைக்கே செல்ல நேரிடும்.

இந்நோய் காரணமாக நரம்புத் தொகுதி பாதிக்கப்படுமாயின் தம்மை அறியாமலேயே கால்களில் காயங்கள் ஏற்படலாம். இக்காயங்கள் குணமடைவதும் தாமதமடையும். இதற்கு பல காரணங்கள் உள்ளன. அவற்றில் நோயெதிர்ப்பு சக்தி பலவீனமடைவதும், கால்களுக்கான இரத்தவோட்டம் குறைவடைவதும் முக்கிய காரணங்களாக விளங்குகின்றன. அதனால் காலைக் கூட இழக்க நேரிடும்.

அதேநேரம் பெரிய இரத்த நாடிகள் பாதிப்படையும் போது இரத்த நாளங்களில் இரத்தக் கட்டிகள் ஏற்பட்டு இதயத்தின் ஒரு பகுதியே செயலிழக்கலாம். இந்த இரத்தக்கட்டி மூளைக்கான இரத்த நாடியில் ஏற்படுமாயின் அது பக்கவாதத்தைக் கூட தோற்றுவிக்கலாம்.



இந்நாட்டு தரவுகளின்படி இளம் பராயத்தினரிலும் நீரிழிவு அவதானிக்கப் படுகின்றது. இவர்களில் 23 வீதமான ஆண், பெண் இருபாலாரிலும் பாலியல் வீரியத்தில் ஏற்றத்தாழ்வுகளை அவதானிக்கக் கூடியதாக உள்ளதாக மருத்துவ நிபுணர் பிரசாத் கட்டுலந்த சுட்டிக்காட்டினார்.

நீரிழிவை முன்கூட்டியே இனம் காணல்;

இவ்வாறு பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய இந்நோய் தோற்றம் பெற முன்னர் சில அறிகுறிகள் வெளிப்படலாம். அவற்றில் அதிக தாகம், அதிகம் சிறுநீர் வெளியேறல், குறிப்பாக இரவில் அடிக்கடி சிறுநீர் வெளியேறல். பொது இடங்களில் கழிக்கப்படும் சிறுநீரில் எறும்பு உள்ளிட்ட சிறு பூச்சிகள் மொய்த்தல், உடல் திடீரென மெலிவடைதல், தொடரான களைப்பு, ஆண் பெண்களின் பாலுறுப்புகளில் பங்கசு தொற்று, பாலியல் பலவீனம் போன்றவாறான அறிகுறிகளை அவதானிக்கக் கூடியதாக இருக்கும். இவ்வாறான அறிகுறிகள் தென்பட்டால் தாமதியாது மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்.

இந்நோயானது கடந்த 20, 30 வருடங்களில்தான் மிகவும் வேகமாக வளர்ச்சியடைந்துள்ளது. மனிதனின் மரபணுவில் எவ்வித மாற்றமும் ஏற்படாமல் இந்நோய் இவ்வாறு தீவிரமாகப் பரவுவதற்கு வாழ்க்கையமைப்பில் ஏற்பட்டிருக்கும் மாற்றமே பிரதான காரணமாகும். 2006 ஆம் ஆண்டின் இந்நாட்டு பதிவுகளை எடுத்துப் பார்த்தால் ஒவ்வொரு பத்து பேரிலும் ஒருவருக்கு நீரிழிவு காணப்பட்டது. இது கடந்த பத்தாண்டு காலப் பகுதியில் மேலும் அதிகரித்திருப்பதையே பிந்திய பதிவுகள் வெளிப்படுத்துகின்றன. அதிலும் நகரப் பிரதேசங்களில் நிலைமை மிக மோசமாகக் காணப்படுகின்ற போதிலும் கிராமப் பிரதேசங்களிலும் இந்நோய் பெரிதும் வியாபித்துள்ளது.

**பச்சை நிறப் பழங்களையும் மரக்கறிகளையும் அதிகம் பிரதான உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். கிடைக்கப் பெறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உடல் பயிற்சியில் ஈடுபட்டு உடல் நிறையைப் பேணவும் வேண்டும்.**

## அச்சுறுத்தல் மிக்கவர்கள்:

அதேநேரம் தென்னாசிய பிராந்தியத்தைச் சேர்ந்தவர்கள் என்றவகையில் இலங்கையர் உடல் பருமன் தொடர்பான நீரிழிவு குறித்து மிக அவதானமாகவும் விழிப்பாகவும் இருக்க வேண்டும். அதனால் ஒவ்வொருவரும் தமது உடல் பருமனை உரிய முறையில் பேணுவதில் கவனம் செலுத்த வேண்டும். அதன் மூலம் நீரிழிவு அச்சுறுத்தலைக் குறைத்துக் கொள்ளலாம். அத்தோடு உடல் உழைப்பில் அதிகம் ஈடுபடுபவர்களை விடவும் ஈடுபடாதவர்களுக்கு நீரிழிவு அச்சுறுத்தல் இரு மடங்கு அதிகமாகும். அதனால் உடல் உழைப்பை அதிகரிக்கும் செயற்பாடுகளில் அதிகம் ஈடுபட வேண்டும். அதற்கு உடல் பயிற்சி மிகவும் சிறந்தது.

ஆகவே நவீன சமூக அமைப்பில் உணவு மற்றும் நடத்தைப் பழக்கத்தை அமைத்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும். அதாவது எமது உடலுக்குத் தேவையானயளவு உணவை மாத்திரம் உண்பதற்கு எம்மை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.அதாவது உடலுக்கு சக்தி அளிக்கக் கூடிய உணவே முக்கியமானது. அடிக்கடி உண்பதைத் தவிர்த்துக் கொள்வதோடு அவ்வாறு உண்ண வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டால் நீரைப் பருகுவதுதான் சிறந்தது.




அத்தோடு பச்சை நிறப் பழங்களையும் மரக்கறிகளையும் அதிகம் பிரதான உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். கிடைக்கப் பெறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உடல் பயிற்சியில் ஈடுபட்டு உடல் நிறையைப் பேணவும் வேண்டும். அத்தோடு விரைவான உணவுகளில் சீனியும் கொழுப்பும் அதிகம் காணப்படுவதால் அவற்றைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறான பழக்கங்களின் ஊடாக நீரிழிவைத் தவிர்த்தோ கட்டுப்படுத்தியோ ஆரோக்கிய வாழ்வைப் பேணிக் கொள்ள முடியும்.

— மர்லின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BE SURE TO TASTE YOUR WORDS BEFORE YOU SPIT THEM OUT

ஒருவரையொருவர் ஏன் காயப் படுத்துகின்றோம். சில சமயங்களில் அர்த்தமற்ற விடயங்களுக்காக இன்னொருவர் மனதை காயப்படுத்துவதில் எமது நேரம், ஆற்றல் போன்றவற்றை தேவையின்றி விரயமாக்குகிறோம்போல் தெரிகிறது. உடைந்த காதல் உறவுகளில், பழிவாங்கும் செயல்பாடுகளில் இந்தக் காயப்படுத்தல் நிறையவே காணப்படுகிறது.

கோபத்தையும் பழிவாங்கலையும் சுமந்து செல்லும் வாழ்க்கை மேலும் தீமையான அனுபவங்களையே விட்டுச்செல்லும். பழிவாங்கல் உணர்வுகள் நம் உடலையும் மனதையும் எவ்வளவு நஞ்சமடையச் செய்கின்றன என்பதை பெரும்பாலானோர் உணர்வதில்லை. இப்படிப்பட்ட குழப்பநிலையில் உள்ளவர்களிடமிருந்து உருவாகும் எதிர்மறை ஆற்றல் இவர்களைவிட்டு மற்றவர்களை விலகிச் செல்ல வைக்கிறது.


இன்னுமொருவரை காயப்படுத்தும்போது அல்லது எதிராகச் சதி செய்யும்போது ஒருவிதமான குரூர மகிழ்ச்சியை உணர முடியும் என்ற ஒரு சிந்தனை முறைமை உண்டு. அப்படிப்பட்டவர்கள் யாரும் நேசிக்கமுடியாத நிரந்தரமான எரிச்சலூட்டும் நபராகத் தம்மைத்தாமே மாற்றிக்கொள்கிறார்கள் என்பதே உண்மை.

உலகளாவிய பார்வையினால் ஏற்படுகின்ற உணர்வுகளுக்கு நாம் பொறுப்பேற்க முடியாது. சில கட்டுப்படுத்த முடியாத விடயங்களுக்கும் நாம் பொறுப்பேற்க முடியாது. ஆனால் ஒவ்வொருவரும் தங்கள் சொந்த உணர்வுகளைத் தமக்கு சொந்தமானதாக வைத்திருக்கிறார்கள். அவற்றிற்குத் தீங்கு விளைவிக்க யாருக்கும் உரிமை கிடையாது.

எச்சந்தர்ப்பத்திலும் மற்றவர்களைக் காயப்படுத்தி செய்யப்படுகின்ற அதிரடிச் செயல்கள் செயலற்றதாகவே இருக்கும். சில நேரங்களில் காயம் அடைந்தாலும் பரவாயில்லை நல்லது நடக்கவேண்டும் என்ற எண்ணத்தில் சிலரைக் காயப்படுத்துவதுமுண்டு. அப்படிப்பட்ட காயங்கள் ஒருவரை முடமாக்குவதில்லை என்றாலும் அவைகூட மென்மையாக இருப்பதே நன்மை பயக்கும். எவ்வளவுதான் நல்ல காரணத்திற்காக ஒருவரைக் காயப்படுத்தினாலும் அவை எமது வாழ்க்கையின் பெறுமதியற்ற நிமிடங்களே.

கவலைப்படுகின்ற ஒரு நபரை யாரும் காயப்படுத்த விரும்புவதில்லை. எமது வார்த்தைகளோ செயல்களோ ஒருவரைக் காயப்படுத்தும்போது அதனால் பாதிக்கப்படுபவர்கள் அவற்றை ஏற்றுக்கொள்வது அவ்வளவு எளிதல்ல. அனைவரும் தவறு செய்வது சகஜம் என்ற போர்வையில் வலிகளைப் பொதுமைப்படுத்தவோ, குறைத்து மதிப்பிடவோ முடியாது. மிகவும் உணர்வுபூர்வமாக சார்ந்திருக்கும் ஒருவரை காயப்படுத்தும்போது ஓர் நிராதரவான உணர்வு ஏற்படும். அது மிகவும் கொடியது.

மற்றயவர்களின் உணர்வுகளை முழுமையாக அலட்சியப்படுத்தி தமது வாழ்க்கையை அனுபவிக்கின்ற தன்மையும் தமது வெளிப்புறமான வளர்ச்சியை ஆதரிக்கின்ற உள்நோக்கமும் உள்ள சமநிலை தவறியவர்கள், தாம் மற்றவர்களைக் காயப்படுவதை அறிந்தாலும் அறியாதவர்கள்போல் தான் இருப்பார்கள். ஓர் நம்பிக்கையை நோகடித்து இவர்களால் எப்படிக் கவலைப்படாமல் இருக்க முடிகிறது? மக்கள் பொதுவாக மற்றவர்களைப்பற்றி கவலைப்படுவதை அதிகம் விரும்புவதில்லைப்போலும்.




ஒருவரைக் காயப்படுத்தி மனதில் ஒரு சில பகுதியில் வலியை ஏற்படுத்தி அதைப்பற்றி எந்தவிதமான அக்கறையும் காட்டாது செல்கின்ற மனிதர்களை யாரும் மதிப்பது கிடையாது. அவர்கள் எவ்வளவுதான் திறமைசாலிகளாக இருப்பினும் அந்த உறவிற்கு எந்த அர்த்தமும் கிடையாது. அதற்காக செலவிடுகின்ற நேரத்தை வேறு விதமாக முதலீடு செய்வதே நல்லது. தவறான நபருடன் செலவிடுகின்ற குறைவான நேரத்தைக்கூட சரியானவர்களுடன் முறையாகச் செலவிடுவதே சரியான தேர்வு.

உறவுகள் நிரந்தரமற்றவை என்றாலும் உடைந்து போவது மீண்டும் ஒருபோதும் சரியாகப் பொருந்தாது. எம்மிடம் பல சிக்கல்கள் நிறைந்திருக்கலாம் ஆனால் சுயநலமாக இருப்பது அல்லது பொதுவாகத் தன்னைத் தானே கருத்தில் கொண்டு செயல்படுவது, சுய பாதுகாப்பு அல்லது சுய மதிப்புப்பற்றியே சிந்திப்பது போன்றவை இவற்றிற்கான காரணங்களில் சிலவாக இருக்கலாம். எதுவென்றாலும் எமது செயல்பாடுகள் மற்றவர்களுக்கு எப்படிப்பட்ட விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை சுயபரிசோதனை செய்து பார்ப்பதே எப்போதும் மதிப்புள்ளதாக இருக்கும்.

சிலர் ஏதோவொரு காரணத்திற்காகவும், இன்னும் சிலர் எல்லாவற்றிற்காகவும் ஓர் உணர்ச்சிப் பொழுதுபோக்காக மற்றவர்களைக் காயப்படுத்திக்கொண்டே போகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் சில ஆண்டுகள் கழித்து தமது நடத்தை குறித்து வருந்துவார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

துரதிர்ஷ்டவசமாக, எமது உணர்ச்சிகளை சரியாகக் கையாளத் தெரியாமல் மேலும் நிராகரிக்கப்பட்டு இறுதியில் மற்றவர்களுக்கு ஏற்படுத்திய வலிகளுக்கு நாமே வருத்தப்பட்டு தனிமைப்படுவதைவிட அனுபவங்களினுடாக வாழ்க்கையைக் கற்றுத் தெளியலாமே? வாழ்க்கையை அனுபவங்களினூடாகக் கற்று வாழவும் ஓர் இயற்கைத் திறன் வேண்டும் போல் தெரிகிறது.

**-சௌந்தரி கணேசன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org